பாடம் 1
இரட்சிக்கப்பட்டோரின் பிரச்சனைகள்

PART B

ஓரிரு வார்த்தைகளில் விடையளி (2 marks)

1.நாம் எப்போது உண்மையாக இரட்சிக்கப்படுகிறோம்?
நூாம் மனந்திரும்பி, நமது பாவங்களை அறிக்கைசெய்து, நம் இருதயங்களில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது உண்மையாகவே இரட்சிக்கப்படுகிறோம்.

1.எதற்கு ஏற்றாற்போல் லௌகீகம் பல நிலவரங்களிலும் பல விதங்களிலும் நம்மைச் சந்திக்கிறது?
நமது வயதுக்கும் நமது ஜீவியத்தின் நிலவரத்திற்கும் ஏற்றாற்போல்

2.நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேறிச் செல்லுகையில் நம்மை எதிர்கொண்டுவரும் பிரச்சனை எது?
லௌகீகம்

3.கர்த்தராகிய இயேசு வனாந்தரத்தில் எந்தப் பிரச்சனையைச் சந்திக்க வேண்டியிருந்தது?
லௌகீகம்

4.நாம் எவற்றை வெறுக்க வேண்டுமென்று தீத்து நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது?
அவபக்தி, லௌகீக இச்கை (தீத்து 2:12)

5.நாம் இவ்வுலகத்திலே எப்படி ஜீவனம் பண்ண வேண்டும்?
தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் (தீத்து 2:12)

6. நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியம் என்று அப்.பவுல் எந்த நிருபத்தில் கூறுகிறார்?
தீத்து (தீத்து 2:13)

7.மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கு எதிர்பார்த்துக்கொண்டிருக்க வேண்டும் என்று கூறிய அப்போஸ்தலன் யார்?
அப்.பவுல் (தீத்து 2:13)

இன்றைய வாலிபரின் உணர்ச்சிகளை தூண்டிவிட்டு அவர்களை பரவசமடையச் செய்கிற காரியங்கள் யாவை?
துற்கால நாகரீகங்கள், நண்பர்கள், கேளிக்கைகள், திரைப்படங்கள், பாலின உணர்ச்சிகள், நகைப்பூட்டும் கதைகள், காட்சிகள், அழகுபடுத்த முகத்தில் பூசிக்கொள்ளும் பவுடர், ஸ்நோ போன்ற பொருட்கள், நடனங்கள், போதையூட்டும் மருந்துகள், மதுபானங்கள், ஆபாசமான கதை புத்தகங்கள்.

எல்லைக்கோடு எவ்விரண்டிற்கும் வைக்கப்படவேண்டும்?
தேவனுடைய சபைக்கும் உலகத்துக்கும், தேவனுடைய பிள்ளைகளுக்கும் உலக மக்களுக்கும் இடையில் ஒரு எல்லைக்கோடு இருக்கவேண்டும்.

பிரச்சனைகளை சந்திக்கும் வாலிபருக்கு எது தேவையாயிருக்கிறது?
தேவனுடைய வசனத்திலிருந்து அளிக்கப்படும் ஆரோக்கியமான புத்திமதிகள், அனுபவம் மிக்க கிறிஸ்தவர்கள் இரக்கத்துடனும் அனுதாபத்துடனும் செய்யும் உதவியும் தேவை.

இப்பிரபஞ்சத்தின் தேவன் யார்?
பிசாசு

நித்திய அழிவுக்கு வழி நடத்தும் மாயையை தெரிந்துகொள்ளுகிறவன் எப்படிபட்டவனாயிருக்கிறான்?
அவனுடைய இலக்கு பரலோகம் அல்ல. அவனுக்கும் நித்திய ஜீவன், மெய்யான சந்தோஸம், சமாதானம் இல்லை. ஆத்துமா செத்து, மனது குருடாக்கப்பட்டு, கேடான எண்ணங்களால் அலைக்கழிக்ப்பட்டு, மிருகத்தனமான சுபாவத்தில் ஜீவிக்கிறான்.

PART D

1.உண்மையாய் இரட்சிக்கபட்ட கிறிஸ்தவன் எவ்வாறு ஜீவியத்தை காத்துக்கொண்டு உலகத்தால் கறைப்படாமல் ஜீவிக்கிறான்?
உண்மையாய் இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவன் மறுபடியும் பிறந்தவனாயிருக்கிறான். அவன் தேவசமூகத்தில் காத்திருந்து பரிசுத்த ஆவியை பெற்று ஆவியானவரால் வழிநடத்தப்பட்டு, தேவனுடைய சித்தம் செய்வதற்காக தன்னைத்தானே பிரதிஷ்டை செய்கிறான். அவன் ஒரு புதிய ஜீவியமும், புதிய இலக்கும், புதிய குறிக்கோளும் உயரிய நோக்கமும் உடையவனாயிருக்கிறான். தன் ஜீவியத்தின் பிரமாணமாகிய தேவனுடைய வசனத்தின் மூலமாகவே அவன் உலகத்தை பார்க்கிறான். ஆகையால் தன் ஆவிக்குரிய ஜீவியத்தின் வளர்ச்சியை காத்துக்கொள்ளுவதற்காகவும், தன் தரிசனத்தைக் தெளிவானதாக வைத்துக்கொள்வதற்காகவும், தன்னுடைய எஜமானருக்கு உண்மையாயும் பரிசுத்தமாயும் சேவை செய்வதற்காகவும் அவன் நாளுக்கு நாள் உலகத்தால் கறைப்படாமல் ஜீவிக்கிறான்

2.ஒரு குடும்பத்தில் ஒரு பெண் இரட்சிக்கட்டபட்டால் அவளுடைய புதிய தீரமானங்களையும் ஜீவியத்தின் மாறுதலையும் அவளுடைய குடும்பத்தினர் அவள் நிமித்தம் ஏமாற்றமடைந்து வருந்துகின்றனர்? ஜீவியத்தின் புதிய தீர்மானங்கள் என்று கூறப்பட்டவைகளை தொகுத்து எழுது
ஒரு திரைப்படம் அல்லது ஒரு தொலைக்காட்சியை பார்ப்பதைவிட ஒரு வேதபாட வகுப்பில் பங்கு பெறுவதை அவள் தெரிந்து கொள்ளுவாள். உலகப்பிரகாரமான தன் சிநேகிதிகளின் ஐக்கியத்தை காட்டிலும் வாலிபருக்காக நடத்தப்படும் ஆவிக்குரிய கூட்டங்களில் ஐக்கியப்படுவதை மேம்பட்டதென அவள் கருதுவாள். ஒரு ஞாயிற்றுக்கிழமை பகலில் பொழுது போக்காக ஒரு வாகனத்தில் பல இடங்களுக்குச் செல்வதையோ ஒரு உல்லாச பிரயாணம் செல்வதையோ விரும்பாமல் அதற்கு பதிலாக ஒரு ஜெபக்கூட்டத்தையுமே அவள் விரும்புவாள்

பாடம் 2

லௌகீகம் என்றால் என்ன

PART B

1.என் கண்கள் இச்சித்தவைகளில் ஒன்றையும் நான் அவைகளுக்குத் தடைபண்ணவில்லை என்று சொன்னது யார்?
பிரசங்கி/ சாலொமோன் (பிர 2:10) பக்கம் 9

2.இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து கர்த்தரை விட்டு விலகிப்போனவன் யார்?
தேமா (II தீமோ 4:10) பக்கம் 11

3.உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோனாலும் என்றைக்கும் நிலைத்திருப்பவன் யார்?
தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவன் (I யோவான் 2:16)

4.உலகத்தின் அசுத்தங்கள் இச்சையினால் உலகத்திலுண்டான கேடு ஆகியவற்றைக் குறித்து எழுதியது யார்?
அப்.பேதுரு (II பேதுரு 2:20, 1:4) பக்கம் 8

5.தங்களில் தேவவசனம் நிலைத்திருக்கிற அனுபவமுள்ளவர்கள் தங்களுக்குள் பிதாவின் அன்பை உடையவர்களும் பொல்லாங்கனை ஜெயிக்கிறார்கள் என்று யாருடைய நிருபத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ளலாம்?
அப்.யோவான் (I போவா 2:14,15) பக்கம் 11

6.உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் என்று குறிப்பிட்ட அப்போஸ்தலன் யார்?
அப்.பவுல் (அப் 17:24) பக்கம் 6

7.தேவபக்திக்கும் ஆவிக்குரிய தன்மைக்கும் பரிசுத்தத்திற்கும் விரோதமானது எது?
லௌகீகம் பக்கம் 7

8.லௌகீகத்தைக் கேட்டுக்குப் போகிற விசாலமான வழி என்று அழைத்தது யார்?
இயேசு (மத் 7:13) பக்கம் 7

9.லௌகீகத்தை, ஆகாயத்து அதிகாரப்பிரபுவாகிய சாத்தானால் திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்ட இவ்வுலக வழக்கம் என்று கூறியது யார்?
அப்.பவுல் (எபே 2:2,3) பக்கம் 7

10.நம்முடைய விசுவாசப் பிரமாணம் எது?
தேவனுடைய வசனம் II பேதுரு 1:19, சங் 119:9, II தீமோ 3:16,17 பக்கம் 8

11.வேதவாக்கியங்களெல்லாம் எதினால் அருளப்பட்டிருக்கிறது?
தேவ ஆவியினால் (II தீமோ 3:16:17) பக்கம் 8

12.தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையும் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக இருப்பவை எவை?
தேவனுடைய வசனம் (II தீமோ 3:16) பக்கம் 8

13.உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும் நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது எது?
தேவனுடைய வசனம் (II தீமோ 3:17) பக்கம் 8

14.வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்?
கர்த்தருடைய வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால் (சங்119:9) பக்கம் 8

15.சாபத்தீடானவற்றைக் கண்டு இச்சித்து எடுத்துக்கொண்டதினால் கல்லெறிந்து கொல்லப்பட்டவன் யார்?
ஆகான் (யோசுவா 7:21) பக்கம் 11

16.தன் ஆத்துமாவின் இரட்சிப்பைக் குறித்தோ நித்தியத்தை குறித்தோ எந்தத் தரிசனமும் இராதவனாயிருந்தது யார்?
மதிகேடான ஐசுவரியவான் (லூக் 12:19,20) பக்கம் 11

17.நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினை தீர்ப்படையாதபடி கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம் என்று அப்.பவுல் எந்த நிருபத்தில் எழுதுகிறார்?
I கொரிந்தியர் (I கொரி 11:32) பக்கம் 13

18.உலகத்தின் நியாத்தீர்ப்பைக் குறித்து தீர்க்தரிசனம் உரைத்த தீர்க்கதரிசி யார்?
ஏசாயா (ஏசாயா 24:1-6) பக்கம் 13,14

19.பரலோகராஜ்யத்தில் யார் பிரவேசிப்பார்கள், யார் பிரவேசிக்கமாட்டார்கள் என்று மத் 7:21 ல் கூறப்பட்டுள்ளது ?

பிதாவின் சித்தம் செய்கிறவன், கர்த்தாவே கர்த்தாவே என்று சொல்லுகிறவன் (மத் 7:21) பக்கம் 12

20.அதின் வழியர்யப் பிரவேசிப்பவர்கள் அநேகர் என்று எதைக் குறித்து கூறப்பட்டுள்ளது? கேட்டுக்குப்போகிற விசாலமான வழி மத் 7:13 பக்கம் 7

21.இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்த்தார் என்று யாரைக் குறித்து சொல்லப்பட்டுள்ளது தேவன் (யோவனர் 3:16) பக்கம் 6

22.உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள் என்று கூறியது யார்? யோவானம் (I யோவன் 2:15,16

23.சாத்தானின் மறுபெயர்கள் இரண்டினை பாடதிட்டத்தின் ̇அடிப்படையில் எழுது
இந்த உலகத்தின் அதிபதி, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன், உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு, பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம்.

கீழ்ப்படியாமையின் பிள்ளைகள், கோபாக்கினையின் பிள்ளைகள் பற்றி சொன்ன அப்போஸ்தலன் யார்? வசனம் தருக
பரி.பவுல் எபே 2:2,3

தேவனுடைய நீதியின் அளவுநிலைக்கு எதிரிடையானவையாயிருக்கின்றனவை யாவை?
உலகத்தின் அபிப்பிராயங்கள் ஒழுக்கநெறி தத்துவ ஞானங்கள், மனோவியல், பண்பாடு, கல்வி விஞ்ஞானம், கலை, அசை, கலைநிகழ்ச்சிகள் மற்றும் தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள் முதலிய செய்தி தொடர்புகள், விளையாட்டுப்போட்டிகள் போன்றவை யாவும் தேவனுடைய நீதியின் அளவுநிலைக்கு எதிரிடையானவையாயிருக்கின்றன.

PART D

1.ஒரு மெய் கிறிஸ்தவனின் விசேஷித்ததோர் அடையாளம் ̇தேவசித்தம் செய்தலேயாகும் என்பதை விளக்குக
பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. (மத் 7:21) என்று இயேசு கூறினார். இவ்வுலகத்திற்கு ஒத்த வேஷந்தரிக்கிறவர்கள் பூமிக்குரிய சிந்தையுள்ளவர்களாகிவிடுவார்கள். எனவே இவர்களால் தேவனுடைய பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறிய முடியாது. இவ்வுலகத்தின் காரியங்களில் நாம் வீணாக தலையிடும்போது. நம் ஆவிக்குரிய ஜீவியம் சீர்குலைய ஆரம்பித்து, தேவனை விட்டு நாம் தூரமாக விலகிப்போய், பரிசுத்த ஆவியானவரின் சமூகத்தையும் வல்லமையையும் உண்மையான சந்தோஷத்தையும், சமாதானத்தையும், ஜெயஜீவியத்தையும், முடிவாக நம் இரட்சிப்பையுங்கூட இழந்துபோவோமம். இவ்விதமாய் நம் மனதை குருடாக்கி தன் விருப்பப்படி நம்மைச் சிறையாக்கிக் கொள்கிற சாத்தானுடைய ராஜ்யத்தின் எல்லைக்குள் நாம் அகப்படுவோம். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்.(I யோவான் 2:17) பக்கம் 12

2.சாத்தான் உலகத்தை ஆளுகை செய்கிறான் என்பதை விளக்குக
சாத்தான் ‘இந்த உலகத்தின் ̇அதிபதி’ (யோவா 12:3) ‘இப்பிரபஞ்சத்தின் தேவனானவன்’ (II கொரி 4:4) போன்ற பல பெயர்களால் அழைக்கப்படுகிறான். அவனுக்கு சொந்தமான ‘இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகள் (எபே 6:12) என அழைக்கப்படும் விழுந்துபோன தூதர்களின் சேனை அவனுடன் சேர்ந்து கிரியை செய்கிறது. சாத்தான் ‘உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்று .. சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் (வெளி 12:9) ஆவான் பக்கம் 9

3.வேதாகமத்தில் உலகம் என்ற பதம் மூன்று விதங்களில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை விளக்கு

முதலாவதாக, தேவன் சிருஷ்டித்த இயற்கையான அல்லது வெளிப்படையன உலகம் ‘‘உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் (அப்: 17:24)

இரண்டாவதாக, பூமியில் குடியிருக்கும் மனிதவர்க்கம் தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் (யோவான் 3:16)

மூன்றாவதாக மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகள். இவற்றை குறித்து அப்போஸ்தலாகிய யோவான் உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; என்று எழுதுகிறார் (I யோவான் 2:15,16)

4.மனிதன் தனக்குள் மூன்று மண்டலங்களை உடையவனாக இருக்கிறான்

(i).சரீர சம்பந்தமான ஆசைகள் அல்லது விருப்பங்களின் மண்டலம்

(ii) கற்பனை மண்டலம்

(iii) பூமிக்குரிய ஆசைகளின் மண்டலம். லௌகீகமானது இந்த மூன்று மண்டலங்களினூடாகவும் மனிதனுடைய கவனத்தை ஈர்க்கிறது. ஆத்துமாவை அழிக்கும்படியாக மாம்சம், கண்கள், இருதயம் ஆகியவற்றின் மூலம் இம்மண்டலங்களைப் பிசாசு ஆட்கொள்ளுகிறது. சாத்தான் இம்மண்டலங்களை ஆட்கொள்ளும்போது அதினால் உண்டாகும் விளைவுகள், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகும் (I யோவான் 2:16) பக்கம் 9,10

5.நாம் உலகமாகிய யுத்தக்களத்தின் இருக்கிறோம் என்பதை விவரி?

பாவத்தின் மூலமாகவும் ˙லௌகீகத்தின் மூலமாகவும் நம்மை எதிர்க்கும் ‘இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடு (எபே 6:12) நமக்குப் போராட்டம் உண்டு. கர்த்ராகிய இயேசு தம்முடைய சீஷர்களிடத்தில், ‘நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் நிநேகித்திருக்கும் நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும் நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து ˙கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைகிறது (யோவான் 15:14) என்று கூறினார். தொடர்ந்து நடைபெறும் இந்த யுத்தத்தில் ஒன்று, நாம் லௌகீகத்தை மேற்கெர்ளளுகிறோம். அல்லது லௌகீகம் நம்மை மேற்கொள்ளுகிறது. நாம் உலகத்தை ஜெயிக்க வேண்டும் என்பதே தேவனுடைய வாஞ்சையாகும். தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும் (I யோவான் 5:4) ‘ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான் (வெளி 21:7) உலகத்தோடு சமரசமாகி அதனோட இணங்கிப்போய் உலக ஆசை இச்சைகளும் மற்ற தீமைகளும், தன்னுடைய ஆவி ஆத்துமா, சரீரம் இவற்றை மேற்கொள்ள இடங்கொடுக்கும் ஒரு கிறிஸ்தவன், இப்பிரபஞ்சத்தின் தேவனாகிய பிசாசினால் ஆளப்பட்டு, தோற்கடிக்கப்பட்ட ஒரு ஜீவியம் செய்கிறான். பக்கம் 14

6.லௌகீகம் நாம் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருப்பதற்கு தடையாயிருக்கிறத என்பதை விளக்குக

மனந்திரும்பின ஒருவன் ‘பூமிக்கு உப்பாயிருக்கிறான். சுபாவத்தினால் ‘கோபாக்கினையின் பிள்ளைகளும்’ கீழ்ப்படியாமையின் பிள்ளைகளுமாயிருக்கும், உலகத்தாருக்கு அவன் தெய்வீகக் குணசீலத்தை வெளிப்படுத்துகிறவனாயிருக்கிறான். அன்றியும் பாவத்தினாலும் இருளின் அதிகாரத்தினாலும் மூடப்பட்டிருக்கும் உலகிற்கு அவன் வெளிச்சமாயிருக்கிறான். ஒரு கிறிஸ்தவன் உலகத்தோடு சமரச உடன்படிக்கை செய்து, லௌகீகமானவனாயிருந்தால், மற்றவர்களுக்கு முன்பாக அவனுக்கு நற்சாட்சி இராது. உலகிற்கு எதிராக நிற்க அவனுக்கு எவ்விதத் தைரியமும் இராது. சபையில் அவன் எவ்வித ஊழியத்திற்கும் தகுதியற்றவனாயிருப்பான். எனவே தான் இயேசு ‘இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்’ (மத் 6:23) என்று கூறினார். பக்கம் 12,13

7.லௌகீகத்தை ஜெயித்து. ஒரு மேன்மையான ஜீவியம் செய்யக் கற்றுக்கொள்ள வேணடும் என்பதை விவரி
லௌகீகமானது தேவபக்திக்கும் ஆவிக்குரிய தன்மைக்கும் பரிசுத்தத்திற்கும் விரோதமான ஒன்றாயிருக்கிறது. ஒரு மனுஷனுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியவைகளான ஒழுக்கக்கேடு, ஜென்ம சுபாவம், பொல்லாப்பு ஆகிய யாவற்றையும், லௌகீகமானது சட்டத்தின்படி நியாயமானதென தீர்க்கிறது. எனவே, கர்த்தரை நேசித்து சேவித்து பரலோகத்தின் அனுபவங்களைப் பெற்றுக்கொண்ட ஒரு மெய்க் கிறிஸ்தவன், தனது கிறிஸ்தவ ஜிவியத்தையும் பொறுப்புகளையும் காத்துக்கொண்டு, தான் பெற்றுகொண்ட வெளிச்ச்த்தினால் உலகப்பிரகாரமான ஜனங்களையும் இரட்சிப்புக்கு வழிநடத்தும்படியாக லௌகீகத்தை ஜெயித்து, ஒரு மேன்மையான ஜீவியம் செய்யக் கற்றுக்கொள்ளவேண்டும். பக்கம் 7,8

8.உள்ளான தரிசனமுள்ளவர்களாய், இவ்வுலகத்திற்குரிய மேன்மைகளைக் குப்பையாக எண்ணி, பொல்லாங்கனாகிய பிசாசை ஜெயிக்கிறவர்கள் யார்? பக்கம் 11
தங்களில் தேவ வசனம் நிலைத்திருக்கிற அனுபமுள்ளவர்களும் (I யோவான் 2:14) தங்களுக்குள் பிதாவின் அன்பை உடையவர்களும் (I யோவான் 2:15) உள்ளான தரிசனமுள்ளவர்களாய், இவ்வுலகத்திற்கரிய மேன்மைகளைக் குப்பையாக எண்ணி, பொல்லாங்கனாகிய பிசாசை ஜெயிக்கிறார்கள் (பிலி 3:7,8,11)

PART E

1.லௌகீகம் என்றான் என்ன? லௌகீகம் தேவனுடைய நீதியின் எந்த அளவு நிலைக்கு எதிரிடையானவையாயிருக்கிறது?
லௌகீகம் என்பது, தேவனையும் அவருடைய வார்த்தையையும் அவருடைய ஆளுகையையும் பறக்கணித்து தள்ளிவிட்டு ஜீவிக்கிற ஜனங்கள் உலகத்திலுள்ளவைகளின் பின்னால் போகும்படி சாத்தான் அவர்களை தூண்டிவிடுகிற ஜீவியத்தின் வழிமுறையாகும் இயேசு அதனைக் கேட்டுக்குப் போகிற ‘விசாலமான வழி என்று அழைக்கிறார் அதின் வழியாய் பிரவேசிக்கிறவர்கள் அநேகர் (மத் 7:13) அப்.பவுல் அதனை ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய சாத்தானால் திட்டமிட்டு அழைக்கப்பட்ட இவ்வுலக வழக்கம் என்கிறார். நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றாபடியாகவும் கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப்பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்து கொண்டிர்கள். அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே .. நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்வர்களைபோலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். (எபே 2:2,3) உலகத்தின் அபிப்பிராயங்கள் ஒழுக்கநெறி தத்துவ ஞானங்கள், மனோவியல், பண்பாடு, கல்வி விஞ்ஞானம், கலை, அசை, கலைநிகழ்ச்சிகள் மற்றும் தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள் முதலிய செய்தி தொடர்புகள், விளையாட்டுப்போட்டிகள் போன்றவை யாவும் தேவனுடைய நீதியின் அளவுநிலைக்கு எதிரிடையானவையாயிருக்கின்றன.

2.லௌகீகம் ஆவிக்குதிய தேவனுடைய பிள்ளைகளுக்குள் நுழைந்து அவர்கள் முன்னேறி செல்லவிடாமல் எவ்வாறு வழி தீப்பிவிடுகிறது? ஆதைத் தவிக்க்க அப்.பவுல் கூறும் ஆலோசனை என்ன?
தேவனுடைய பிள்ளைகளில் உலகத்தோடு கைகோர்த்து ஒன்றாய்ச் செல்லுகிறவர்கள் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேறிச் செல்லாமல் ஓரிடத்தில தங்கிவிடுகிற ஒரு நிலைக்கு விரைவில் வந்து விடுவார்கள். அவர்கள் முடிவில் பின்மாற்றமடைவார்கள். லௌகீகம் சிறிது சிறிதாய் அவர்குள்குள் நுழைந்து அவர்களுடைய மனதைக் குருடாக்கி ˙அவர்களுடைய ஆவிக்குரிய வைராக்கியத்தை அழித்து. அவர்களது கருத்தையும் ஆர்வத்தையும் ஆவிக்குரிய காரியங்களிலிருந்து விலக்கி வேறு வழியில் திருப்பிவிடும். எனவே அப்.பவுல் நீங்கள் இந்தப்பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் என்று கூறுகிறார் (ரோமர் 12:2)

3.உலகத்தின் நியாயத்தீர்ப்பைக் குறித்து ஏசாயா உரைத்த தீர்க்கதரிசனத்தை எழுது 13
'இதோ, கர்த்தர் தேசத்தை வெறுமையும் பாழுமாக்கி அழைக் கவிழ்த்து, அதின் குடிகளைச் சிதறடிப்பார். ஆப்பொழுது ஜனத்துக்கு எப்படியோ இதோ, கர்த்தர் தேசத்தை வெறுமையும் பாழுமாக்கி, அதைக் கவிழ்த்து, அதின் குடிகளைச் சிதறடிப்பார்.
அப்பொழுது, ஜனத்துக்கு எப்படியோ அப்படியே ஆசாரியனுக்கும், வேலைக்காரனுக்கு எப்படியோ அப்படியே எஜமானுக்கும், வேலைக்காரிக்கு எப்படியோ அப்படியே எஜமானிக்கும், கொண்டவனுக்கு எப்படியோ அப்படியே விற்றவனுக்கும், கடன் கொடுத்தவனுக்கு எப்படியோ அப்படியே கடன்வாங்கினவனுக்கும், வட்டிவாங்கினவனுக்கு எப்படியோ அப்படியே வட்டிகொடுத்தவனுக்கும், எல்லாருக்கும் சரியாக நடக்கும்.
தேசம் முழுதும் கொள்ளையாகி, முற்றிலும் வெறுமையாகும்; இது கர்த்தர் சொன்ன வார்த்தை.
தேசம் புலம்பி வாடும்; பூமி சத்துவமற்று உலர்ந்துபோகும்; தேசத்து ஜனத்திலே உயர்ந்தவர்கள் தவிப்பார்கள்.
தேசம் தன் குடிகளின் மூலமாய்த் தீட்டுப்பட்டது; அவர்கள் நியாயப்பிரமாணங்களை மீறி, கட்டளையை மாறுபாடாக்கி, நித்திய உடன்படிக்கையை முறித்தார்கள்.
இதினிமித்தம் சாபம் தேசத்தைப் பட்சித்தது, அதின் குடிகள் தண்டிக்கப்பட்டார்கள்; தேசத்தார் தகிக்கப்பட்டார்கள், சிலர்மாத்திரம் மீந்திருக்கிறார்கள்.
(ஏசாயா 24:1-6)

2..உலகம் மற்றும் உலகப்பற்றைப் (லௌகீகம்) பற்றி வேதாகமம் போதிக்கும் 7 சத்தியங்கள் யாவை?
8-14 page points 1-7

பாடம் 3
லௌகீகத்தைக் குறித்த தேவகட்டளை

PART B

ஓரிரு வார்த்தைகளில் விடையளி
1.தன்னுடைன் வளர்ந்த தனக்குச் சமமமான வயதுள்ள வாலிபர்களின் ஆலோசனையைப் பின்பற்றினதினிமித்தம் தன் ராஜ்யபாரத்தின் ˙பெரும்பகுதியை இழக்க வேண்டியதாயிருந்த ராஜாவின் பெயர் என்ன?
ரெகொபெயாம் (I இராஜா 12:13-16) பக்கம் 19

2.தேவனால் பிறப்பதெல்லாம் எதை ஜெயிக்கும்?
உலகத்தை (I யோவான் 5:4) பக்கம் 23

3.நமது சரீரங்களை எதற்கு ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும்?
நீதிக்குரிய (ரோமர் 6:12-14) 26,27

4.உலகத்திலே சுடர்களைப்போல பிரகாசிக்கிற நாம் எதைப் பிடித்துக்கொள்ளவேண்டும்?
ஜீவ வசனம் (பிலி 2:14-16) 21

5.தேசத்தின் பெண்களோடே தோழமை கொண்டு தீட்டுப்பட்டுப்போன யாக்கோபின் குமாரத்தியின் பெயர் என்ன?
தீனாள் (ஆதி 34:1) 20

6.நீங்கள் என்னுடையவர்களாயிருக்கும்படிக்கு, உங்களை மற்ற ஜனங்களைவிட்டுப் பிரித்தெடுத்தேன் என்று தேவன் எந்த ஜனத்தைக் குறித்துச் சொன்னார்?
இஸ்ரவேலர் (லேவி 20:26) 21

7.கலாத்தியர் 1:4 ன்படி நம்மை எதினின்று விடுவிக்கும்படி கர்த்தராகிய இயேசு தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்?

இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று பக்கம் 16

8.புறஜாதியாரோடு நெருங்கிய ஐக்கியங்கொண்டபோது திருப்பிப்போடப்படாத அப்பத்தைப் போல உபயோகமற்றவர்களாகி விட்டது யார்?
இஸ்ரவேலர் (எப்பிராயீம்) (ஓசியா 7:8) பக்கம் 20

PART D

1.நம்மை லௌகீகத்திலிருந்து விடுதலையாக்குவதும் கர்த்ராகிய இயேசு தம்மைப் பலியாக ஒப்புக்கொடுத்தலின் நோக்கத்தில் உள்ளடங்கியது என்பதை விளக்குக
நும்மை பாவத்திலிருந்து இரட்சிப்பதற்காக மட்டுமல்ல லௌகிகத்திலிருந்து விடுவிக்கும்பொருட்டாகவும் தேவன் நம்முடைய சொந்தக் காரனை அனுப்பினார். அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்; (கலா 1:4) உலக ஆசைகள் மாம்ச இச்சைகள், உலகத்தில பெரியவர்களாக வேண்டுமென்ற ஆவல் போன்றவற்றின் மூலம் நம்மை நம்முடைய பரம தரிசனத்திலிருந்தும் ஆவிக்குரிய ஓட்டத்திலிருந்தும் ஊக்கமான ஊழியத்தினின்றும் பரிசுத்தமான பிரதிஷ்டைகளினின்றும் வழிவிலகச் செய்யும்படி பிசாசானவன் பிரயாசப்படுகிறான். எனவே அப்பிரபஞ்சத்திற்குரியவையாகிய இவையெல்லாவற்றினின்றும் நம்மை விடுதலையாக்குவதும் கர்த்தராகிய இயேசு தம்மைப் பலியாக ஒப்புக்கொடுத்ததின் நோக்கத்தில் உள்ளடங்கியுள்ளது.

2.நாம் நமது இருதயங்களை தேனுக்கு ஒப்புக்கொடுப்பது போல, நமது சரீரங்களையும் ஜீவபலியாக அவதுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பதை விவரி. பக்கம் 27,28
நமது சரீரம் தேவனுக்கென்று பிழைத்திருக்க வேண்டும். ஆனால் மறுபக்கத்தில், உள்ளான மனிதனைக் கறைப்படுத்தி அதன் மூலம் நாம் பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஆராதனை செய்வதைத் தடைசெய்யும் உலகத் காரியங்களுக்கு அது மரித்ததாயிருக்க வேண்டும். இவ்விதமாய் நமது சரீரம் பிழைத்திருக்கவும் மரித்திருக்கவும் பயிற்சிக்கப்பட வேண்டும். நம் சரீரம் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கப்படாவிட்டால் நம் சுபாவம், பழக்க வழக்கங்கள், நடக்கைகள் யாவம் இவ்வுலகத்தின் பாவங்களிலம், சிற்றின்பங்களிலும் துன்மார்க்கத்திலும் பங்குகொண்டு, இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரித்தவையாய் மாறிவிடும்.

3.உலக நண்பர்களிலிருந்து கண்டிப்பான ஒரு வேறுபிரிதலைக் காத்துக்கொள்வதிலிருந்து நாம் தவறும்பொது சோதனைகள் உள்ள இடத்தில் நம்மை நாமே வைத்துக் கொள்கிறோம் என்பதை விவரி.
ஆதியாகமம் 34 ம் அதிகாரத்தில் பாக்கோபின் குமாரத்தியாகிய தீனாள் தேவபக்தியற்றவர்களான தேசத்தின் பெண்களின் தோழமையை நாடுகிறாள் அதன் முடிவான விளைவு தீட்டுப்படுதலும் அவமானமடைதலுமாயிருந்தது. உலக நண்பர்களிலிருந்து கண்டிப்பான ஒரு வேறுபிரிதலைக் காத்துக் கொள்வதிலிருந்து நாம் தவறும்போது அவர்களுடைய விருந்துகள், சுற்றுவாக்கள், உல்லாசப் பயணங்கள் முதலியவற்றில் நாம் சேரந்து கொள்ளும்போத சோதனைகளும் கண்ணிகளும் உள்ள இடத்தில் நம்மை நாமே வைத்துக்கொள்கிறோம். துன்மார்கருடைய பாதையில் பிரவேசியாமலும் துஷதீயோருடைய வழியில் நடவாமலும், அதை வெறுத்து அதை விட்டு விலகிக் கடந்துபோக வேண்டும் (நீதி 4:14, 15) பக்கம் 20

4.நாம் உலகத்தை அல்லது லௌகீகத்தை நேசியாமல் அதை ஜெயிக்க வேண்டுமென்று தேவன் கொடுத்த கட்டளை என்ன?
உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை.
ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்.

உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்.

PART E

1.நாம் உலகத்தில் ̇ அன்புகூர்ந்தால் சம்பவிக்கும் காரியங்கள் எழுதுக
பக்கம் 23,24,25

(i)தேவன்பேரில் நமக்கு உண்மையான அன்பிராது. இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது. ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான். அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டை பண்ணுவான். தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது (மத் 6:24) என்று இயேசு கூறினார்.

(ii)உலகத்தின் அசுத்தங்களால் நமது ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகிய யாவற்றிலும் நாம் தீட்டுப்படுவோம் (II பேதுரு 2:20)

(iii)நாம் தேவனுடைய சித்தம் செய்வதை விட்டுவிடுவோம். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்து போம். தேவனுடைய சித்தத்தைச் செய்கிறவர்கள் மாத்திரமே நிலைத்திருப்பார்கள்.

iv)நாம் உலகத்தை ஜெயிப்பதற்குப் பதிலாக உலகம் நம்மை ஜெயித்துவிடும்.

(v) மரணத்தருவாயில் இருக்கும் ஒரு மனிதனைப் போல நம்மிலுள்ள தெய்வீக ஜீவனைப் படிப்படியாக நாம் இழந்து போவோம்.

(vi) நம் மனச்சாட்சி தீட்டுப்படுத்தப்படடுவதால்,கர்த்தராகிய இயேசுவின் மேலுள்ள நம்முடைய ஜெயங்கொள்கிற விசுவாசம் பாதிக்கப்படும். மேலும் நம் இருதயம் பாவத்தை குறித்து நம்மைத் தொடந்து குற்றப்படுத்திகொண்டிருப்பதால் தேவனுடைய வசனம், ஜெபம், ஜெயஜீவியம் தேவ வல்லமை ஆகியவற்றின் மேலுள்ள நம் விசுவாசத்தையும் கிறிஸ்துவின் இரகசிய வருகையின் நம்பிக்கையை நாம் இழந்துபோவோம்.

(vii) நாம் தேவனுடைய பார்வையில் ‘விபசாரரும் விபசாரிகளுமென கணிக்கப்படுவோம். உலகத்தின் அசுத்தமான காரியங்களால் நம் கற்பும் பரிசுத்தமும் தீட்டுப்படும். கிறிஸ்து கற்புள்ள கன்னிகைக்காக அல்லது தூய்மையான அன்பையும் பரிசுத்தத்தையும் தங்களுக்குள் பேணி, வளர்த்து உருவாக்கும் ஒரு கூட்டத்தாருக்காகவே வருகிறார்.

(viii) நாம் நிச்சயமாகவே உலகத்துக்கு சிநேகிதராகி அதன் விளைவாக தேவனுக்கு பகைஞராகிவிடுவோம்.

பாடம் 4
கேள்விக்கு இடமான சிற்றின்பங்களை வரைறயறுப்பது எங்ஙனம்?
PART B

1.நம் ஆவிக்குரிய ஜீவியத்திலும் ஓட்டத்திலும் நம்மேல் பாரமாயிருந்து நம்மை அழுத்தக்கூடியது எது?
லௌகீகம்/உலகக் கவலைகள்/ஐசுவரியத்தின் மயக்கம்/ சிற்றின்பங்கள் பக்கம் 31

2.நம்முடைய ஆண்டவர்மேல் நமக்கிருக்கும் அன்பையும் உண்மையான பக்தியையும் இரகசியமாய் அழித்துப்போடுவது எது?
சிற்றின்பங்கள் 31

3.எபிரோயர் 12:1ன்படி நம்முடைய கிறிஸ்தவ ஓட்டத்தில் நாம் தள்ளிவிவேண்டிய இரு காரியங்கள் யாவை?
பாவமும் பாரமும் 30

4.மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் எதை அறுப்பான்? ஆவிக்கென்று விதைக்கிறவன் எதை அறுப்பான்?
அழிவை, நித்திய ஜீவனை (கலா 6:7,8) 39

5.நீங்களும் இடறலற்றவர்களாயிருங்கள் என்று அப்.பவுலர் பாருக்கு எழுதினார்?
கொரிந்தியர் (I கொரி 10:33) 39

6.லூக்கா 3:14 ல் சொல்லப்பட்டபடி முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள் ஏன் பலன்கொடாதிருக்கிறார்கள்?
பிரபஞ்ச்ததிற்குரிய கலலையினாலும், சிற்றின்பங்களினாலும் ஐசுவரியத்தினாலும் நெருக்கப்படுவதால் 31

7.திராட்சத்தோட்டத்தைக் கெடுக்கிறவை எவை?
குழி நரிகள் சிறுநரிகள் உன் 2:15 பக்கம் 31

PART D

1.நம்முடைய உத்தரவாதம் இரட்டிப்பானது என்பதை விவரி பக்கம் 33
நாம் இக்கடைசி நாட்களின் கேள்விக்கு இடமான சிற்றின்பங்களுக்கு இரையாகி விழுந்துபோய் நம் ஆவிக்கரிய ஜீவியத்திற்கு நாமே ஆபத்தை விளைவித்துக்கொள்ள கூடும் என்பதைக் குறித்து நாம் கவனமாயிருக்க வேண்டும். அது முதல் உத்தரவாதம். நம்முடைய மாதிரியற்ற ஜீவியத்தினால் மற்றவர்கள் இடறிப்போகாதவாறு நாம் கவனமாயிருக்க வேண்டும் என்பது நம் இரண்டாவது உத்தரவாதம். நாம் செய்கிற சில காரியங்கள் நமக்குத் தீங்கு விளைவிக்காதவையாக இருக்கலாம். ஆனால் அவை மற்றவர்களின் ˙ஆத்துமாவுக்கு பெரிய நாசம் உண்டாக்கக்கூடும். நாம் மற்றவர்களுக்கு இடறல் உண்டாக்கிறவர்களாயிருந்தால், நாம் தேவனுக்கு கணக்கொப்பவிக்க வேண்டும் என்று தேவனுடைய வசனம் தெளிவாகப் போதிக்கிறது. அது கிறிஸ்துவுக்கு விரோதமாகச் செய்யப்படும் பாவமாகக் கணக்கிடப்படுகிறது. அவ்விதமாக நம்முடைய உத்தரவாதம் இரட்டிப்பானது.

2.சுயத்தை வெறுத்துத் தள்ளிவிடுகிற ஒரு ஜீவியத்திற்காகவே கிறிஸ்து நம்மை அழைக்கிறார் என்பதை விவரி.
'ஆகையால் நீஙய்கள் புசித்தாலும் குடித்தாலும் எதை செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள் (I கொரி 10:31) என்று அப்.பவுல் கூறுகின்றார். நம்முடைய பழக்கங்கள் நாட்டம் ஆகியவற்றின் நோக்கம் தேவனை மகிமைப்படுத்துவதாய் இராவிட்டால் அவை நாம் நம்முடைய சுயத்திற்கு இடங்கொடுப்பதாயிருக்கும். உலகமானது, சுயத்தை திருப்பிப்படுத்தக்கூடிய ஜீவியத்தை நமக்கு அளிக்க முன்வருகிறது. ஆனால் சுயத்தை வெறுத்துத் தள்ளிவிடுகிற ஒரு ஜிவியத்திற்காக கிறிஸ்து நம்மை அழைக்கிறார்.

3.நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் வளர்ச்சிக்கு தடையாயிருக்கும் குழந்தைத்தனமான பழக்கங்களை நாம் ஒழித்துவிடவேண்டும் பக்கம் 37
நான் குழந்தையாயிருந்தபோது குழந்தையைப்போலப் பேசினேன், குழந்தையைப்போலச் சிந்தித்தேன், குழந்தையைப்போல யோசித்தேன்; நான் புருஷனானபோதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிட்டேன். (I கொரி 13:11) நீங்கள் கிறிஸ்துவுக்குள் குழந்தையாயிருந்தபோது ஒரு குறிப்பிட்ட பழக்கத்திலோ அல்லது செயலிலோ தொடர்ந்திருக்க தேவன் ஒருவேளை உங்களை அனுமதித்திருக்கலாம். அப்போது நீங்ள் கிறிஸ்துவுக்குள் போதுமான அளவு வளர்ந்தவர்களாயிருப்பதால், உங்களுடைய குழந்தைத்தனமான பழக்கம் அல்லது செயல் உங்களுடைய ஆவிக்குரிய ஜிவியத்திற்குத் தடையாயிருக்கும என்பதை நாம் உணர்ந்து, அதை அகற்ற வேண்டும்.

PART F

1.வேதவசனங்களின் வெளிச்சத்தில் நமது செயல்கள் நன்மை செய்பவையா அல்லது தீமை விளைவிப்பனவா என்று சோதித்திறிந்து நிச்சய்படுத்திக் ˙கொள்ள வேண்டிய கேள்விகள் யாவை?
36-40
(i)இது வேனை மகிமைப்படுத்துவதாயிருக்குமா?
ஆகையால் நீங்கள் ˙புசித்தாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள் (I கொரி 10:31) நம்முடைய பழக்கங்கள் நாட்டங்கள் ஆகியவற்றின் நோக்கம் ˙தேவனை மகிமைப்படுத்துவதாய் இராவிட்டால் அவை நாம் நம்முடைய சுயத்திற்று இடங்கொடுப்பதாயிருக்கும். உலகமானது சுயத்தைத் திருப்திபடுத்தக்கூடய ஒரு ஜீவியத்தை நமக்கு அளிக்க முன்வருகிறது. ஆனால் நம் சுயத்தை வெறத்துத் தள்ளிவிடுகிற ஒரு ஜீவியத்திற்காக கிறிஸ்து நம்மை அழைக்கிறார்.

(ii)எனக்குள்ளிருக்கிற விருப்பம் தேவனுக்கு உகந்ததா? அது அவரைப் ˙பிரியப்படுத்துகிறதுா?

கர்த்தருக்கு பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப் பருங்கள் (எபே 5:10) தேவபிள்ளைகளாயிய நாம், நாம் செய்கிற எல்லாவற்றிற்கும் அல்லது நம் வாழ்கையில் நாம் அனுமதிக்கிற யாவற்றிற்கும் தேவனுடைய அங்கீகாரத்தை நாடவேண்டும்.

(iii)இது என் ஆவிக்குரிய ஜீவியத்தின் தரத்திற்கு ஒத்தமைந்ததாயிருக்கிறதா? அல்லது இது நான் என் ஆண்டவருக்காக கொண்டிருக்கும் வைராக்கியம், தரிசனம், சேவை, அன்பு ஆகியவற்றைப் பாதிக்கிறதா? என் தனிப்பட்ட தேவபத்தி, வேதவாசிப்பு, ஜெபஜீவியம் போன்றவற்றில் இது குறுக்கிடுகிறதா? நான் குழந்தையாயிருந்தபோது குழந்தையைப்போலப்பேசினேன்.. குழந்தைக்கேற்வைகளை ஒழித்துவிட்டேன் (I கொரி 13:11) குழந்தைத்தனமான பழக்கம் அல்லது செயல் நம் ஆவிக்குரிய ஜீவியத்திற்குத் தடையாயிருக்கும் என்பதை உணர்ந்து. அதை அகற்ற வேண்டும்.

(iv). இது என் ஆவிக்குரிய ஜீவியத்திற்குப் பிரயோஜனமாய் இருக்கிறதா? அது என் ஆவிக்குரிய ஜீவியததைக் கட்டி எழுப்புகிறதா?
எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு,ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது. எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் பக்திவிருந்தியை உண்டாக்காது (I கொரி 10:23) பாவம் என்ற தலைப்பின் கீழ் கொண்டுவரப்படாத யாவற்றையும் தெரிந்துகொள்வதற்கு நமக்குச் சுயாதீனமுண்டு. ஆயினும் நாம் நின்று சற்று ஆழ்ந்து சிந்திக்க வேண்டியது அவசியம். நம் ஆவிக்குரிய ஜீவியத்திற்குப் பிரயோஜனமாயிராததும், நம்மை ஆவிக்குரிய பிரகாரமாகக் கட்டியெழுப்பக்கூடாததுமானவை, நமக்குத் தீங்கு விளைவிப்பவையாய் மாறிவிடும். எனவே, அப்படிப்பட்ட காரியங்களை நாம் வேண்டாமென வெறுத்துத் தள்ளிவிட வேண்டும். இல்லையேல், நம் ஆவிக்குரிய ஓட்டத்தை நாம் ஓடும்போது அவை நம் மேல் பாரமாக இருந்து, நம்மை அழுத்தி, நம் வேகத்தைக் குறைத்துப்போடும்.

(v).இது கர்த்த்ராகிய இயேசுவின் நாமத்தில் செய்யப்படக்கூடுமா?
வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள் கொலோ 3:17

(vi).இது கர்த்தருக்காகச் செய்யப்படக்கூடுமா? எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய் செய்யுங்கள் (கொலோ 3:24)

(vii).இது பிதாவினாலுண்டானதா அல்லது உலகத்தினாலுண்டானதா?
உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். (I யோவா 2:16)

(viii) அதன் விளைவானது நான் அறுக்க விரும்புகிற ஒன்றாயிருக்குமா? மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.
தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான் கலா 6:7,8

(ix).என் நேரத்தை நான் இதைக் காட்டிலும் மேலானதும், ஆவிக்குரிய ஜீவியத்தைக் கட்டி எழுப்பக் கூடியதுமான ஒரு காரியத்திற்காகச் செலவழிக்கக் கூடுமா? நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்ப:டுத்திகொள்ளுங்கள் (எபே 6:16)

(x)என்னை தனக்கு மாதிரியாகக் கொண்டிருக்கிற ஒரு நபர் இதினிமித்தம் இடறக்கூடுமா?
ஆகிலும் இதைக்குறித்து உங்களுக்கு உண்டாயிருக்கிற அதிகாரம் எவ்விதத்திலும் பலவீனருக்குத் தடுக்கலாகாதபடிக்குப் பாருங்கள I கொரிந் 8:9. ஒவ்வொருவனும் தன் சுயபிரயோஜனத்தைத் தேடாமல், பிறனுடைய பிரயோஜனத்தைத் தேடக்கடவன். நீங்களும்

யூதருக்கும், கிரேக்கருக்கும், தேவனுடைய சபைக்கும் இடறலற்றவர்களாயிருங்கள (I கொரிச் 10:24,33) நாம் செய்கிற தீமையற்ற ஒரு காரியம் பெலவீனமுள்ள ஒரு சகோதரன் இடறுவதற்கேதுவாய் இருக்குமாயின் அதையுங்கூட விட்டுவிட நாம் ஆயத்தமாயிருக்கவேண்டும். இல்லாவிடில் நாம் செய்கிற காரியங்களை போலவே செய்கிறதற்குத் தனக்கும் உரிமை உண்டு என்று எண்ணி அதைக் காட்டிலும் தன் தன்மையில் அதிகத் தீங்கானதும் ˙மோசமானதுமான ஒன்றைச் செய்ய அவனும் துணிகரம் கொள்வான் அல்லவா?

(xi)நியாயத்தீர்ப்பின்போது அதை நான் சந்திக்க ஆயத்தமாயிருக்கிறேனா?
சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையம்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும் II கொரி 5:10

(xii).நான் ˙செயகிற அல்லது என்னிடத்திலிருக்கிற அல்லது நான் வெளிக்படுத்துகிற நல்ல காரியத்தில், எத்தீமையும் இல்லாதிருப்பினும், அது 'பொல்லாங்காய்த் தோன்றுகிதா? 'பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டுவிலகுங்கள்'' (I தெச 5:22)

பாடம் 5
திரைப்படங்களும் தொலைக்காட்சியும்

PART B

1.சீ என்று வெறுத்து முற்றிலும் அருவருக்க வேண்டியது யாது?
தொலைக்காட்சி பக்கம் 46

2.தீங்கான காரியததை என் கண் முன் வைக்கமாட்டேன் என்றது யார்?
தாவீது/சங்கீதக்கதாரன் (சங் 101:3) பக்கம் 49

3.ஒருவனுடைய இருதயத்தை வஞ்சித்து, அவன் தன்னால் இயன்ற சிறப்பான விதத்தில் தன் முழு நிறைவுடனும் தேவனைச் சேவிப்பதினின்று அவனைத் தடைசெய்கிறது எது? பக்கம் 43
பில்லிசூனியம்

4.'கற்புள்ளவைகளெவைகளோ…அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்'' என்ற அப்போஸ்தலன் யார்?
அப்.பவுல் (பிலி 4:8) பக்கம் 43

5.எல்லா நடிகர்களும் நடிகைகளும் எவற்றால் ஆளுகை செய்யப்படுகின்றனர்?
அந்தகார வல்லமைகளால் பக்கம் 42

6.மாம்ச இச்சைக்குரிய தீயொழுக்கங்களையும் தீய நடத்தைகளையும் கொண்ட காட்சிகள் எதில் இடம் பெறுகின்றன?
திரைப்படம் பக்கம் 42

7.நம்மை சுற்றிலும் எப்பக்கத்திலும் நம்மை வழிநடத்துவதற்காகப் பல ஆவிகள் இருப்பதாகக் கருத்து தெரிவிக்கும் திரைப்படம் எது?
போக்காஹொன்டாஸ் பக்கம் 42,43

8.சபையை அந்தகாரத்திலிருந்து வெளியெ கொணடவருவதற்காகத் தேவன் உபயோகித்த கருவி எது?
பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்ட பிரசங்கங்களேயாகும் பக்கம் 44

9.நடித்தலை ஒருபோதும் கனம்பண்ணாதவர் யார்?
பரிசுத்த ஆவியானவர் பக்கம் 44

10.சத்தியம் பரவி மேற்கொள்ளுவதற்குத் ˙தேவன் நியமித்திருக்கும் நான்கு வழிமுறைகள் ˙யாவை (அ)சத்தியம் பிரபலமாக்கப்படும்படியாக தேவன் அளித்திருக்கிற வழிமுறைகள் யாவை?
ஜெபம், பாடல், வார்த்தைகளால் அறிவிக்கப்படும் தூது நற்கிரியைகள் பக்கம் 45

11.வேதாகமத்திற்கு முற்றிலும் அந்நியமானதும், வேதாகமத்தினால் அங்கீகரிக்கப்படாததுமான ஒரு வழி எது?
திரைப்படம் பக்கம் 45

12.மரணத்திற்குப் பாத்திரனாக்குகிறது என்று எதைக் குறித்து கூறப்பட்டுள்ளது?
தொலைக்காட்சி பக்கம் 47

13.தன் மார்க்கத்தை முன்னேற்றுவதில் தொலைகாட்சியானது மாபெரும் பங்குவகிக்கிறது என்று நம்புகிறது யார்? அவன் எழுதிய நூலின் பெயர் என்ன?
சாத்தான் சபை ஸ்தாபகன் ஆன்ட்டன் லாவே, பிசாசின் நோட்டுப் புத்தகம் பக்கம் 49

14.தன் மீது சாபத்தை வருவித்துக் கொள்ளுகிறான் என்று யாரைக்குறித்து எழுதப்பட்டுள்ளது? அது சாபத்திற்குள்ளானது என்று எதைக் குறித்து கூறப்பட்டுள்ளது.˙.
தன் வீட்டில் தொலைக்காட்சிப் பெட்டியை வைத்திருப்பவன். தொலைக்காட்சி பக்கம் 46

PART D

1.தன் வீட்டில் தொலைக்காட்சிப் பெட்டியை வைத்திருக்கும் ˙ஒரு நபர் தன் மீது சாபத்தை வருவித்துக் கொள்கிறான் பக்கம் 46
‘அவைகளைப்போல நீ சாபத்துள்ளாக்காதபடி அருவருப்பானதை உன் வீட்டிலே கொண்டுபோகாயாக. அதைச் சீ என்று வெறுத்து முற்றிலும் அருவருக்கக்கடவாய். அது சாபத்திற்குள்ளானது’’(உபா 7:26) நிச்சயமாகவே இவ்வசனமானது தீய தொலைக்காட்சிப் ˙பெட்டியையையே குறிக்கிறது, ஏனெனில் ˙இளைஞர்களின் மனதையும் முதியோரின் மனதையும் தீட்டுப்படுத்தக்கூடிய அநேக அருவருப்பான நிகழ்ச்சிகள் அதில் வழங்கப்படுகின்றன.

2.தொலைக்காட்சித் ˙திரையில் வெளிவரும் தீமைகளைப் பார்ப்பது ஒருவனை எவ்வாறு மரணத்திற்குப் பாத்திரனாக்குகிறது,
அவர்கள் சகலவித அநியாயத்தினாலும், வேசித்தனத்தினாலும், துரோகத்திலும், பொருளாசையினாலும், குரோதத்தினாலும் நிறையப்பட்டு; பொறாமையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்தவர்களுமாய், புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறுபண்ணுகிறவர்களுமாய், தேவபகைஞருமாய், துராகிருதம்பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கிறவர்களுமாய், பெற்றாருக்குப் கீழ்ப்படியாதவர்களுமாய், உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய், சுபாவஅன்பில்லாதவர்களுமாய், இணங்காதவர்களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார்களென்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும், அவைகளைத் தாங்களே செய்கிறதுமல்லாமல், அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்தில் பிரியப்படுகிறவர்களுமாயிருக்கிறார்கள். (ரோமர் 1:29-32)

3.தொலைக்காட்சி நிகழ்சிகளைப் பார்ப்பவர்களுக்கு பூரண மனச்சமாதானம் இராது என்பது அதிர்ச்சியூட்டும் ஓர் உண்மையாகும் ஏன்?
உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்.
(ஏசாயா 26:3) என்று வேதவசனம் தெளிவாகக் கூறுகிறது. நாம் நம்முடைய மனதில் பூரண சமாதானமுள்ளவர்களாயிருப்பத்ற்கான நிபந்தனை நம்முடைய மனது கர்த்தர் மேலேயே தங்கியிருக்க வேண்டும் என்பதாகும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் காண்போர், தாங்கள் ஜெபிக்கும்போதும் ஆராதிக்கும்போதும், வேதம் வாசிக்கும்போதும் தங்கள் மனதைக் கர்த்தர் மீது ஒருமுகப்படுத்திச் செலுத்தச் கூடியவர்களாயிருப்பதை அடிக்கடி உணருகின்றனர். தொலைக்காட்சிக் திரையில் ஒளிபரப்பப்படுமம் மினுக்கிடும் காட்சிகள் அவர்களது மனதில் மீண்டும் மீண்டும் பளிச்சிடுவதே அதற்கு காரணமாகும்.ஒருவேளை ஒருவன் முப்பது நிமிடம் தினசரி செய்தித் தொகுப்பைத் தொலைக்காட்சியில் கவனித்திருக்கக்கூடும். ஆனால் அதன் பின்னர் ஜெபிக்கும்படி முயற்சித்தால் நாம் கவனித்த அந்தக் காட்சிகள் நம் மனதை சிதறச் செய்து, அதினிமித்தம் நாம் மெய்யாகக் கருத்தூன்றி ஜெபிக்க் கூடாதிருப்பதை உணருவோம். பக்கம் 48,49

PART E

1.தொலைக்காட்சியை விட்டு விலகி ஓட வேண்டுமென்பதை அவற்றோடு இணைந்து காணப்படும் தீமையான காரியங்களைக் குறிப்பிட்டு விவரி பக்கம் 45-49

2.தேவனோடு தூய்மையிலும் தாழ்மையிலும் நடக்கும்படி விரும்புகிற ஒரு உண்மையான தேவபிள்ளைக்குத் தொலைக்காட்சி பெரும் தடையாகவே காணப்படுகிறது விளக்கி எழுது?
பக்கம் 45-49

பாடம் 6
இன்டர்நெட்டின் அபாயங்கள்

PART B

1.என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள் என்று எந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தில் நாம் வாசிக்கிறோம்?
ஓசியா (ஓசியா 4:6) பக்கம் 59

2.நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்துவைத்தேன்' வசன ஆதாரம் தருக
சங்கீதம் 119:11 பக்கம் 59

3.எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படியச் சறைபடுத்:துகிறவர்களாயிருக்கிறொம் என்ற அப்போஸ்தலன் யார்?
பரி.பவுல் (II கொரி 10:5) பக்கம் 54

4.நாம் நம்முடைய மனதை எதினால் போஷிக்கவேண்டும்?
கர்த்தருடைய வசனத்தினாலேயே போஷிப்பீர்களாக.

5.யோவான் 17:17 ல் தேவனுடைய வசனத்தை குறித்து நாம் என்ன விளங்கிக் கொள்ளுகிறோம்.
தேவனுடைய வசனம் நம்மைப் பரிசுத்தமாக்குகிறது,

PART D

1.இன்டர்நெட்டைப் பயன்படுத்தும் ஒரு நபர் ஆவிக்குரிய பாதுகாப்பு அற்றவராயிருப்பின், அவர் வெகுவிரைவிலேயே தனக்கு ஆட்களைச் சேகரிக்கும் இந்தப் பேய்த்தன வல்லமையின் புதிய

வாடிக்கையாளராக மாறி படிப்படியாக அந்த ஆபாச வல்லமைக்கு அடிமையாகவும் மாறிவிடுவதை பற்றி எழுதுக பக்கம் 54
எதிர்பாராத விதமாக ஒருவேளை நீங்கள் இந்த ஆபாசக் காட்சியைப் பார்க்கும்படி தள்ளப்படுவீர்களாயின் சடுதியாக உங்கள் திரையில் தோன்றிய அந்த ஆபாசக் காட்சியினின்று உடனடியாக வெளியே வந்து விடுங்கள். அது உங்கள் மனதைக் கெடுப்பதைத் தவிர்க்கும்படி அது பற்றிய எண்ணத்தைக் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் கட்டுங்கள். மனதில் மீந்திருக்கும் கற்பனைகளைக் கர்த்தராயிய இயேசுகிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்டுத்துங்கள் (II கொரி 10:5)

2.நீங்கள் உங்கள் மனதைக் எதினால் போஷிப்பீர்கவேண்டும்? பக்கம் 59
என் ஜனங்கள் அறிவிலாமையினால் சங்காரமாகிறார்கள் என்று வேதம் விளம்புகிறது. தேவனுடைய வசனம் நம்மைப் பரிசுத்தமாக்குகிறது (யோவான் 17:17) தேவனுடைய வதன் ஜீவியத்தின் அடிப்படையாகக் கொண்டிருக்கும் மறுபடியும் பிறந்த கிறிஸ்தவனொருவன் கர்தத்தருடைய வசனத்தின் மேல் பசியும் தாகமும் உள்ளவனாய் இருப்பான். அவன் அவபக்தியான காரியங்களைக் குறித்து மனம் வருந்துவான். அவைகளின் மேல் அவனுக்கு விருப்பமும் இராது. ஆகவே, நீங்கள் உங்கள் மனதைக் கர்த்தருடைய வசனத்தினாலேயே போஷிப்பீர்களாக.

3.இன்டர்நெட்டில் இருக்கம் மிகப்பெரிய அபாயத்தின் தன்மைகள் யாவை? பக்கம் 50
i.அது எளிதாகக் கிடைக்க்கூடியது (accessibility)
ii.சம்பந்தப்பட்ட நபரை வெளிக்காண்பிக்காமல் மறைத்து வைத்துக் கொள்க்கூடியது (anonymity)
iii.குறைவான செலவில் கிடைக்கப்பெறுவதால் சிரமமின்றி பணம் செலுத்திப் ̇பெற்றுக்கொள்ளக் ̇கூடியது (affortobility)

4.செய்யத்தகுந்ததல்லாத தவறான காரியங்களைக் ̇கொண்டுள்ள தளங்களுக்கு இன்டரநெட் மூலமாக ஒருவன் எப்படி அறிமுகப்படுத்தப்படுகிறான்? பக்கம் 51

5.அபாயமற்றது போல் தோன்றும் உலகளாவும் அலைகள் வருவிக்கும் ஆபத்துகளில் ஒன்றைக் குறித்து எச்சரிக்கும் சம்பவம் யாது? பக்கம் 55,56

PART B

1.இன்டர்நெட் உலகலாவிய வலைப்பின்னல் www என்பது உண்மையில் ஒரு சிலந்தி வலைதான் என்பதை விளக்கு பக்கம் 57,58
இன்டர்நெட் உலகலாவிய வலைப்பின்னல் www என அறிப்படுகிறது. இது ஒரு பெரிய சிலந்தி வலையைப்போல உலகில் உள்ள எல்லாக் கணிணிகளையும் ஒன்றோடொன்று இணைப்பதாக இருக்கிறது. ஆம் இது உண்மையில் ஒரு சிலந்திவலை தான். எதற்காக ஒரு சிலந்திப் ̇பூச்சியானது தன் வலையைப் பின்னுகிறது என்பதை நம் அறிவோம் தன் இரையை அதில் அகப்படச் செயும்படியாகவே அது அவ்வலையைப் பின்னுகிறது. இதே பதம் (web) இன்டரநெட்டுக்கும் பயன்படுத்தப்பட்டிருப்பது நிச்சயமாகவே தற்செயலான ஒன்றல்ல. சிலந்தி தன் வயைப் பின்னுவதில் என்ன நோக்கம் கொண்டிருக்கிறதோ அதே நோக்கம் கொண்டவனாகவே இவ்வுலகத்தின் ̇அதிபதியாகிய சாத்தானும் இருக்கிறான். எவ்வளவு அதிகமான ஆத்:துமாக்களைப் பிடிக்க முடியுமோ, அவ்வளவு அதிகமான ஆத்துமாக்களைப் பிடித்து, அவர்களை விழுங்க வேண்டும் என்பதே அவனது அந்நோக்கமாகும். ஒரு நபர் இன்டர்செட்டுக்கு ஒருமுறை அடிமையாகி விட்டால், தொண்டையை நெரித்துக் கொல்லுமாப்போன்ற அதன் பிடியிலிருந்து அந்நபர் விடுபடுவது என்பது கடினமான ஒரு காரியமாகும். கல்வியில் ஆர்வக் குறைவு, குடும்ப அங்கத்தினர்களிடத்தில் நடந்துகொள்ளும் விதத்தில் மாறுதல் எல்லாவற்றிற்கும் மேலாக ஆவிக்குரிய விஷயங்களை முற்றிலும் அவமதித்தல் போன்ற பயங்கரமான விளைவுகள் அதினிமித்தம் உண்டாகின்றன.

PART E

1.இன்டர்நெட்டில், சாத்தானின் கண்ணியில் விழுவதை நாம் எப்படித் தவிர்க்கலாம்? ஒரு வாலிபன் எவ்வாறு சுத்தமுள்ளவனாய் தரித்திருக்கக் கூடும்? பக்கம் 58,59

i.நன்மையும் செம்மையுமானவை என்று தேவன் சொல்லும் யாவற்றிற்கும் நம்மை நாம் உறுதியாய் அர்ப்பணிப்பதன் மூலமாக (நீதி 7:1-5)

ii நமது எண்ணங்கள் பாவ சிற்றின்பங்களில் தங்கியிருக்கும்படி நாம் அனுமதிப்பது நம்மைத் துக்கம் வருத்தம், ஆத்தும மரணம் ஆகியவற்றிக்கு நேராக கொண்டு செல்லும் என்பதை அறிந்து கொள்வதன் மூலமாக (நீதி 7:25-27)

iii. என் ஜனங்கள் அறிவிலாமையினால் சங்காரமாகிறார்கள் என்று வேதம் விளம்புகிறது. தேவனுடைய வசனம் நம்மைப் பரிசுத்தமாக்குகிறது (யோவான் 17:17) தேவனுடைய வேதத்தை ஜீவியத்தின் அடிப்படையாகக் கொண்டிருக்கும் மறுபடியும் பிறந்த கிறிஸ்தவனொருவன் கர்தத்தருடைய வசனத்தின் மேல் பசியும் தாகமும் உள்ளவனாய் இருப்பான். அவன் அவபக்தியான காரியங்களைக் குறித்து மனம் வருந்துவான். அவைகளின் மேல் அவனுக்கு விருப்பமும் இராது. ஆகவே, நீங்கள் உங்கள் மனதைக் கர்த்தருடைய வசனத்தினாலேயே போஷிப்பீர்களாக

அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன். அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலன் உண்டு (சங் 19:11)
ஒரு வாலிபன் தேவனுடைய வசனததிற்குக் கீழ்படிவதினாலும் அதன் சட்டதிட்டங்களைப் பின்பற்றுவதினாலும் சுத்தமுள்ளவனாய் தரித்திருக்க கூடும் (சங் 119:9) நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன் (சங் 119:11)

PART F

1.இன்டர்நெட்டில் உள்ள அபாயங்களை விவரி பக்கம் 50-58

பாடம் 7

ஆபாசத்தின் சக்தி – அது என்ன

PART B

1.மரணத்தின் கூர் எது?
பாவம் (I கொரி 15:56) பக்கம் 65

2.என் கண்களோடே நான் உடன்படிக்கை பண்ணியிருக்கிறேன் என்று கூறியது யார்?
யோபு (யோபு 31:1) பக்கம் 68

3.தன் வஸ்திரம் வேகாமல் மடியிலே எவனாவது நெருப்பை வைத்துக்கொள்ளகூடுமோ என்ற ராஜா யார்?
சாலொமோன் (நீதி 6:27) பக்கம் 61

4.தமது பிரமாணங்களை நாம் கைக்கொள்ளும்படி அதை நமது இருதயத்திலும் மனதிலும் எழுத விரும்புகிறது யார்?
பரிசுத்த ஆவியானவர் (எபி 8:10 10:16) பக்கம் 62

5.’கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துபோட்டு. சதையான இருதயத்தை உங்களுக்கு கொடுப்பேன் என்று தீர்க்கதரிசனம் உரைத்த தீர்க்கதரிசி யார்?
எசேக்கியேல் (எசே 36:26) பக்கம் 62

6.எபிநெ.ஃப்ரின் என்பது என்ன? 62
மூளையில் சுரக்கும் ஒரு வகை இயக்குநீர்

7.பாலுணர்வுக்காட்சிகள் பற்றி மனோதத்துவ நிபுணர்களின் கருத்து என்ன?
பாலுணர்வுக் காட்சிகள் ˙நெருப்பினால் பற்றவைத்தாற்போல் ஒருவனுடைய மனதில் ஆழமாகப் பதிந்துவிடக்கூடியவை.

8.ஒருவன் காணும் இந்த ஆபாசமான காட்சிகள் அவனது இருதயத்திலும் மனதிலும் கல்லில் செதுக்கப்பட்டது போல பதிந்து விடுகின்றன.

9.ஆபாசமான காட்சிகளுக்கு அத்தகைய வல்லமை இருப்பது ஏன்?
அது ஒரு போதைப்பொருள்போல் செய்யப்படுவதே அதன் காரணமாகும்.

10.கண்களின் இச்சைக்கு இடங்கொடுத்தினால் சிம்சோனுக்கு கிடைத்த தண்டனை என்ன?
கண்கள் பிடுங்கப்பட்டன

PART D

1.ஆபாசக் காட்சிகளை பார்த்தல் ஆபாச நூல்களை வாசித்தல் மூலம் தனிமையாய் இருக்கும்போது உண்டாகும் சோதனை பெரிதாய் இருக்கும் என்பதை விளக்குக பக்கம் 66,67 ஆதி 3:2
ஆபாச காட்சிகளைப் பார்த்தல் அல்லது ஆபாசமான நூல்களை வாசித்தல் என்பது தனிப்பட்ட ஜீவியத்தோடு சம்பந்தப்பட்ட ஒரு பாவமாகும். நீங்கள் தனிமையாய் இருக்கும்போது அதினால் உண்டாகும் சோதனை பெரியதாய் இருக்கும். ஏவாள் தனிமையாய் இருந்தபோதுதான் சாத்தான் அவளை அணுகி, அவளது மனதைக் கெடுத்தான். நீங்கள் இப்படிப்பட்ட தீய வல்லமையினால் தாக்கப்பட்டவர்களாயிருந்தால், ஆவிக்குரிய அனுபவத்தில் முதிர்ந்தவரும் நம்பிக்கைக்குரியவருமான ஒரு தேவ ஊழியரைத் தயவாய் அணுகி, அவரிடம் எல்லாவற்றையும் அறிக்கை செய்து, ஆலோசனை பெற்றுக்கொள்ளுங்கள். அப்போது சாத்தானின் சதித்திட்டம் கவிழ்க்கப்பட்டுபோகும். மெலும் நீங்கள் உங்கள் இருதயத்தின் ஆழத்திலிருந்து மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பும்படி நேரம் எடுத்:துக்கொண்டு, இதுவரை நீங்கள் செய்த ஒவ்வொரு பாவத்தையும் வெறுத்துத் தள்ளிவிடுங்கள். கர்த்தராகிய இயேசு உங்களை தமது இரத்தத்தினால் கழுவிச் சுத்திகரிக்க வல்லவராயிருக்கிறார்.

2.நாம் தூய்மையான எண்ணங்கள் உள்வர்களாயிருக்கும்படியாகவே கர்த்தராகிய இயேசு மிக அதிகமாக பாடுபட்டார் என்பதை எழுது
நாம் சரீர சுகத்தைப் பெற்றுக்கொள்ளும்படியாகக் கர்த்தராகிய இயேசு வாரினால் அடிக்கப்பட்டார். அதற்கு ஒரே ஒரு சிறிய போர்ச்சேவகரின் கூட்டம் மட்டுமே பயன்படுத்தப்பட்டது. நம் மனதின் பரிசுத்தத்திற்காக அவர் தம் சிரசில் முட்கிரீடம் சூட்டப்பட்டு, அது அவருடைய தலையில் இறங்கும்படி அவர் தம் சிரசில் கோலினால் அடிக்கப்பட்டார். அதற்குப் போர்ச்சேவகரின்
கூட்டம் முழுவதும் வரவழைக்கப்பட்டது (மத் 27:27-30) மாற்கு 15:16-19. தேசாதிபதியின் போர்ச்சேவகர், அவனுடைய தனிப்பட்ட மெய்ய்பாளர்கள் அந்த வட்டாரத்திலிருந்த மிகச் சிறந்த வீரர்கள் இவர்கள் யாவரும் ஒன்று கூடி கர்த்தாகிய ஈயசுவின் முட்கிரீடம் சூட்டப்பட்ட சிரசின்மீது கோலால் மாறி மாறி அடித்ததை கற்பனை செய்து பாருங்கள். கர்த்தராகிய இயேசுவின் மீது இவ்வாளவு அதிகமான வேதனை உண்டாக்கும் தண்டனையைச் செலுத்த எவ்வளவு அதிகமான போர்ச் சேவகர் அழைக்கப்பட்டிருந்தனர். இவை யாவும் நம்முடைய தவறான எண்ணங்களுக்காகவும் நம் மனதின் பாவங்களுக்காகவுமே.

3.கண்கள் தீட்டுப்பட்டுப்போகும்போது இருதயமும் மனதுங்கூட தீட்டுப்படுகின்றன. (அ) நீ கண்களின் ˙இச்சைக்கு இடங்கொடுப்பாயானால் ஒரு நாள் நிச்சயமாகவே பிசாசினால் கட்டப்படுவாய் என்பதை விவரி. ‘கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது. உன் கண் கெட்டதாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும். (மத் 6:22,23). இது ஒரு அம்சத்தில் உங்கள் கண்களை கறைப்பட்டிருந்தால் நீங்கள் களைப்பட்டிருப்பீர்கள் என்பதையும் உங்கள் கண்கள் பொல்லாதவையாயிருந்தால் நீங்கள ˙பொல்லதவர்களாயிருந்த உங்கள் ஜீவியம் அந்தகாரம் நிறைந்ததாயிருக்கும் என்பதையும் காண்பிப்கிறது. நீங்கள் ஜாக்கிரதை அற்றவர்களாயிருந்தால் உங்கள் கண்களே பாதாளக் குழிக்கு நேரே உங்களை

நடத்தி, அதின் ஆழத்திற்குள் உங்களை தள்ளிவிடுகிற பாதாள வாசல்கள் போல் மாறிவிடுகின்றன என்பதையும் இது குறிக்கிறது. சிம்சோனுடைய ஜீவியம் இந்த அச்சுறுத்துமு் உண்மைக்கு ஓர் எடுத்துகாட்டாயிருந்து. நம்மை எச்சரிக்கிறது. பக்கம் 63.

4.சிம்சோன் காசாவுக்கு போய் அங்கே ஒரு வேசியைக் கண்டு அவளிடத்தில போனான். கண்கள் தீட்டுபட்டதினால் நடந்த சம்பவம் என்ன? பெலிஸ்தர் அவனைப் பிடித்து. அவன் கண்களைப் பிடுங்கி அவனை காசாவுக்கு கொண்டுபோனார்கள் (நியா 16:1,21) அவன் எந்த இடத்தில் கண்களின் இச்சைக்கு இடங்கொடுத்தானோ, அதே இடத்திற்கு கட்டப்பட்டவனாய் தன் கண்கள் பிடுங்கப்பட்டவனாய் கொண்டு செல்லப்பட்டான். இது நம்மெல்லாருக்கும் ஓர் எச்சரிப்பாய் இருக்கிறது. நீ கண்களின் இச்சைக்கு இடங்கொடுப்பாயானால், ஒரு நாள் நிச்சயமாகவே பிசாசினாய் கட்டப்படுவாய். உன்னுடைய ஆவிக்குரிய கண்கள் பிடுங்கப்படும். கண்கள் இருதயத்தோடும் மனதோடும் சம்பந்தபட்டவையாயிருக்கின்றன. (நீதி 15:30: யோபு 31:1,7) கண்கள் தீட்டுப்பட்டுப்போகும் போது இருதயமும் மனதுங்கூட தீட்டுப்படுகின்றன். பக்கம் 64

5.உங்கள் மரண வேளையில் விஷமுள்ள கொடுக்குகளைக் கொண்ட எந்தப் பிசாசும் உங்களைத் தாக்காது என்பதை நீங்கள் எப்படி நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்?
ஆபாசத்திற்குரிய எந்த பொருளையும் உங்கள் இருதயத்திலிருந்தும் வீட்டிலிருந்தும் அகற்றிவிட்டு, அந்த இடங்களைக் தேவ வசனத்தினால் நிரப்புங்கள். வேதபாடங்கள், சுவிசேஷ ஊழியம், சங்கீதங்களையும் கீர்த்தனைகளையும் ஞானப்பட்டுகளையும் பாடுதல் போன்றவற்றிலும், மற்றும் மேலான நற்பண்புகளை மனதிற்கும் சுபாவத்திற்கும் வழங்கப்படகூடிய மற்ற பலவற்றிலும் உங்கள் மனது பழக்குவிக்கப்படத்தக்கதாக, இப்படிபட்டவைகளிலேயே எப்பொழுதும் அலுவலாயிருங்கள். அப்படியாயின், கர்த்தராகிய இயேசுவின் இரகசிய வருகை தாமதிக்குமாயின், உங்கள் மரண வேளையில் விஷமுள்ள கொடுக்குகளைக் கொண்ட எந்தப் பிசாசும் உங்களைத் தாக்காது என்பதை நீங்கள் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம். உங்கள் மரணநேரத்தில் கர்த்தராகிய இயேசு தமது சமாதானத்தினாலும் கிருபையாலும் உங்களை நிரப்புவார். பரிசுத்த தூதர்கள் உங்களுக்கு பணிவிடை செய்வார்கள் பக்கம் 67

PART E

1.கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது. உன் கண் கெட்டதாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும் என்ற வசனத்தின் அடிப்படையில் பாடப்பகுதியில் குறிப்பிட்டிருக்கும் அம்சங்களை எழுதுக pg 63 2nd para pg 64 1st and 2nd para

2. கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது. இந்த கண் ஒருவனைப் பாதாள குழிக்கு நேரே நடத்தி அதன் ஆழத்திற்குள் தள்ளி விடுகிற பாதாள வாசல்கள் போல் மாறிவிடுகின்றன என்பதை சிம்சோனின் ஜீவியத்திருந்து விளக்கு பக்கம் 63 2nd para, 64 1st para

பாடம் 8
இசை நடனம் நாடகம்

PART B

1.ஒரு சமுதாயத்தை இழிப்பதற்கான மிக விரைவான வழி அதன் இசையே என்று கூறியது யார்?
விலாடிமிர் லெனின் பக்கம் 73

2.இசைக்கு மனிதனுடைய சுபாவத்தை உருவாக்கும் சக்தி இருக்கிறது என்று சொன்னது யார்?
அரிஸ்டாட்டில் பக்கம் 72

3.தற்கால நாடகங்களின் உற்பத்தி ஸ்தானம் எது?
கிரேக்கு தேசம் பக்கம் 75

4.நல்லொழுக்கமுள்ளவர்கள் போல நடித்தது யார்?
பரிசேயர் பக்கம் 76

5.கிறிஸ்து பரிசேயரோடு ஒவ்வாதிருந்ததற்கான மையக்காரணம் யாது?
அவர்களது குணமாக்கப்படமுடியாததாயிருந்த நல்லொழுக்கமுள்ளவர்கள் போல நடத்த பழக்கம்

6.தன்னில் இல்லாத ஒன்றை இருப்பதாகவே எப்போதும் காண்பித்து வந்தவன் யார்?
பரிசேயன் பக்கம் 76

7.கிறிஸ்துவால் மாயக்காரன் என்று அழைக்கப்பட்டவன் யார்?
பரிசேயன் பக்கம் 76

PART D

1.நடனத்தில் ஈடுபடுகிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தை முடியாது என்பதை விளக்குக
ஒரு நாட்டிய அரங்கில், மதுபானம் நடனம் இவையாவும் ஒன்றாக இணைந்து இயங்கும்போது அரைகுறை ஆடையணிந்து நடனமாடும் நாட்டியக்காரருக்கும் அதை கண்டு களிக்க வந்திருக்கும் கூட்டத்தாருக்கும், அவை எத்தீமையும் அற்றவை போல சிறிது நேரம் காட்சியளிக்கும். ஆனால் மதுபானம் இவர்களது மனதையும் ஆவியையும் ஆட்கொள்ளும்போது அவர்களுடைய மன எழுச்சிகள் மாம்ச இச்சைகள், நடத்தைகள், சரீர அசைவுகள் இவை யாவும் நெருப்பு பிடித்தாற்போல் உக்கிரமாகவே தங்களை வஞ்சிக்கும் ஒழுக்கங்கெட்ட நடத்தையின் மேல் அவர்கள் எவ்விதக் கட்டுப்பாடும் அற்றவர்களாகிவிடுகின்றனர். ஆவிக்குரிய வளர்ச்சியையும் வல்லமையையும் வாஞ்சிக்கும் தேவபிள்ளைகள் இப்படிபட்ட களியாட்டுகள் தீங்கற்ற இன்பங்களாயிருக்க முடியாது. மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென கலாத்தியர் 5:19-21

2.காரணம் எதுவாயிருப்பினும் நாம் நம்முடைய சொந்த சுபாவத்தை மறைத்து வைத்து மாறுவேடம் பூண்டு கொள்ளுதல் எப்போதும் அபாயகரமானது என்பதை விளக்குக பக்கம் 76
அது நம்முடைய ஆத்துமாவுக்கு மரணத்தை விளைவித்துவிடவும் கூடும். வேறொரு சுபாவமுள்ளவனாக தன்னை காண்பித்து கொள்ளும் ஒருவன் அப்படி செய்வதின் நோக்கங்கள் எவ்வளவு களங்கமற்றவையாயிருப்பினும் அவன் உண்மையில் தன்னுடைய ஆத்துமாவுக்கே நம்பிக்கை துரோகம் செய்தவனாயும் தனக்குள் உள்ள புனிதமான ஒன்றை ஆழமாகப் புண்படுத்தியவனாயும் இருக்கிறான். எந்த நோக்கத்திற்காகிலும் ஒரு நாடகத்தில் ஒரு கதா பாத்திரமாக நடிக்கும் நிலைக்கு தன்னை கொண்டுவரும் ஒருவன் தன் இருதயத்தில் தொனிக்கும் அவரது சத்தத்தை அடக்கிப் போட்டிருக்க வேண்டும். அவனுக்கும் இருந்த மேன்மையானதும் சிறப்பு மிக்கதும் அருமையானதுமான ஏதோ ஒன்று மரித்து விடும். பக்கம் 76

PART E

1.ராக் இசையை விட்டு நாம் ஏன் விலகி ஓடவேண்டுமென்பதை அவற்றோடு இணைந்து காணப்படும் தீமையான காரியங்களை குறிப்பிட்டு விவரி pg 70 last para 71, 72 1st para

PART F

1.குறிபாக ராக் இசையின் அம்சங்களை எழுதுக
ராக் இசை குறிப்பாக சாத்தானின் இசையாயிருக்கிறது. அந்த இசை பதிவு செய்யப்படும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சாத்தான் கூட்டத்தார் வரவழைக்கப்படுகிறார்கள். பதிவு செய்யப்படும் சிடிக்கார்டுகள் அல்லது ஒலிநாடாக்களில் மந்திரம் ஒதுதல், மந்தி உச்சரிப்பு, இவற்றின் மூலமாக பேய்த்தன ஆவிகள் உட்புகுத்தப்படுகின்றன. அவைகளின் வேலை அவற்றிற்கு செவிசாய்ப்பவர்களுக்கு பிசாசின் தூதைக் கொடுப்பதாகும். எனவே அந்தப் பாடல்களில் உள்ள ஆவிக்குரியவைபோல தோன்றும் வார்த்தைகளினாலும் அவற்றிலுள்ள ஆவிக்குரியவை போல தோன்றும் கருத்துக்களினாலும் நீங்கள் வஞ்சிக்கப்படவேண்டாம். அது கிறிஸ்தவ இசை என்று அழைக்கப்படக்கூடும். இருப்பினும் அது உங்களில் எதிர்மறையான விளைவை உண்டுபண்ணிவிடக் கூடியதாகும்

2.பாம்பானது பாம்பாட்டிக்கு கீழ்ப்படிகிறதிலை என்பதை இசையோடு சேர்ந்து விளக்குக.
நம்மில் ஒருவரும் விளங்கிக்கொள்ளாமலிருக்கிற ஒரு வல்லமை இசைக்கு இருக்கிறது. பாம்பானது பாம்பாட்டிக்கு கீழ்ப்படிகிறதில்லை. ஆனால் ˙அவன் இசைக்கிற இசைக்கு ஏற்றாற்போல் அது அசைந்தாடுகிறது, ஒரு நபரை நன்மையான ஒன்றிற்கோ அல்லது

தீமையான ஒன்றிற்கோ தூண்டிவிடக்கூடிய ஆற்றல் இசைக்கு உண்டு. ‘விடுதலை’ யின் பாடல்கள் என்னைச் சூழ்ந்து கொள்ளும்படி செய்வீர் என்று சங்கீதம் 32:7 இன் ஆங்கில மொழி பெயர்ப்பு கூறுகிறது. ‘விடுதலையின் பாடல்கள் என்று ஒன்று இருக்குமாயின் நம்மை அடிமைத்தனத்திற்குட்படுத்துகிற அடிமைத்தனத்தின் பாடல்களும் இருக்கத்தான் வேண்டும் எனவே நாம் எந்த விதமான இசையைக் கவனித்து கேட்கிறோம் என்பதை குறித்து கவனமாயிருக்க வேண்டும்.

பாடம் 9
களங்கமற்ற கேளிக்கைள்

PART B

1.’உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடி சுற்றிதிரிகிறான் என்று எழுதியது யார்?
பேதுரு (I போருரு 5:8) page 89

2.வீடியோ விளையாட்டுகளில் அதிக அளவு என்ன இருக்கிறது?
வன்முறை பக்கம் 82

3.வாழ்க்கை ஒரு வேலைஸ்தலம் அல்லது யுத்தகளம் என்ற நோக்குடன் பார்க்கப்படுவதற்கு பதிலாக எப்படி பார்க்கபடுகிறது?
விளையாட்டுத்திடலாக பக்கம் 78

4.கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக என்று அப் பவுல் யாருக்கு எழுதுகிறார்?
தீமோதேயு (II தீமோ 3:1) பக்கம் 78

5.மனுஷர்கள் தற்பிரியராயும் பணப்பிரியராயும் வீம்புக்காரராயும் இருப்பார்கள் என்ற அப்போஸ்தலன் யார்?
அப்.பவுல் (II தீமோ 3:2) பக்கம் 78

6.தேவனை வெறுக்கிறவனும் சிற்றின்பப் பிரியனுமாயிருப்பவன் யார்?
அவிசுவாசி பக்கம் 79

7.நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தாயிருங்கள் என்று சொன்ன அப்போஸ்தலன் யார்?
பேதுரு (I பேதுரு 1:16) பக்கம் 79

8.பரலோகத்திதிலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல நீங்களும் இருங்கள் என்று கூறியது யார்?
இயேசு (மத் 5:48) பக்கம் 79

9.உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப்போகாதபடிக்கு ....ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள் என்று எந்த நிருபத்தில் நாம் வாசிக்கிறோம்?
எபிரேயர் 3:13 ிப 79

10.சங்கீதம் 16:11 ன் படி கர்த்தர் நம்முடைய சமூகத்திலும் தம்முடைய வலதுபாரிசத்திலும் நமக்காக எவ்வெவற்றை வைத்திருக்கிறார்?
சுமூகத்தில் பரிபூரண ஆனந்தமும் வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும்

11கடைசி நாட்களில் மனுஷர் தற்பிரியராயும், சுகபோகப்பிரயராயும் இருப்பார்கள் என்று அப்.பவுல் யாருக்க எழுதுகிறார்?
தீமோத்தேயு (ii தீமோ 3:4) பக்கம் 78

12.நம்முடைய எதிராளி கெர்ச்சிக்கிற சிங்கம்போல் இருக்கிறான் என்று கூறி அப்.பேதுரு தன்னுடைய நிருபத்தில் கொடுக்கும் எச்சரிப்பின் வார்த்தை என்ன?
தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்.

13.கேளிக்கைப் பூங்காக்களுக்கு நாம் செல்லும்போது எதை இழக்கிறோம்
நம்முயைட தெளிந்த புத்தியை பக்கம் 90

14.மேன்மைபாராட்டுகிறவ்ன கர்த்தரைகுறித்தே மேன்மைபாராட்டகடவன். ஏன்று எந்த புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ளது?
(எரே 9:24)

15.விளையாட்டுகளும் ஒழுங்கு செய்யப்பட்ட விளையாட்டு போட்டிகளும் எவற்றை முக்கிய விஷயங்களாக கொண்டுள்ளன?
வீம்பு கொள்ளுதல் தற்புகழ்ச்சி, மேன்மைபாராட்டுதல் பக்கம் 79

16.யாருடைய கால்களில் தேவன் பிரியப்படுகிறதில்லை?
வீரனுடைய கால்களில் (சங் 147:10) பக்கம் 80

PART D

1.மனித வர்க்கத்தின் மேலுள்ள சாத்தானின் தாக்குதல் வன்முறையானதாக இருப்பது மட்டுமல்ல. அது தந்திரமுள்ளதாகவும் இருக்கிறது என்பதை விளக்குக பக்கம் 89,90
வேதாகமத்தில் ஒரு எச்சரிப்பு கொடுக்கபட்டுள்ளது தெளிந்த புத்தியுள்வர்களாயிருங்கள். விழித்திருங்கள். ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்களாமோ என்று வகைதேடி சுற்றித்திரிகிறான் (I பேதுரு 5:8) மனித வர்க்கத்தின் மேலுள்ள சாத்தானின் தாக்குதல் வன்முறையானதாக இருப்பது மட்டுமல்ல. அது தந்திமுள்ளதாகவும் இருக்கிறது கேளிக்கைப் பூங்காக்களுக்கு நாம் செல்லும்போது அல்லது கேளிக்கையை அனுபவிக்க வேண்டும் என்பதற்காக யாதொரு கேளிக்கையிலும் நாம் நம்மை ஈடுபடுத்திக்கொள்ளும்போது, நாம் நம்முடைய தெளிந்த புத்தியை இழந்து சாத்தான் நம்மை தாக்கும்படியாக நாமே அவனுக்கு இடமுண்டாக்குகிறோம்.

2.நாம் ஏன் வேதாகமத்தை திரும்பத்திரும்ப வாசிக்க வேண்டும் என்பதை விளக்குக
எந்த ஒரு புத்தகமாயினும் அது எவ்வளவு நல்லதாக இருந்தாலும் பரிசுத்த வேதாகமத்திற்குக் கொடுக்கப்படவேண்டிய ஸ்தானம் அதற்குக் கொடுக்கப்படக்கூடாது என்பதை நாம்

மனதிற்கொள்ள வேண்டும். நாம் வேதாகமத்தை வாசிக்க வேண்டும். திரும்பத்திரும்ப வாசிக்கவேண்டும். அதில் எழுதப்பட்டிருப்பவைகளையெல்லாம் தியானிக்க வேண்டம். கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் (சங் 1:2) நாம் தேவனுடைய வசனத்தை எவ்வளவாகப் பொக்கிஷமாகக் கொள்ளவேண்டும் என்பதைக் குறித்து அறிந்து கொள்ள 119 ஆம் சங்கீதத்தை வாசித்துப் பாருங்கள்.

3.கர்த்தருடைய பணத்தை வீணாகச் செலவழிப்பதாயிருக்கும் எந்தக் கேளிக்கையும் களங்கமற்றதாயிருக்க முடியாது.
நம் நேரமும் பணமும் முழுவதுமாகக் கர்த்தருடையவையே நாம் கர்த்தருடையவர்கள். எனவே நம்மை மகிழ்விக்கம் ஒரு செயல் களங்கமற்றதாயிருக்க வேண்டுமாயின், அது கர்த்தருக்கு செய்யப்படும் ஒரு சேவையாக இருக்க வேண்டும். அந்த சமயத்தில் நாம் அதில் ஈடுபடுவது மட்டுமே அவரை மிக அதிகமாக பிரியப்படுத்துவதாக இருக்கவேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, அக்குறிப்பிட்ட சமயத்தில் நாம் செய்யக் கூடிய மற்றெல்லாவற்றையும் காட்டிலம் அது தேவனை மிக அதிகமாய் கனம் பண்ணுவதாயிருக்க வேண்டும்.

4. நாம் கிறிஸ்தவ மார்க்கத்தை அது இருக்கிற வண்ணமாகவே வெளிப்படுத்த வேண்டும். பக்கம் 92
சிலர் மனந்திரும்பாத ஆத்துமாக்களால் களங்கமற்ற கேளிக்கைகள் என்று அழைக்கப்படுபவைகளுக்கு நாம் நம்முடைய முதுகைக் காட்டுவதின் மூலம் கிறிஸ்தவ மதத்தையே அவர்களுக்கு வெறுப்பாக தோன்ற செய்துவிடுகிறோம் என்று கூறுகின்றனர். ஆயினும் நாம் ‘கிறிஸ்தவ மார்க்கத்தை அது இருக்கிற வண்ணமாகவே வெளிப்படுத்த வேண்டும்.

PART E

1.ஜிம் எலியட்டின் வாழ்க்கையிலிந்து நீ கற்றுக்கொளவது யாது? பக்கம் 81
ஆக்கா பழங்குடியினரால் தனது 35 வது வயதில் இரத்த சாட்சி மரணம் அடைந்த ஜிம் எலியட் என்பவர் உயர்கல்விக்காக கல்லூரி சென்றபோது அவர் தன்னை முழுவதும் தேவனுக்கு அர்ப்பணித்தார். இப்படிப்பட்ட ஓர் அர்பணித்தலில் உட்படும் ஒழுங்கையும் அவர் உணர்ந்து கொண்டார். அவ்வொழுங்கானது , ‘தண்டில் சேவகம்பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகமெழுதிக்கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளமாட்டான (II தீமோ 2:4) தன் நோக்கம் நிறைவேறுவதற்கான காரியங்கள் முன்னேற்றமடையும்படியாக அவற்றிக்கு இடங்கொடுப்பதற்காக அவர் மேற்கொண்டு அவ்வொழுங்கானது, அநேக நல்ல காரியங்களை போல் தோன்றுபவைகளை அவரது வாழ்க்கையிலிருந்து தானாவே அகன்று போக செய்துவிட்டது. தான் முதல் முறையா விளையாடிய கால்பந்து விளையாட்டை பற்றி அவர் கூறுவதாவது, ஒரு கால்பந்தாகிய மிக சிறிய ஒன்றில் நான் அலுவலாயிருப்பது எனக்கு விநோதமாக தெரிகிறது. அங்கு திரள் கூட்டத்தினர் ஆராவாரிப்பது பயனற்ற ஒரு செயலைப்போல் தென்படுகிறது. அதைக்காட்டிலும் தேவனுடைய துதியை முழக்குவது எவ்வளவு அதிக மேன்மையானதாயிருக்கும்.

2.கிறிஸ்தவ மார்க்கமானது மிக உன்னதாமானதும் மிகத்தூய்மையானதுமான சந்தோஷத்தின் உறைவிடம் என்பதை நாம் உலகிற்கு வெளிப்படுத்த வேண்டும் விவரி பக்கம் 92
கிறிஸ்தவர்கள், இவ்வுலகத்தின் சிற்றின்பங்கள் தங்களுக்கு தேவையில்லை என்ற நிலையில் அவற்றின்மேல் நாட்டமில்லாதவர்களாக இவ்வுலகத்திற்கு அப்பாற்பட்ட மிக மேலானதொரு ஜீவியம் செய்துதன் மூலம் கிறிஸ்தவ மார்க்கமானது மிக உன்னதமானதும், மிகத் தூய்மையானதுமான சந்தோஷத்தின் உறைவிடமாயிருக்கிறது என்பதை எலகிற்கு வெளிப்படுத்து வேண்டும். ஜீவனுள்ள ஒரு கிறிஸ்தவனின் அமைதலான தோற்றமும், சந்தோஷமான முகபாவனையும் ஆவிக்குரிய ஆழ்ந்த மனத்தெளிவும் உற்சாகமும் மனந்திரும்பாதவர்களை கிறிஸ்தவ மார்க்கத்தின்பால் கவர்ந்து இழுத்துக்கொள்கின்றன. தேவனில் அவன் கண்டடைநதிருக்கும் திருப்பதி, அவனிலுள்ள தூய்மையான சந்தோஷம் உலக சிந்தைக்கடுத்த வழிகளுக்கும் கேளிக்கைகளுக்கும் மேலானதொரு ஜீவியம் செய்து அவற்றை வெறத்து தள்ளுதல் போன்றவை, கிறிஸ்தவ ஜீவியம் இன்றியமையாததும்

விரும்பப்படதக்கதுமான ஒன்றாகும் என்ற ஒரு உணர்வை மனந்திரும்பாத ஜனங்களுக்குள் ஆழமாய் பதிந்து விடும்.

3.விளையாட்டுகள், விளையாட்டு போட்டிகள் ஆகியவற்றிலும் முக்கிய விஷயங்கள் நற்புகழ்ச்சியம் மேன்மைபாராட்டுதலும் ஆகும் என்பதை விவரி பக்கம் 79
கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டகூடாது என்று தேவன் நமக்கு சொல்லுகிறார். ஞானி தன் ஞானத்தைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டாம்; பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டாம்; ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டாம மேன்மைபாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக்குறித்தே மேன்மைபாராட்டக்கடவன் (எரே 9:24) மேன்மைபாராட்டுகிறவ்ன கர்த்தரைகுறித்தே மேன்மைபாராட்டகடவன். தேவன் வீரனுடைய கால்களில் அதாவது சரீரப் பிரகாரமான பெலத்திலும் திறமைகளிலும் பிரியப்படுகிறதில்லை. (சங் 147:10) மாறாக ‘இரக்கம் , நீதி நியாயம் இவற்றிலேயே அவர் பிரியப்படுகிறார். மற்றெல்லா மகிமையும் வீணான மகிமையாயிருக்கிறது.

4.விளையாட்டுப் போட்டிகளின் மீதுள்ள வெறியார்வம் விவரி பக்கம் 80
பெரும் விளையாட்டரங்கங்களில் இரு அணிகளுக்கிடையே நடைபெறும் விளையாட்டுப் போட்டிகள் மீது மட்டுமல்ல, உலகம் முழுவதிலும் வருடம் முழுவதும் நடக்கிற விளையாட்டு சம்பந்தமான செயல்கள் யாவற்றின்மீதும் மற்றும் விளையாட்டுப் போட்டிகளை ஆதாயத் தொழிலாகக் கொண்டவையாக விரைந்து பெருகும் விளையாட்டுக் ˙குழுக்களின் மீதும் உண்டாகிற வெறியார்வமானது அநேகருடைய தொண்டையை நெரித்துக்கொள்ளும் அளவிற்கு அவர்களை ஆட்கொண்டிருக்கிறது, தளக்கட்டு பந்தாட்ட (Base ball) காவலர் ஒருவர் தளகட்டுப் பந்தாட்டத் திடல்களில் தொழுது கொள்ளும் எங்களுக்கு அதன் திறப்பு நாள் ஒரு புனிதநாளாகும் என்று கூறுகிறார். இத்தகைய ஒரு கூற்று எவ்வாளவு துணிகரமானது என்று ஆத்திரத்துடன் நாம் கூறலாம். ஆனால் கோடிக்கணக்கான ஜனங்களைப் பொறுத்தவரை அது எழுத்தின்படியே உண்மையானதாகும் விளையாட்டுப் ˙போட்டிகளே இல்லாத ஒரு வாழ்க்கையானது அவர்களால் நினைத்துப் பார்க்கவுங்கூடாத ஒன்றாயிருக்கும். ஏதாவதொரு குழுவினருடன் வெறியார்வத்தோடு தாங்கள் இணைந்து கொண்டு, அவர்களுடைய விளையாட்டு வீரர்களாகிய விக்கிரகங்களால் தங்கள் இருதயத்தை உற்சாகப்படுத்தாவிடில், அவர்களைப் பொறுத்த்வரை அவ்வாழ்க்கையானது வாழத்தகுந்த ஒன்று அல்ல.

PART F

1.உலகம் அளிக்கிற ‘களங்கமற்ற’கேளிக்கைகள் ஒரு தேவனுடைய பிள்ளைக்கு ஏன் களங்கமற்றவையாயிருக்க முடியாது? பக்கம் 90,91
கேளிக்கைகளை அனுபவிக்க வேண்டும் என்ற வாஞ்சையை வெறுமனே திருப்திப்படுத்தும்படியாகக் கேளிக்கைகளில் ஈடுபடுவது களங்கமற்றது என்று கருதப்படமுடியாது. புசிக்கவேண்டும் அல்லது குடிக்கவேண்டும் என்ற ஆவலைத் திருப்பிப்படுத்தும்படி புசிப்பதோ குடிப்பதோ ஒரு மிருகத்தைப் பொறுத்தவரை குற்றமற்ற செயலாகும். ஆனால் நெறிமுறை அறிந்த ஒரு மனிதனைப் ˙பொறுத்தவரை அது ஒரு பாவமாகும். அவன் புசிப்பதற்கும் குடிப்பதற்கும் உயரிய முடிவானதொரு நோக்கம் உள்ளவனாயிருக்க வேண்டும். அதாவது, அவன் தேவனுக்கு ஊழியம் ˙செய்யத்தக்கதாக பலமுள்ளவனாகவும் ஆரோக்கியமுள்ளவனாகவும் தான் இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அவற்றை செய்கிறவனாயிருக்க வேண்டும். புசிப்பதிலும் குடிப்பதிலும் இன்பங்கண்டு, அதற்காக மாத்திரம் அவற்றை செய்வது எவ்விதம் களங்கமற்றதாயிருக்க முடியாதோ, அவ்விதமே ஒரு கேளிக்கையை உல்லாசமாய் அனுபவிக்க வேண்டும் என்ற மனப்பான்மையோடு ஒருவன் ஈடுபடும் எந்தக் கேளிக்கையும் தன்னில் குற்றமற்றதாக இருக்க முடியாது.
நாம் இன்பமாய் அனுபவிக்க வேண்டும் என்பதற்காக ஈடுபடும் எந்தக்கேளிக்கையும் களங்கமுள்ளதே. நமக்கு ஆகாரமும் பானமும் தேவை. ஆனால் நமக்கு அவை தேவை என்பதற்காக மட்டும் நாம் புசிப்பதும் குடிப்பதும் நாம் செய்வது சரியானதே என நம்

செயலை நீதிகரிப்பதில்லை. உனக்கு குறிப்பா ஏதோ ஒன்று தேவையாயிருக்கிறது என்ற காரணத்தை மாத்திரம் கொண்டு, அது எதுவாயினும் அதைத் தேடு என்று தேவனுடைய பிரமாணம் கூறுவதில்லை மாறாக, எல்லாவற்றையும் தேவன் மேலும் மனிதன் மேலுமுள்ள அன்பிலிருந்து செய்ய வேண்டும் என்றே அது கூறுகிறது.
விலையேறப் பெற்றதாகிய நேரத்தை விரயம் செய்வதாயிருக்கும் எந்தக் கேளிக்கையும் களங்கமற்றதாயிருக்க முடியாது. பாவிகள் நிறைந்த இந்த உலகமானது பிரகாசிப்பிக்கப்பட வேண்டும். கூடுமாயின் இரட்சிக்கப்படவும் வேண்டும். சிறிது நேரங்கூட வீணாக்கப்படகூடாது.
கர்த்தருடைய பணத்தை வீணாகச் செலவழிப்பதாயிருக்கும் எந்த கேளிக்கையும் களங்கமற்றதாயிருக்க முடியாது. நும் நேரமும் பணமும் முழுவதுமாக கர்த்தருடையவையே நாம் கர்த்தருடையவர்கள்.
எனவே நம்மை மகிழ்விக்கும் ஒரு செயல் களங்கமற்றதாயிருக்க வேண்டுமாயின், அது கர்த்தருக்கு செய்யப்படும் ஒரு சேவையாக இருக்க வேண்டும் இந்தச் சமயத்தில் நாம் அதில் ஈடுபடுவது மட்டுமே அவரை மிக அதிகமாக பிரியப்படுத்துவதாக இருக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக அக்குறிப்பிட்ட சமயத்தில் நாம் செய்யக்கூடிய மற்றெல்லாவற்றையும் காட்டிலும் அது தேவனை மிக அதிகமாய் கனம்பண்ணுவதாயிருக்க வேண்டும்.
உண்மையில் 'amuse' என்ற ஆங்கிலப் பதத்துக்கு வெப்ஸ்டரின் ஆகராதியில் கொடுக்கப்பட்டுள்ள அர்த்தங்களுள் ஒன்று வஞ்சிக்கும் நோக்கத்துடன் ஏதேனும் ஒன்றில் கவனத்தை ஈடுபட்டிருக்கக் செய்தல். ஆகவே கேளிக்கையின் மூலமாக ஒரு மனிதனை திசை திருப்பிவிட அல்லது தூரமாக வைத்து கொண்டு அவனுடைய கவனம் வேறு ஏதேனும் ஒன்றில் ஈடுபட்டிருக்க செய்யப்படுகிறது அல்லது திசை திருப்பப் படுகிறது.
கேளிக்கை பூங்காக்கள் மனிதனுடைய கண்டுபிடிப்புகள் அல்ல. அவை பிசாசின் கண்டுபிடிப்புகளேயாகும். மனிதனைத் தேவனை விட்டு தூரமாக வைத்துக் கொள்வதற்காக சாத்தான் துணிந்து வேண்டுமென்றே வகுத்துள்ள சதித்திட்டமாகும். அந்தப் பகுதிகளுக்குள் துணிந்து செல்லுகிற ஒரு நபர் தன் ஆத்துமாவை ஆபத்துக்குள்ளாக்குகிறான். பிசாசின் இந்த வஞ்சனையான கவர்ந்திழுக்கும் கண்ணியில் தேவ ஜனங்களுங்கூட இறையாகின்றனர்.

பாடம் 10
நவீன ஆடைகள், சிங்காரிப்புப் பொருட்கள், ஆபரணங்கள்

PART B

1.இயேசுவுக்கு நசரேயன் என பெயர் வரக் காரணம் என்ன?
நாசரேத்தில் வாசம்பண்ணினதினாலே நசரேயன் எனப்பட்டார். (மத் 2:23)

2.பழைய ஏற்பாட்டில் பிறப்பிலிருந்தே நசரேய விரதம் அனுசரித்த ஒருவரின் பெயரைக் குறிப்பிடுக
சிம்சோன்

3.புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல் என்ற வேதவசனம் எந்த வேதபகுதியிலிருக்கிறது?
I பேதுரு 3:3

4.புறம்பான அலங்கரிப்பு எது?
மரிரைப் பின்னுதல், பொன்னாபரணங்களை அணிதல், விலையேறப்பெற்ற வஸ்திரங்கள் உடுத்தி கொள்ளுதல்

5.இருதயத்தில் மறைந்திருக்கிற குணம் எது?
சாத்தமும் அமைதலுமுள்ள ஆவி

6.ஸ்திரீகள் தங்களை எவ்விதம் அலங்கரித்துக்கொள்வேண்டும் என்பதை குறித்து கூறும் வேத வசனம் கூறு?
I தீமோ 2:9,10, I பேதுரு 3:3,4

7.புருஷன் தன் தலை மயிரை நீளமாய் வளர்கிறது அவனுக்கு கனவீனமாயிருக்கிறது. ஆனால் ஸ்திரீ தன் மயிரை நீளமாய் வளர்கிறது அவளுக்கு மகிமையாயிருக்கிறது என்று எழுதின அப்போஸ்தலன் யார்?
அப்.பவுல் I கொரிந்தியர் 11:14

8.ஒரு ஸ்திரீ தன் தலையைக் எவ்விதம் கனவீனப்படுத்துகிறாள்?
ஜெபம்பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறபோதாவது, தன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள்;

9.தலைமயிர் கத்தரிக்கப்படுகிறதும் சிரைக்கப்படுகிறதும் ஸ்திரீக்கு வெட்கமானால் அவள் என்ன செய்யவேண்டும்?
முக்காடிட்டுக்கொண்டிருக்கக்கடவள்.

10.ஒரு ஸ்தீரியின் தலைமயிர் எவற்றோடு சம்பந்தமுள்ளதாயிருக்கிறது?
ஒரு பெண்ணின் தனிப்பட்ட ஜீவியத்தோடும் ஆராதனையோடும்.

11.புருஷனானவன், ஏன் தன் தலையை மூடிக்கொள்ளவேண்டுவதில்லை?
தேவனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கிறபடியால்

PART C

1.மத்தேயு 5:28 இல் கூறப்பட்ட ஆலோசனையின்படி நாம் ஏன் மாதிரியான உடையணிய வேண்டும்?
ஒரு இச்சையேடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தல் அவளோடு விபச்சாரம் செய்தாயிற்று. ஒரு ஸ்திரீயை வெறுமனே இச்சையோடு பார்ப்பதே இவ்வளவு பெரிய பாவமாக இருக்குமென்றால், மற்றவர்கள் தன்னை இச்சையோடு பார்க்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் அரைகுறையாக உடைஅணிதல் எவ்வளவு பயங்கரமான பாவமாயிருக்கும்.

2.நாணம் என்ற பதத்தின் பொருள் என்ன?
முக அலங்காரத்தை வேதாகம் தடைசெய்கிறது. முகமானது மனது இருதயம் இவற்றின் நிலவரத்தை வெளிப்படுத்துகிறது. I திமோ 2:10 ல் உள்ள ‘நாணம் என்ற பதமானது மற்றவர்களை கவர்ந்துகொள்ளும்படி முகத்தை அழகுபடுத்த கூடாது என்பதையும் அதற்கு மாறாக உள்ளான சமாதானத்தையும் தூய்மையையும் வெளிப்படுத்தத் தக்கதாக அது அலங்காரமற்றதாகவும் எளிமையானதாகவும் இருக்க வேண்டும் என்பதையே குறிக்கிறது.

PART D

1.கிறிஸ்தவர்கள் ஆண்களாயினம் பெண்களாயினும் விலையுயர்ந்த வஸ்திரங்களை உடுத்தக்கூடாது (I தீமோ 2:9) ஐசுவரியவானும் வாசருவும் பற்றிய விஷயத்தில் பாதாளத்துக்கு சென்ற ஐசுவரியவானைக் குறித்து முதலாவது குறிப்பிடப்பட்டிருப்பது அவனுடைய உடையை பற்றியே ஆகும். (I தீமோத்தேயு 2:9) (I பேதுரு 3:3) ஐசவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான். அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்திருந்தான் (லூக் 16:19) இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் மிகவும் விலையுயர்ந்த ராஜவஸ்திரங்களாகும் (எஸ்தர் 8:15) இவ்வசனங்கள் விலையுயர்நத வஸ்திரங்கள் உடுத்துதலை காட்டுகிறது.

2.நாம் நம்முடைய சரீரத்தில் தேவனை மகிமைப்படுத்துவதற்கேதுவான விதத்தில் ஆடையணிந்து நம்மை சுற்றியுள்ள சமுதாயத்தினின்று நம்மை வேறுபடுத்தி காண்பிக்க வேண்டும் என்பதற்கு வசன ஆதாரம் தருக பக்கம் 101
கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள். (I கொரி 6:20) என்று

கூறப்பட்டள்ளதே. நம்மை தங்களுக்கு மாதிரியாக வைத்தருப்பவர்களை நாம் இடறலடைய செய்யக்கூடாது. கற்பு தூய்மை தன்னடக்கம் இவையடங்கிய நம்முடைய கிறிஸ்தவ நடக்கையினால் அவர்கள் ஆட்கொள்ளப்படவேண்டும்.

3.ஆண்கள் பெண்களின் உடையையும் பெண்கள் ஆண்களின் உடையையும் தரிக்கலாகாது பக்கம் 99,100
ஆண்கள் பெண்களின் உடையையும், பெண்கள் ஆண்களின் உடையையும் தரிக்கலாகாது. அது குழப்பத்தை உண்டாக்கும். இக்கால வாலிபர், பிறர் கவனத்தில் படாத வகையில் தங்கள் விருப்பம் போல் இரு பாலாரும் சுயாதீனமாகக் கலந்து ஜீவிக்கும்படியாக, தாங்கள் ஆண்களா, பெண்களா என்று இனங்கண்டுகொள்ளப்படக் கூடாதவாறு வஸ்திரந்தரிக்க விரும்புகின்றனர். பெண்களும் ஆண்களும் ஒன்றுபோல் காட்சியளிப்பது அவர்கள் மாம்ச இச்சையில் முறைதவறி நடப்பதற்கும் மற்றும் தீயொழுக்கங்களில் ஈடுபடுவதற்கும் மாத்திரமே வழிவகுக்கும். தேவன் அதை 'அருவருப்பு' என அழைக்கிறார். 'புருஷரின் உடைகளை ஸ்திரீகள் தரிக்கலாகாது. ஸ்திரீகளின் உடைகளை புருஷர் தரிக்கலாகாது. அப்படிச் செய்கிறவர்கள் எல்லாரும் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்' (உபா 22:5) என நாம் வாசிக்கிறோம்.

PART E

1.I தீமோ 2:9,10 மற்றும் I பேதுரு 3:3,4 ஆகிய வேதபகுதியிலிருந்து ஒரு கிறிஸ்தவன் எவ்விதம் உடையணிய வேண்டும் என்பதற்கு குறிப்புகளை எழுதுக பக்கம் 96
ஸ்திரீகளும் மரிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்கவேண்டும். I தீமோ 2:9,10
மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது.(ஐ பேது 3:3,4)

2.கிறிஸ்தவர்கள் பலரும் வெளகீக உடைகளையும் நவநாகரீகங்களையும் எவ்வித ஆட்சேபனையுமின்றி ஏற்றுகொள்வதன் காரணங்களை எழுதுக பக்கம் 100
தாங்கள் மாம்ச சிந்தையுள்ளவர்களாயிருப்பதாலோ, எதிர்பாலாரின் கவனத்தைக் கவர விரும்பவதாலோ அவர்கள் அப்படி செய்கிறதில்லை. ஆனால் பின்வரும் காரணங்களினிமித்தம் அவர்கள் அப்படி செய்கின்றனர்.
அப்படிப்பட்ட உடைகளை அநேகமாக எல்லோரும் அணிந்கொள்வதை அவர்கள் காண்கின்றனர்.
உலகத்தோட ஒத்த வாழாதவர்கள் என்று தங்களை உலகம் குற்றஞ்சாட்டும் என அவர்கள் பயப்படுகிறார்கள்.
பெற்றோராலும் ஞாயிறுபள்ளி ஆசியர்களாலும் தேவ ஊழியராலும் திருத்தப்படாமல், அவர்கள் சிறுபிராயம் முதற்கொண்டே இவ்வித வஸ்திரங்களை தரித்து பழகியிருக்கின்றனர்.
மனந்திரும்புதல் என்பது தங்கள் தனித்தன்மை முழுவதிலும் முற்றிலும் மாற்றமடைவது அதாவது உடை முக அலங்காரம், தோற்றம் இவை உட்படி தங்களது ஆவி ஆத்துமா சரீரம் அனைத்திலும் மாற்றமடைவது என்பதை அவர்கள் உணராதிருக்கின்றனர்.
தேவனுடைய வசனம் இதைக்குறித்து என்ன சொல்லுகிறது என்பதை அவர்கள் விளங்கிக் கொள்ளாதவர்களாயிருக்கின்றனர்.

3.தலைமயிரை நீளமாய் வளர்க்கும் புருஷர்கள் பற்றி சில குறிப்புகள் எழுதுக பக்கம் 106,107
ஒவ்வொரு காலத்திலும் பிரசித்தி பெற்ற மனுஷருங்கூட தலைமயிரை நீளமாக வளர்க்க வேண்டும் என்ற சோதனைக்கு ஆளாகியிருந்திருக்கிறார்கள். ஆனால் கடந்த காலத்திலிருந்த பெரிய மனிதரோ, அல்லது தற்கால நவீன மனிதரோ நமக்கு அதிகாரப்பூர்வமான மாதிரிகள்

அல்லர். ஜனங்களை ஒரு நாள் நியாயந்தீர்க்கப்போகிற தேவனுடைய வார்த்தையே நமத ஒரே அதிகாரப்பூர்வமான பிரமாணமாயிருக்கிறது.
i.புருஷன் தன் தலை மயிரை நீளமாய் வளர்கிறது அவனுக்கு கனவீனமாயிருக்கிறது (I கொரி 11:14) அப்.பவுலுக்கு நீளமான தலைமயிர் இருக்கவில்லை. அவ்விதமிருந்திருந்தால் ˙அவர் இதை சொல்லியிருந்திருக்கமாட்டார்.

ii.தேவனுடைய ஆவியானவர் இவ்விதமாய் எழுதும்படி எசேக்கியேலை ஏவினார். ‘அவர்கள் தங்கள் தலைகளைச் சிரையாமலும், தங்கள் மயிரை நீளமாய் வளர்க்காமலும், தங்கள் தலைமயிரைக் கத்தரிக்கக்கடவர்கள். (எசேக்கியேல் 44:20)

iii.கர்த்தராகிய இயேசுவுக்குங்கூட நீளமான தலைமயிர் இருக்கவில்லை. அவர் தன் தலைமயிரை நீளமாக வளர்த்திருந்தால் அவரை தனக்கு திருஷ்டாந்தமாகவும் மாதிரியாகவும் கொண்டிருந்த ˙அப். பவுலம் தனது தலைமுடியை நிளமாக வளர்த்தியிருப்பார்.

4.நசரேய விரதத்துக்கடுத்த பிரமாணங்கள் யாவை?
இயேசு ஒரு நசரேயன் அல்ல என்று நாம் எப்படி கூறலாம் பக்கம் 101
ஒரு நசரேயர் திராட்சரசத்தினால் செய்த எவ்விதமான பானத்தையும் குடியாமலும், திராட்சப்பழங்களையாவது திராட்ச வற்றல்களையாவது புசியாமலும், இருக்கவேண்டும். திராட்சரசத்தையும் மதுபானத்தையும் விலக்கக்கடவன்; அவன் திராட்சரசத்தின் காடியையும் மற்ற மதுபானத்தின் காடியையும், புசிப்தும் குடிப்பதும் தடைசெய்யப்பட்டிருந்தது.
அவன் நசரேய விரதங்காக்கும் நாளெல்லாம் சவரகன் கத்தி அவன் தலையின்மேல் படலாகாது,.
அவன் கர்த்தருக்கென்று விரதங்காக்கும் நாளெல்லாம் யாதொரு பிரேதத்தண்டையில் போகக்கூடாது.
ஆனால் இயேசு திராட்சப்பழச்சாறு குடித்த சந்தர்பங்கள் உள்ளன. (லூக்கா 7:34, 22:18)
இயேசு பிரேதத்தண்டையில் போனது மாத்திரமல்ல அவற்றை தொட்டுமிருக்கிறார் (மாற்கு 5:41, லூக்கா7:14)

PART F

1.தகுதியான வஸ்திரமும் அலங்கரிப்பும் ˙என்பது பற்றி வேதாகமம் கூறுவது யாது பக்கம் 96-100
ஸ்திரீகளும் மரிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்கவேண்டும். (I திமோ 2:9,10)
மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது (I பேதுரு 3:3,4)

2.நம் புறம்பான வஸ்திரங்கள் நம்முடைய உள்ளான தூய்மை, தேவபக்தி, சாந்தம் மற்றும் இதர கிறிஸ்தவ நற்பண்புகளை வெளிப்படுத்த வேண்டும் என்பதை விவரி
கண்ணியக் குறைவையும் மறுபாலினரின் கவனத்தைக் கவர்ந்து அவர்களில் இச்சைகளைத் தூண்டி விடுதலையும் தவிர்க்கும் வண்ணம் நம் சரீரத்தை சரியான விதத்தில் மூடத்தக்க தகுதியான கண்ணியமான எளிமையான உடைகளை நாம் தரிக்க வேண்டும். இல்லையேல் அது நம்மைக் காணும் மறுபாலாருக்கு சங்கடத்தை உண்டாக்கும் மற்றும் நம்மை தங்களுக்கு மாதிரியாகக் கொண்டுள்ளவர்கள் இடறுவதற்கும் அது ஏதுவாகும். விசேஷமாக ஸ்திரீகள் விஷயத்தில், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிகொள்ளுகிறவர்களுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினால் தங்களை அலங்கரிக்க வேண்டியவர்களாகிய மனந்திரும்பின தேவபிள்ளைகள் குட்டையான பாவாடை அரைகுறையான பாவாடைகள், கையில்லா

சட்டைகள் சரீரத்தை இறுகப்படிக்கும் வஸ்திரங்கள் ஆகியவற்றை முற்றிலும் தவிர்க்க வேண்டும். அப்படிபட்ட உடைகள் தேவனுடைய பார்வையிலும் சபையிலும் அருவருப்பாயிருக்கின்றன.
கர்த்தராகிய இயேசு ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடு விபசாரஞ் செய்தாயிற்று என்று கூறினார் (மத் 5:28). ஒரு ஸ்திரீயை வெறுமனே இச்சையோடு பார்ப்பதே இவ்வளவு பெரிய பாவமாக இருக்குமென்றால், மற்றவர்கள் தன்னை இச்சையோடு பார்க்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் அரைகுறையாக உடை அணிதல் எவ்வளவு பயங்கரமான பாவமாயிருக்கும்.
கண்களின் இச்சை மாம்சத்தின் இச்சை ஜீவனத்தின் பெருமை ஆகியவற்றை திருப்திப்படுத்துவதற்காக நாம் எதையும் செய்யக் கூடாது என்பதே இவ்விஷயத்தை பற்றிய கிறிஸ்தவ நியமம் ஆகும். சரீரத்தின் ஈசைகளுக்கு இணங்கிப் போய் அதற்கு பகட்டையும் அழகையும் கொடுப்பதின் மூலமாக நம்முடைய மாம்சம் நம்முடைய ஈத்துமாவை ஆளுகை செய்யும்படி அதற்கு நாம் அதிகாரம் அளிக்கிறோம். இவ்விதம் நாம் எப்போதும் நம்பைப் பற்றியே நினைவுள்ளவர்களும் உலக சிந்தையுள்ளவர்களும் பூமிக்குரிய காரியங்களினால் கட்டப்பட்டவர்களுமாகிறோம்.

‘அவள் சுகபோகமாய் இன்பமாய் வாழ்ந்தாள். இப்போது அதற்கு சமமாக வாதைகளையும் துக்கங்களையும் அவளுக்கு கொடுங்கள் (வெளி 18:7 – Living Bible)
நாம் உடைகளுக்காக மிக அதிகமான பணத்தை செலழித்து, சுகபோகத்துக்காகவும் சிற்றின்பத்துக்காகவும் ஆடை அணிகிறவர்களாயிருந்தால் தேவனுடைய வசனம் ˙அதற்குச் சமமான வாதைளும் துக்கங்களும் அத்துடன் இணைக்கப்படும் என்று நம்மை எச்சரிக்கிறது. நாம் எல்லாவற்றிலும் தாழ்மையாகவும் எளிமையாகவும் இருப்பது நல்லது. மயிரை பின்னுதலுக்கு அல்லது நாகரீகமான சிகை அலங்காரத்துக்கு தேவனுடைய வசனம் எதிராயிருக்கிறது (I திமோ 2:9, I பேதுரு 3:3)
பொன் அல்லது விலையேறப்பபெற்ற கற்கள் ஆபரணங்கள் மனந்திரும்பிய கிறிஸ்தவர்கள் தங்கள் சரீரத்தில் தரித்துக்கொள்ள வேண்டியவற்றின் ஒரு பகுதி அல்ல.
சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியினால் நம் உள்ளான மனுஷனை நாம் அலங்கரிக்க வேண்டும என நமக்கு கட்டளையிடப்பட்டிருக்கிறது. அது தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது. உள்ளான மனுஷனையும் புறம்பான மனுஷனையும் ஒருமிக்க அலங்கரிப்பதென்பது கூடாத காரியம். அவை ஒன்றுக்கொன்று முரண்பாடானவை. உலக மனிதர் புறம்பான மனிதனை அலங்கரிப்பதையே விரும்பித் தெரிந்து கொளுகின்றனர். மனந்திரும்பியர்களோ தாங்களாகவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அழகினால் தங்கள் உள்ளான மனிதனை அலங்கரிப்பதை தெரிந்து கொளுகின்றனர். கிறிஸ்துவின் மணவாட்டிக்கு தெய்வீக அலங்கரிப்பேயன்றி வேறு அலங்கரிப்பு இல்லை.

பாடம் 11
புகைபிடித்தலும் போதைப் பொருட்களும்

PART B

1.போதைபொருட்களுக்கு அடிமைப்பட்டிருப்பவர்கள் அதனின்று தீர்வு காண்பதற்கான ஒரே வழி என்ன?
கர்த்தராகிய இயேசு பக்கம் 115

2.புகைபிடிக்கும் பழக்கம் எந்த நூற்றாண்டில் ஒரு கொள்ளைநோயைப் போல் உலகம் முழுவதும் பரவியது?
பதினைந்தாம் நூற்றாண்டு பக்கம் 109

3.சூனியம் ̇செய்தல் என்ற வார்த்தைக்கு கிரேக்கமொழியில் எந்த பதம் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது?
∴பார்மக்கியா Pharmakeia

4.Pharmakeia என்பதன் பொருள் என்ன?
போதை மருந்துகள் கொடுத்தல் பக்கம் 113

5.எவைகளை உபயோகிப்பவன் தன மனதின்மேல் தனக்கிருக்கும் கட்டுப்பாட்டை இழந்துபோகிறான்?
போதைப்பொருட்கள் பக்கம் 114

6.பாவஞ்செய்கிற எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான் என்று கூறியது யார்?
இயேசு (யோவான் 8:34) பக்கம் 113

7.புகைபிடிப்பவர்கள் வியர்த்தமாக்கும் கிருபையின் கிரியைகள் யாவை?
இயேசுவின் பிராயச்சித்த பலியிலுள்ள மீட்பு, சுகமாகுதல்

8.சத்தியத்தை அறியும் அறிவை அழைந்தபின்பு நாம் என் செய்யக்கூடாது? அப்படி செய்தால் என்ன இராது? எந்த நிருபத்தில் இதை வாசிக்கிறோம்?
மனப்பூர்வமாய் பாவஞ்செய்யக்கூடாது. பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனி இராது. எபிரேயர் (எபி 10:26,27) பக்கம் 112

PART D

1.புகை பிடிக்கிறவன் பாவத்துக்கு எவ்விதம் அடிமையாயிருக்கிறான்?
புகைபிடித்தல் ˙இயற்கைக்கு மாறான ஒரு இச்சையையும், அதின் மேல் அடங்காத ஆவலையும் உண்டுண்ணுகிறது. அது எப்போதும் வழக்கமாக திருப்தி செய்யப்பட வேண்டிய ஒன்றாகி விடுகிறது. இப்பழக்கத்திற்காளானவன் இவ்வடங்கா ஆசையையும் இச்சையையும் எதிர்த்து நிற்க சத்தியற்றவனாயிருக்கிறான். உண்மையாகவே புகையிலைக்கு ஒரு அடிமையாகிவிடுகிறான். 'பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான்' (யோவான் 8:34) என இயேசு கூறியுள்ளார். புகைபிடிக்க வேண்டுமென்ற தீராத ஆவல் திட்டவட்டமாகவே மாம்ச இச்சையாக இருக்கிறது. புகைப்பிடிப்பவன் பாவத்துக்கு அடிமையாக இருக்கிறான். அவனுக்கு விடுதலை தேவையாயிருக்கிறது. அவனுடைய விடுதலை கரத்தராகிய இயேசுவில் மாத்திரமே இருக்கிறது. 'குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்' (யோவான் 8:36)

2.நமக்குள்ளே வாசம்பண்ணும் தேவனுடைய பிரசன்னத்தை நாம் கனம்பண்ண வேண்டும். பக்கம் 112
புகைபிடித்தல் சமூக விரோதமானதும் தன் தன்மையின்படியே அசுத்தமானதுமாயிருக்கிறது. புகைபிடிக்கும் பழக்கமுள்ள ஆணோ பெண்ணோ தேவனை கனம் பண்ணுகிறதில்லை. சில வருடங்களுக்கு முன்பு, பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு முன் புகைபிடிக்கத்துணியமாட்டார்கள். பெரியவர்களுங்கூட பள்ளிகளிலும் ˙அலுவலகங்களிலும் தொழிற்சாலைகளிலும் புகைபிடிப்பது தவிர்க்கப்பட்டிருக்கிறது. ஆலயங்களில் அல்லது கோவில்களில் ஜனங்கள் புகைபிடிப்பதில்லை. ஏனெனில் அப்படிப்பட்ட இடங்களில் கடவுள் வாசம் பண்ணுகிறார் என்ற பயம் அவர்களில் இருக்கிறது. ஆனால் வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவர் கைகளால் கட்டப்பட்ட கோவில்களில் வாசம்பண்ணுகிறதில்லை என்பதையும் 'நம்முடைய சரீரம் பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறது என்பதையும் அவர்கள் அறியாதவர்களாயிருக்கின்றனர். (அப்.17:24: I கொரி 6:19) எனவே புகைபிடிக்கும் பழக்கத்தினால் தீட்டுப்படாதபடிக்கு அதற்கு நீங்கலாக நம் சரீரத்தை காத்துக்கொண்டு இவ்விதமாய் நமக்குள்ளே வாசம் பண்ணும் தேவனுடைய பிரசன்னத்தை நாம் கனம் பண்ணவேண்டும். ஒருவன் தேவனுடைய ஆலயத்தைத் தீட்டுப்படுத்தினால், அவனைத் தேவன் அழிப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம். (I கொரி 3:17)

PART E

1.போதை பொருட்களை பயன்படுத்துவதால் உண்டாகும் விளைவுகளை எழுதுக பக்கம் 114,115
போதைப்பொருட்களுக்கு அடிமைகளாயிருக்கும் தொழிலாளிகள் தங்கள் கடமையைச் சரிவர ஆற்றத்தவறுவதாலும் முரண்பாடான தீர்மானங்களை எடுப்பதாலும் ˙பொருள் உற்பத்தி தாமதிப்பதினால் தொழில்துறையானது பெருத்த நஷ்டங்களை சந்திக்கிறது.
போதைப்பொருட்களை உபயோகிப்பதன் மூலம் இளைஞர்கள் தங்கள் கல்விச் சார்ந்த சாதனைகளில் தோல்வியுறுகிறார்கள்.
போதைப் பொருட்கள் குதூகலம் உண்டாக்கலாம். ஆனால் முடிவாக அவை கொன்றுபோடுகின்றன. நரம்புக் கோளாறுகள், ஞாபக சக்தியை இழத்தல், மருட்சி, திகில் உண்டாக்கும் கனவுகள், தீய அறிவு உணர்ச்சிகள், வலுச்சண்டை, கொடூரசெயல்கள் இயற்கைக்கு மாறான பாலின உணர்ச்சிகளின் தூண்டுதல்கள், தற்கொலை, மரணம் போன்றவை.
போதைப்பொருட்கள், சாத்தான் மனிதவர்க்கத்தை அழிக்கும்படியாக உபயோகிக்கும் கருவிகளில் ஒன்றாக எப்போதம் இருந்துவந்திருக்கின்றன. அவற்றை உபயோகிப்பவன் தன்

மனதின்மேல் தனக்கிருக்கும் கட்டுப்பாட்டை இழந்துபோவதுடன், அசுத்த ஆவிகளால் எளிதான ஈட்கொள்ப்பட்டு. அவற்றினால் கட்டுப்படுத்தப்படுகிறான். இதுவே சாத்தானின் நோக்கமாகும் போதைப்பொருட்கள் ஒரு நபரில் பக்திக்குரிய உணர்வுகளைத் தூண்டிவிடுகின்றன என்பது பிசாசிடமிருந்து வரும் வஞ்சனையான ஓர் ஆலோசனையே. அது மனிதனைப் போதைப் பொருட்களின் ˙தெய்வமாகிய பிசாசிடம் மட்டுமே நெருங்கிச் சேரப்பண்ணுகிறது. போதைப்பொருட்களை உட்கொள்ளுதல் தேவனுடைய ஆலயமாயிருக்கும் நம்முடைய சரீரத்தைத் தீட்டுப்படுத்துகிறது. அது தேவனுடைய கோபத்தை வரவழைக்கிறது.

பாடம் ˙ 12
திராட்சரசமும் மதுபானமும்

PART B

1.பாத்திரத்தில் பளபளப்பாய் ˙தோன்றும் என்று எதைக்குறித்து சொல்லப்பட்டிருக்கிறது?
மதுபானம் பக்கம் 130 நீதி 28:31

2.அவர்கள் சாராயத்தினால் வழிதப்பி, தீர்க்கதரிசனத்தில் மோசம் போய், நியாயந்தீர்கிறதில் இடறுகிறார்கள் என்று எழுதிய தீர்க்கதரிசி யார்? பக்கம் 124
ஏசாயா (ஏசா 28:1,3,7)

3.'அவன் திராட்சரசத்தைக் கடித்து தன் கூடாரத்தில் வஸ்திரம் விலகிப் படுத்திருந்தான்' என்று யாரைக் குறித்து நாம் வாசிக்கிறோம்?
நோவா (ஆதி 9:21) பக்கம் 125

4.நசரேயனாயிருந்த இஸ்ரவேலின் நியாயாதிபதி யார்?
சிம்சோன் (நியா 13:4,5) பக்கம் 122

5. வேதாகமத்திலுள்ள எந்தப்புத்தகத்தில் 'மதுபானம் பளபளப்பாய் தோன்றும் போது நீ அதைப் பாராதே என்ற எச்சரிப்பை நாம் வாசிக்கிறோம்?
நீதிமொழிகள் (நீதி 28:31) பக்கம் 130

6.மூன்று வாரங்களாகிய நாட்கள் நிறைவேமட்டும் ரூசிகரமான அப்பத்தை நான் புசிக்கவில்லை என்று சொன்னது யார்?
தானியெல் (தானி 10:2,3) பக்கம் 116

7.புதிய ஏற்பாட்டு தேவஜனங்களாகிய நாம் யார் என்று அழைக்கப்படுகிறோம்?

ராஜாக்களும் ஆசாரியர்களும் (வெளி 1:6) பக்கம் 132

8.பழைய ஏற்பாட்டு ஆசாரியர் எங்கு ஊழியஞ்செய்யும்போது திராட்சரசம் குடிக்கக்கூடாது என்று கட்டளையிடப்பட்டிருந்தனர்?
ஆசரிப்பு கூடாரம் பக்கம் 120

9.நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் சாகாதிருக்கவேண்டுமானால், ஆசரிப்புக்கூடாரத்துக்குள் பிரவேசிக்கிறபோது திராட்சரசத்தையும் மதுவையும் குடிக்வேண்டாம் என்று கர்த்தர் யாரிடம் ˙ கூறினார்?
ஆரோன் (லேவி 10:8)பக்கம் 120

10.இஸ்ரவேல் பத்திரர் மத்தியில் ‘கர்த்தருக்கென்று தங்களை வேறுபிரித்துக்கொள்ளவேண்டுமென்று தங்கள் இருதயத்தில் பலமாய் எவப்பட்ட புருஷர்களும் ஸ்திரீகளும் மேற்கொண்ட விரதத்தின் ˙ பெயர் என்ன?
நசரேய விரம் பக்கம் 121

11.இறைச்சியும் திராட்சரசமும் என் வாய்க்குள் போகவுமில்லை என்றது யார்?
தானியேல் (தானி 10:2,3)

12.தானியேல் 10:2,3 ல் குறிப்பிட்டுள்ள திராட்சரசமும் தானியேல் 1:8 ல் குறிப்பிட்டுள்ள திராட்சரசமும் பற்றி எழுதுக
எத்தீமையம் இல்லாத புளிக்காத நுரைக்காத திராட்சரசம், சரீரம் ˙ ஆத்துமா, ஆவி, சிந்தனை, நல்நடக்கை இவற்றை பாதிக்ககூடிய போதை தரும் திராட்சரசம்.

13.ரேகாபின் குமாரன் பெயர் என்ன?
யோனதாப்

14.ரேகாபுடைய குமாரன் தன் புத்திரருக்கு எதை குடிக்ககூடாத என்று கட்டளையிட்டான்?
திராட்சரசம்

15.ரேகாபின் குமாரர்மேல் வந்த ஆசிர்வாதம் என்ன? வசன ஆதாரம் தருக
சகல நாட்களிலும் எனக்கு முன்பாக நிற்கத்தக்க புருஷன் ரேகாபின் குமாரனாகிய யோனதாபுக்கு இல்லமற்போவதில்லையென்று இஸரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (எரே 35:13,14,18,19)

16.திராட்சரசம் ˙ குடிக்ககூடாது என்று தன் மனதில் திர்மானம் பண்ணின வாலிபன் பெயர் என்ன?
தானியேல் (தானி 1:8)

PART D

1.கர்த்தரோடு நெருங்கி ஜீவிக்கவும் அவரால் உபயோகப்படுத்தபடவும் விரும்புகிறவர்களுக்கு மதுபானம் சம்பந்தப்பட்ட யாதொன்றோடும் யாதொரு சம்பந்தமும் இருக்கலாகாது என்பதை விவரி
மதுபானத்தையும் மற்றும் போதையுண்டுபண்ணும் பானங்களையும் அருந்துகிறவர்கள் தேவனுக்கென்று தங்களை வேறுபிரித்துக்கொண்டவர்கள் அல்லர்.
இஸ்ரவேலின் நியாயாதிபதிகளில் ஒருவனாகிய சிம்சோன் கிறிஸ்துவுக்கு முன்னோடியாகிய யோவான்ஸ்நானன் ஆகிய இருவரும் நசரேயராயிருந்தனர். தேவன் அவர்களுக்கு தந்த ஊழியத்தை அவர்கள் ˙ செய்து நிறைவேற்றும்படி அவர்கள் திராட்சரசம் குடிக்கக்கூடாது என கட்டளையிடப்பட்டிருந்தனர் (நியா 13:4,5) லூக் 1:25)

2.கர்த்தராகிய இயேசு ஒருக்காலும் போதையூட்டும் திராட்சரசத்தைக் குடிக்வில்லை என்பதை விளக்கு பக்கம் 126

கர்த்தராகிய இயேசு ஒருக்காலும் போதையூட்டும் திராட்சரசத்தைக் குடிக்வில்லை. ஆனால் அவர் திராட்சப்பழரசத்தைக் குடித்தார் என்பது தெளிவாக இருக்கிறது. பஸ்கா பண்டிகையன்று பின்வருமாறு சொல்லி, அவர் திராட்சப்பழரசத்தைப் பரிமாறினார். 'நீங்கள் இதைவாங்கி உங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளுங்கள்; தேவனுடைய ராஜ்யம் வருமளவும் நான் திராட்சப்பழரசத்தைப் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்' (லூக்கா 22:17,18) வெள்ளைப்போளம் கலந்த திராட்சரசத்தை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள்; அவர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை (மாற் 15:23)
ஏனென்றால் அது அவருடைய வலி உணர்வை மரத்துப்போகச் செய்வதற்காக் கொடுக்கப்பட்ட ஒரு போதையூட்டும் திராட்சரசமாயிருந்தது.

3.மது அருந்தும் பழக்கமுடையவர்களுக்கு கர்த்தராகிய இயேசு விரோதியாயிருந்தார் என்பதற்கு உதாரணம் தருக
புசித்துக் குடித்து வெறிக்கவும் தலைப்பட்ட உண்மையில்லாத உழியக்காரனைப்பற்றிய உவமையில் அவனைக் கடினமாய்த் தண்டித்து, உண்மையில்லாதவர்களோடே அவனுக்குப் பங்கை நியமிப்பான். அநேக அடிகள் அடிக்கப்படுவான் என்றும் கர்த்தராகிய இயேசு தமது சீஷர்களிடம் கூறினார் (லூக் 12:45-47)

4.போதையூட்டும் திராட்சரசத்தை அவர் ஒருபோதும் சிருஷ்டிக்கவில்லை என்பதை விளக்குக
கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்த் தேவன் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார் என்பதை நாம் அறிவோம். இருப்பினும் போதையூட்டும் திராட்சரசத்தை அவர் ஒருபோதும் சிருஷ்டிக்கவில்லை. திராட்சச்செடியும் திராட்சப்பழங்களம் தேவனிடத்திலிருந்து புதியவையாக வருகின்றன. ஆனால் திராட்சப் பழரசத்தைப் போதையூட்டும் பானமாக மாற்றுவது மனிதனே. கர்த்ராகிய இயேசுவின் சகல அற்புதங்களும் அவருடைய சிருஷ்டிப்பின் வல்லமையை வெளிப்படுத்தின. ஆகையால் அவர் சுத்தமான தண்ணீரை, நல்ல புதிதான திராட்சப்பழச்சாறாக மாற்றினார். போதை தரும் திராட்சரசத்தையல்ல, அவர் நல்ல ரசத்தையே தந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது (யோவான் 2:10)

PART E

1.தேவன் புது திராட்சரசத்தைத் தமது ஜனத்திற்கு ஆசீர்வாதமாக கட்டளையிட்டிருக்கிறார். இதை விளக்கும் சில வேதவாக்கியங்களை எழுதுக
தேவன் உனக்கு வானத்துப்பனியையும் பூமியின் கொழுமையையும் கொடுத்து, மிகுந்த தானியத்தையும் திராட்சரசத்தையும் தந்தருளுவாராக (ஆதி 27:28)
அது கோதுமையும் வாற்கோதுமையும் திராட்சச்செடிகளும் அத்திமரங்களும் மாதளஞ்செடிகளுமுள்ள தேசம், அது ஒலிவமரங்களும், எண்ணெயும் தேனுமுள்ள தேசம் (உபாகமம் 8:8)
இதோ, உழுகிறவன் அறுக்கிறவனையும், திராட்சப்பழங்களை ஆலையாடுகிறவன் விதைக்கிறவனையும் தொடர்ந்துபிடித்து, பர்வதங்கள் திராட்சரசமாய் வடிகிறதும், மேடுகளெல்லாம் கரைகிறதுமான நாட்கள் வரும் என்று கர்த்தர் சொல்லுகிறார். (ஆமோஸ் 9:13)
நான் நிலத்தின்மேலும், மலைகளின்மேலும், தானியத்தின்மேலும், புது திராட்சரசத்தின்மேலும், எண்ணெயின்மேலும், பூமியில் விளைகிற எல்லாவற்றின்மேலும், மனுஷரின்மேலும், மிருகங்களின்மேலும், கைப்பாடு அனைத்தின்மேலும் வறட்சியை வருவித்தேன் என்றார். (ஆகாய் 1:11)
அக்காலத்தில் பர்வதங்கள் திராட்சரசத்தைப்(புது திராட்சரசத்தை) பொழியும், மலைகள் பாலாய் ஓடும், யூதாவின் ஆறுகள் எல்லாம் பிரவாகித்து ஓடும்; ஒரு ஊற்று கர்த்தருடைய ஆலயத்திலிருந்து புறப்பட்டுச் சித்தீம் என்னும் பள்ளத்தாக்கை நீர்ப்பாய்ச்சலாக்கும். (யோவேல் 3:18)

2.திராட்சரசம் மதுபானம் பற்றி நீதிமொழிகளில் கண்ட வசனங்களை எழுதுக (அ) திராட்சரசம், மதுபானம் இவற்றை பற்றி நீதிமொழிகளின் புத்தகம் அளிக்கும் எச்சரிப்பு என்ன?
தேவபுத்திரர் யாவருக்கும் நீதிமொழிகளின் புத்தகத்தில் ஒரு தகப்பன் மகனுக்குக் கூறுவதுபோன்ற எச்சரிப்பு தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வெச்சரிப்புகள்

தெளிவானவையாகவும் நேரடியானவையாகவும் வலியுறுத்துகிறவையாகவும் கவனத்தை ஈர்க்கிறவையாகவும் முடிவான எச்சரிப்பாகவும் இருக்கின்றன. தேவனுடைய வசனத்தை நேசிக்கிற எந்த உண்மையுள்ள மனிதனும் இதை மறுத்துரைக்க முடியாது. ஐயோ! யாருக்கு வேதனை? யாருக்குத் துக்கம்? யாருக்குச் சண்டைகள்? யாருக்குப் புலம்பல்? யாருக்குக் காரணமில்லாத காயங்கள்? யாருக்கு இரத்தங்கலங்கின கண்கள்? மதுபானம் இருக்கும் இடத்திலே தங்கித் தரிப்பவர்களுக்கும், கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர்களுக்குந்தானே. மதுபானம் இரத்தவருணமாயிருந்து, பாத்திரத்தில் பளபளப்பாய்த் தோன்றும்போது, நீ அதைப் பாராதே; அது மெதுவாய் இறங்கும். முடிவிலே அது பாம்பைப்போல் கடிக்கும், விரியனைப்போல் தீண்டும். உன் கண்கள் பரஸ்திரீகளை நோக்கும்; உன் உள்ளம் தாறுமாறானவைகளைப் பேசும். நீ நடுக்கடலிலே சயனித்திருக்கிறவனைப்போலும், பாய்மரத்தட்டிலே படுத்திருக்கிறவனைப்போலும் இருப்பாய். (நீதி 23:29-34)
திராட்சரசம் பரியாசஞ்செய்யும், மதுபானம் அமளிபண்ணும்; அதினால் மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல. (நீதி 20:1)
திராட்சரசம் குடிப்பது ராஜாக்களுக்குத் தகுதியல்ல; லேமுவேலே, அது ராஜாக்களுக்குத் தகுதியல்ல; மதுபானம் பிரபுக்களுக்குத் தகுதியல்ல. மதுபானம்பண்ணினால் அவர்கள் நியாயப்பிரமாணத்தை மறந்து, சிறுமைப்படுகிறவர்களுடைய நியாயத்தையும் புரட்டுவார்கள். (நீதி 31:4,5)

3.மது அருந்துதலாகிய பாவத்திற்கு எதிராக தீர்க்கதரிசனம் உரைத்த சில தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை எழுதுக

ஏசாயா : சாராயத்தை நாடி அதிகாலமே எழுந்து, மதுபானம் தங்களைச் சூடாக்கும்படி தரித்திருந்து, இருட்டிப்போகுமளவும் குடித்துக்கொண்டேயிருக்கிறவர்களுக்கு ஐயோ!
(ஏசாயா 5:11) எப்பிராயீமுடைய வெறியரின் பெருமையான கிரீடத்துக்கு ஐயோ! மதுபானத்தால் மயக்கமடைந்தவர்களின் செழிப்பான பள்ளத்தாக்குடைய கொடுமுடியின்மேலுள்ள அலங்கார ஜோடிப்பு வாடிப்போகும் புஷ்பமே!
எப்பிராயீமுடைய வெறியரின் பெருமையான கிரீடம் காலால் மிதித்துப்போடப்படும்.
ஆனாலும் இவர்களும் திராட்சரசத்தால்மயங்கி, மதுபானத்தால் வழி தப்பிப்போகிறார்கள்; ஆசாரியனும் தீர்க்கதரிசியும் மதுபானத்தால் மதிமயங்கி, திராட்சரசத்தால் விழுங்கப்பட்டு, சாராயத்தினால் வழிதப்பி, தீர்க்கதரிசனத்தில் மோசம்போய், நியாயந்தீர்க்கிறதில் இடறுகிறார்கள். (ஏசாயா 28:1,3,7)

ஓசியா : வேசித்தனமும் திராட்சரசமும் மதுபானமும் இருதயத்தை மயக்கும்.
அவர்கள் தங்கள் தேவனுக்குக் கீழ்ப்பட்டிராமல் சோரமார்க்கம் போனார்கள். (ஓசியா 4:11,12) நம்முடைய ராஜாவின் நாளென்று சொல்லி, அதிபதிகள் திராட்சரசத் துருத்திகளால் அவனுக்கு வியாதியுண்டாக்குகிறார்கள்; சரசக்காரரோடேகூட அவன் தன் கையை நீட்டுகிறான். (ஓசியா 7:5)

ஆமோஸ்: உங்கள் குமாரரில் சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், உங்கள் வாலிபரில் சிலரை நசரேயராகவும் எழும்பப்பண்ணினேன்; இஸ்ரவேல் புத்திரரே, இப்படி நான் செய்யவில்லையா என்று கர்த்தர் கேட்கிறார். நீங்களோ நசரேயருக்குத் திராட்சரசம் குடிக்கக் கொடுத்து, தீர்க்கதரிசிகளை நோக்கி: நீங்கள் தீர்க்கதரிசனஞ்சொல்லவேண்டாம் என்று கற்பித்தீர்கள். (ஆமோஸ் 2:11, 12)

மீகா மனம்போகிற போக்கின்படிபோய், அபத்தமானதை உரைக்கிற ஒருவன், திராட்சரசத்தையும் மதுபானத்தையுங்குறித்து நான் உனக்குப் பிரசங்கிப்பேனென்றால், அவனே இந்த ஜனத்திற்கு ஏற்ற பிரசங்கியாயிருப்பான். (மீகா 2:11)

ஆபகூக்: அவன் மதுபானத்தினால் அக்கிரமஞ்செய்து அகங்காரியாகி, வீட்டிலே தரியாமல், அவன் தன் ஆத்துமாவைப் பாதாளத்தைப்போல விரிவாக்கித் திருப்தியாகாமல், மரணத்துக்குச் சமானமாய்ச் சகல ஜாதிகளையும் தன் வசமாகச் சேர்த்து, சகல ஜனங்களையும் தன்னிடமாகக் கூட்டிக்கொண்டாலும், (ஆப 2:5)

4.போதை தரும் புளித்த திராட்சரசத்தினால் உண்டாகும் நாசகரமான விளைவுகள் ஏதேனும் ஐந்தினை எழுதுக பக்கம் 131,132

i.மதுபானம் ˙அருந்தும் துர்ப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டவர்கள் வேனை, துக்கம், சண்டைகள், புலம்பல், காரணமில்லாத காயங்கள், இரத்தங்கலங்கின கண்கள் ஆகியவற்றைச் சுதந்த்ரிப்பார்கள். ஏனெனில் மதுபானம் அவர்களுடைய இச்சையை தூண்டி எழுப்பிவிட்டு. அவர்களது மன எழுச்சிகளின் ˙மேல் ஆதிக்கம் செலுத்தி, அவர்களுடைய சிந்தனைகளைக் குழப்பி, அவர்களைத் தெளிந்த புத்தியற்றவர்களாக்கிவிடுகிறது.

ii.திராட்சரசம் பரியாசஞ்செய்யும்' புதிதாய்ப் பிழியப்பட்டிதும், புளித்த நுரைக்காததுமான திராட்சப்பழச்சாறு பரியாசஞ்செய்யும் பானமாக ஒருபோதும் கருதப்படவே முடியாது. நூாம் அதைக் குடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறொம். ஆனால் திராட்சரசம் புளித்து நுரைத்து போதையூட்டும் தன்மையுள்ளதாகும்பொது, அது மனிதரைப் பரியாசஞ்செய்ய ஆரம்பிக்கிறது. அது தந்திரமாய் 'மெதுவாய் இறங்கும். முடிவிலே அது பாம்பைப் போல் கடிக்கும். விரியனைப்போல் தீண்டும். அது மனிதருடைய ஆத்துமா, மனது, நடக்கை, சுபாவம் இவற்றில் உண்டாக்கும் விளைவு. ஒரு விரியன்பாம்பு கடிக்கும்போது அல்லது தீண்டும்போது ஒரு மனிதனுக்குள் ஏறும் மரணத்துக்கேதுவான விஷம் போன்றதாயிருக்கும்.

iii. நீ அதைப் பாராதே மதுபானத்தை வெருமனே பார்ப்பதே பாவம் என்றால் அதில் சில துளிகளைக் குடிப்பது என்பது எவ்வளவு அதிக பாவமாயிருக்கும்

iv.மதுபானமும் இச்சைக்குரிய துன்மார்க்க நடத்தைகளும் ஒன்றாக இணைந்து போகின்றன. மதுபானம் அருந்துபவர்களின் கண்கள் 'பரஸ்திரீகளை நோக்கும்' போது அவ்வெறியர் தங்கள் மாம்சீகமான ஆசை இச்சைகளை கட்டுப்படுத்தமுடியாதவர்களாயிருக்கின்றனர்.

vi. அது ராஜாக்களுக்கு தகதியல்ல புதிய ஏற்பாட்டு தேஜனங்களாகிய நாம் ராஜாக்களும ஆசாரியர்களும் என அழைக்கப்படுகிறோம். (வெளி 1:6) முடிவிலே நாம் இருக்கவேண்டிய நித்திய ஸ்தானம் கிறிஸ்துவின் அதே சிங்காசனமேயாகும் (II தீமோ 2:12) வெளி 3:21) நாம் ராஜாக்களும் ஆசாரியர்களுமாயிருப்பதால் புளித்த திராட்சரசமும் மதுபானமும் அருந்தகூடாது என்று நமக்குங்கூட கட்டளையிடப்பட்டிருக்கிறது. அன்றியும் மதுபானங்களுக்கு தங்களை ஒப்புக்கொடுத்திருப்பவர்கள் தேவனுடைய வசனத்தில் மனமகிழ்ச்சியாயிருந்து அதைக் காத்துக்கொள்ளமுடியாது. அவர்களுக்கு சிறுமைப்பட்டவர்கள்மேல் உண்மையான அன்பிராது.

PART F

1.தங்களைத்தாங்களே குடிப்பழக்கத்திற்கு அடிமைகளாக்கிக் கொண்ட சில கிறிஸ்தவர்கள் கூறும் மூன்று பொதுவான சாக்குப்போக்குகளையும் அவற்றிற்கான பதில்களையும் எழுதுக பக்கம் 125-129.

பாடம் 13
இப்பிரபஞ்சத்தின் ஞானம்

PART B

1.அண்ட சராசரங்கள் ̇ எதினால் சிருஷ்டிக்கப்பட்டன?
தேவனுடைய ஞானத்தினால் பக்கம் 133

2.’வானங்களை ஞானமாய் உண்டாக்கினவரைத் துதியுங்கள் என்று நாம் எந்த சங்கீதத்தில் வாசிக்கிறோம்?
சங்கீதம் 136:5

3. தண்ணீர்களுக்கு மேலே பூமியைப் பரப்பினவரைத் துதியுங்கள்; என்று நாம் எந்த சங்கீதத்தில் வாசிக்கிறோம்?
சங்கீதம் 136:6

4. கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது! அவைகளையெல்லாம் ஞானமாய்ப் படைத்தீர்; பூமி உம்முடைய பொருள்களினால் நிறைந்திருக்கிறது.
என்று நாம் எந்த சங்கீதத்தில் வாசிக்கிறோம்?
சங்கீதம் 104:24

5. விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினாலே உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம். என்று எந்த வசனத்தில் வாசிக்கிறோம்?
எபி 11:3

6. எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானதுமுதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை. என்று எந்த வசனத்தில் வாசிக்கிறோம்?
ரோமர் 1: 20

7.தேவஞானத்தையே நாங்கள் பேசுகிறோம் என்று யார் எந்த புத்தகத்தில் எழுதினது?
ஆப்.பவுல் கொரிந்தியர்

7.இப்ப்ரபஞ்சத்து பிரபுக்களுக்கு இருந்த உலக ஞானத்தை பற்றி எழுதுக
உலகத்தின் ஆவியின் அதாவது இப்பிரபஞ்சத்தின் தேவனின் தந்திரமான கிரியையினால் கொடுக்கப்பட்ட உலக ஞானம் மட்டுமே மிகவும் சீர்கெட்ட நிலையில் அவர்களுக்கிருந்தது.

9.மகிமையின் கர்த்தரை சிலுவையில் அறைந்தது யார்?
இப்பிரபஞ்சத்துப் பிரபுக்கள்

10.தேவர்களுக்கு தேவனும் ராஜாக்களுக்கு ஆண்டவரும் மறைபொருள்களை வெளிப்படுத்துகிறவருமாயிருக்கிறார் என்று சொன்ன ராஜா யார்?
நேபுகாத்நேச்சார்

11.பாபிலோனிலிருந்த சனல ஞானிகளையும் காட்டிலும் ஞானத்திலும் பகுத்தறிவிலும் மிகவும் மேம்பட்டு விளங்கினது யார்?
தானியேல் (தானி 2:48)

12.கற்றுத் தேர்ந்த தேவ மனுஷராயிருந்த பரிசுத்தவான்கள் பெயரை குறிப்பிடுக
மோசே, ஏசாயா, தானியேல், அப்.பவுல்

PART D

1.உலகத்தின் ஆவியானது மனிதன் தேவனுடைய மகிமையையும் அவருடைய வல்லமையையும் அறிக்கைசெய்ய அவனுக்கு இடங்கொடுப்பதில்லை பக்கம் 134
பாவத்தின் வஞ்சனையினால் மனிதவர்த்கதத்தை தனக்குச் சிறைப்படுத்தியிருக்கும் தந்திரமான சர்ப்பமும் தேவனுடைய பிரதான சத்துருவுமாகிய சாத்தான் தேவனையும் அவருடைய வாத்குதத்தத்தையும் விசுவாசிக்க கூடாதபடி மனுஷருடைய மனதைக் குருடாக்கியிருக்கிறான் என்பது தெளிவாகிறது (II கொரி 4:4) அவன் உலகத்தின் ஆவி என்று அழைக்கப்படுகிறான். அவன் தன் சொந்த மாறுபாடான ஞானத்தினால் இவ்வுலகத்தை நிறைத்திருக்கிறான். அந்த ஞானத்தினால் நாம் தேவனை அறிந்துகொள்ளமுடியாத (I கொரி 2:6,12 1:21) எனவேதான் மனிதன் இவ்வுலகில் தன் ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்பின் மூலமாகவும் விசேஷமான ஞானத்தை வெளிப்படுத்திக் காண்பித்திருந்தாலும், அவன் தேவனில் நம்பிக்கை வைக்க முடியாதவனாகவே இருக்கிறான். ‘வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது (சங் 19:1) எனினும் உலகத்தின் ஆவியானது மனிதன் தேவனுடைய மகிமையையும் அவருடைய வல்லமையையும் அறிக்கை செய்ய அவனுக்கு இடங்கொடுப்பதில்லை.

2.கிறிஸ்துவை புறக்கணித்து தள்ளிவிட்ட இவ்வுலகத்தின் ஞானிகளுக்கு என்ன காத்துகொண்டிருக்கிறது?
பக்கம் 138,139.
ஞானிகளுடைய ஞானத்தை நான் அழித்து, புத்திசாலிகளுடைய புத்தியை அவமாக்குவேன் என்று எழுதியிருக்கிறபடியே கிறிஸ்துவை புறக்கணித்து தள்ளிவிட்ட இவ்வுலகத்தின் ஞானிகளுக்கு நியாயதீர்ப்பு காத்துகொண்டிருக்கிறது(I கொரி 1:19)

3.உன்னுடைய உண்மையான மேன்மை உன்னுடைய சாந்தகுணமேயாகும் என்பதை விளக்குக

தேவனால் பெரியர்களாக்கப்படுவதே மேன்மையடைவதற்கான ஆசிர்வதிக்கப்பட்ட வழியாகும் ‘உமமுடைய வலதுகரம் என்னை தாங்குகிறது. உம்முடைய சாந்தகுணம் என்னை பெரியவனாக்கிற்று (சங் 18:35) தேவன் உன்னை மேன்மையடைய செய்ய வேண்டுமென்றால், முதலாவது நீ தேவனுடைய வலது கரத்தில் இருக்க வேண்டும் அல்லது வேறு வார்த்தைகளில் கூறினால் தேவசித்தத்தின் மையத்தில் இருக்கவேண்டும். நீ உன் சொந்த சித்தம் செய்வதினாலுஞ்கூட மேன்மை அடைய கூடும். ஆனால் அந்த மேன்மை உன்னை அழிவுக்கு நேராக மட்டுமே வழிநடத்தும். நீ தேவனுடைய வலதுகரத்தில் அல்லது தேவசித்ததின் மையத்தில் இருந்தால் தேவன் தம்முடைய வலது கரத்தை உயர்த்துமபோது நீயும் உயர்த்தப்படுவாய் ‘உம்முடைய சாந்தகுணம் என்னை பெரியவனாக்கிற்று’ உலகம் ஒரு ஆபத்தான நிலையை சந்தித்துக்கொண்டிருக்கிறது. பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் மேல் ஆதிக்கம் செலுத்த விரும்புகிறார்கள். பிள்ளைகள் பெற்றோரின்மேல் ஆதிக்கம் செலுத்த விரும்புகிறார்கள். மனைவிகள் தங்கள் புருஷர்கள் மேலும் ஆதிக்கம் செலுத்த விரும்புகிறார்கள். ஆனால் இது குடும்பத்திலு் சமுதாயத்திலும் தேசத்திலும் குழப்பத்தையே உண்டுபண்ணுகிறது என்பதை நாம் அறிவோம். உம்முடைய சாந்தகுணம் என்னை பெரியவனாக்கிற்று. இது உண்மை. மெய்யாகவே சாந்தம் என்னும் சுபாவம் ஒரு மேன்மையான தெய்வீக சுபாவம் ஆகும். உன்னுடைய உண்மையான மேன்மை உன்னுடைய சாந்தகுணமே ஆகும்

4.உன்னை நீயே முன்னோக்கி உந்தித் தள்ளிக்கொண்டு மேன்மையடைந்தால் தேவையற்ற போராட்டங்கள் துன்பங்கள், சோதனைகள் ஆகியவற்றால் நீ சூழப்படுவாய் பக்கம் 141
தேவன் உன்னை மேன்மைப்படுத்தும்போது ‘என் மேன்மையைப் ˙பெருகப்பண்ணி என்னை எப்பக்கத்திலும் தேற்றுவீர் (சங் 71:21 Eng) தேவன் உன்னுடைய மேன்மையைப் பெருகப்பண்ணும்போது நீ ஒவ்வொரு பக்கத்திலிருந்தும், ஒவ்வொருவரிடமிருந்தும், ஒவ்வொரு ஷணப்பொழுதிலும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆறுதலைக் காண்பாய். உனக்கு விரோதமாக யாராகிலும் எழும்பினால், நீ அந்நபரிடம் உன் சாந்தகுணத்தை வெளிப்படுத்துவாய் தேவன்தாமே அச்சூழ்நிலையைப் பொறுப்பெடுத்துக் கொள்ளுவார்.

PART E

1.தேனுடைய அளவில்லா ஞானத்தைப் பற்றி எழுதுக
தேவன் நம்முடைய அளவிடப்பட முடியாததும் பெரிதும் ˙ஆராய்ந்து முடியாததுமான ஞானத்தினால் நம்மை நிறைக்க விரும்புகிறார் (ரோமர் 11:33) ஏசாயா 40:28) அதைக் கிறிஸ்துவின் மூலம் நாம் பெற்றுக் கொள்ளுகிறோம். ‘அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய கொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது. (கொலோ 2:3) நம்முடைய சித்தம் தேவனுக்கு அர்ப்பணிக்கப்படும்போது, நாம் இந்த ஞானத்தில் பங்குகொள்ளத் துவங்குகிறோம். நாம் இவ்வுலகத்திற்கடுத்த ஞானத்தை மட்டும் உடையவர்களல்லர். இவ்வுலகத்தின் ஞானிகளைப் போலல்லாமல் நமக்கு தேவனுடைய நித்திய ராஜ்யத்தைப் ˙பற்றிய ஞானத்திற்கு குருடராயிருக்கிறார்கள் என்று அப். பவுல் கூறுகிறார். இப்பிரபஞ்சத்தின் தேவனாகிய சாத்தான் பாவத்தின் வஞ்சனையின் மூலம் அவர்களுடைய மனதை அவ்வளவாக சீர்கேட்டைய பண்ணியிருக்கிறான். உலகத்தோற்றத்திற்குமுன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானத்தையே பேசுகிறோம். அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை; அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே.(ஐ கொரி 2:7,8)

2.தேவன் இருக்கிறார் என்பதையே மறுதலித்து சகல மகிமையையும் தனக்கென்றே எடுத்துக் கொள்ள ஆசை கொண்டிருக்கும் விஞ்ஞானிகள் சிலரின் நம்பிக்கை என்ன?
பெரும்பாலான விஞ்ஞானிகள் சத்திய வேதாகமத்தைப் புராணக்கதைகளின் தொகுப்பு என்று கருதுகிறார்கள். தேவன் நாம் கற்பனை செய்துகொள்ளுகிற சிருஷ்டிகர் என்றும், அவர் தம்மைத்தாமே சட்டங்களியற்றுபவராகவும் இரட்சகராகவும் நீதிபதியாகவும் முடிவில் துன்பார்க்கரையும் உலகத்தையும் அழித்துப்போடுகிறவராகவும் உரிமைகோருகிறவர் என்றும் அவர்கள் அபிப்பிராயமுள்ளவர்க்ளாயிருக்கிறார்கள். கிறிஸ்தவர்களின் விசுவாசம் என்பது அவர்க்ளது கணிப்பில் சொற்களாலான ஒரு குருட்டு விதிமுறைத் தொகுப்பும், நியாயமற்றதும், நம்பமுடியாததும் பொய்யானதுமாகக் கருதப்படுகிறத. கிறிஸ்தவ அமைப்பே மொத்தத்தில்

அவர்களுக்கு அரத்தமற்றதாய் தோன்றுகிறது. அவர்கள் தங்களுடைய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளிலும் நவீனமான சாதனைகளிலும் பெருமைபாராட்டுகிறார்கள். விஞ்ஞானமே அவர்களுடைய தேவன். ஏனெனில் ஆகாயத்திலும் விண்வெளியிலும் பறப்பதற்கு அது அவர்களுக்கு உதவி செய்திருக்கிறது. மேலும் பூமியின் மறுபத்ததில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பாரப்பதற்கும் சந்திரனுக்குத் தூதுகளை அனுப்புவதற்கும், அங்கிருந்து தூதுகளைப் பெற்றுக்கொள்வதற்கும், முழு உலகதத்தையும் மனிதவர்க்கத்தையும் சில வினாடிகளில அழித்துவிடக்கூடிய ஆயுதங்களைக் கண்டுபிடிப்பதற்கும், மற்றும் இப்படிப் பட்ட பலவற்றிற்கும் விஞ்ஞானம் உதவுகிறது. எனவே ஒழுக்கநெறி, மற்றும் சமூக சம்பந்தமான சட்டங்களை வகுத்துக்கொள்வதும், விஞ்ஞானத்தின் மூலமாகத் தாங்கள் பெற்றுக்கொண்ட அளவிற்கு ஏற்றாற்போல் தங்கள் மனச்சாட்சிக்கு பயிற்சி கொடுத்துகொள்வதும் தங்களையே சார்ந்தது என அவர்கள் நினைத்துக்கொள்கின்றனர். அவர்கள் தேவனை விசுவாசிப்பதுமில்லை. பரலோகம் என்ற இடத்தை நம்புவதுமில்லை.

பாடம் 14
உலகத்தின் ஐசுவரியங்கள்

PART B

1.'எல்லா ஐசுவரியமும் தேவனிடத்திலிருந்து வருகிறது என்னும் உண்மையை நிரூபிப்பதற்கு ஒரு வசன ஆதாரம்கொடு பக்கம் 154
I நாளாகமம் 29:12

2.விசுவாசிகள் தங்களுடைய ஐசுவரியங்களிலிருந்து தங்கள் மத்தியிலிருந்த ஏழைகளுக்குக் கொடுத்து உதவினர் என்று வேதாகமத்தில் நாம் எங்கு வாசிக்கிறோம்? பக்கம் 157
அப்போஸ்தலர் 2:44,45

3.நீங்கள் ஒருவருக்கும் இடுக்கண் செய்யாமலும் பொய்யாய் குற்றஞ்சாட்டாமலும், உங்கள் சம்பளமே போதுமென்று இருங்கள் என்று கூறியது யார்? பக்கம் 149
யோவான்ஸ்நானன் (லூக்கா 3:14)

4.அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று வேதம் யாரைக் குறிப்பிடுகிறது? பக்கம் 143
ஐசுவரியத்தின்மேல அடங்காத ஆசை கொண்டிருப்பர்கள் (I தீமோ 6:10)

5.லஞ்சம் வாங்குவதற்கான அடிப்படைக் காரணம் என்ன? பக்கம் 149
பேராசை

6.'கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்யுள்ளவனாயிருக்கிறான்' என்றது யார்? பக்கம் 156
இயேசு (லூக்கா 16:10-12

7.'என் பிள்ளைகளோ, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியைகளினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்' என்று எந்த அப்போஸ்தலன் எழுதியுள்ளார்? பக்கம் 157
யோவான் (I யோவான் 3:17,18)

8.எந்த பட்டணத்திலிருந்த எடுக்கப்படும் சகல வெள்ளியும் பொன்னும் வெண்கலத்தினாலும் இரும்பினாலும் செய்யப்பட்ட பாத்திரங்களும் கர்த்தரின் பொக்கிஷத்தில் சேரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது? பக்கம் 155
எரிகோ (யோசுவா 6:19)

9.எல்லா தீமைக்கும் வேராயிருப்பது எது? பக்கம் 143
பணஆசை (I தீமோ 6:10)

10.பரிசுத்தவான்களைப் பூமிக்குரிய சிந்தையுள்ளவர்களாக மாற்றும்படி அவர்கள் மேல் சாத்தான் பிரயோகிக்கும் அபாயகரமான வசீகர சக்திகளுள் ஒன்று எது?
ஐசவரியம் பக்கம் 142

11.பரிசுத்தவான்களின் மனதையும் இருதயத்தையும் பாதித்து. அவர்கள் தேவனை விட்டு விலகி பரலோகத்திற்குத் தங்கள் முதுகைக் காட்டும்படி செய்கிறது எது?
ஐசுவரியம்

12.எது பெருகும்போது ஜனங்கள் பரலோகத்தை மறந்து பரலோக ஐசுவரியங்களையும் சுதந்தரத்தையும் அசட்டை பண்ணுகிறார்கள்?
ஐசுவரியங்கள் பக்கம் 142

13.ஒரு நபரை விசுவாசத்தைவிட்டு வழுவிப்போகும்படி செய்கிறது எது?
பண ஆசை (I தீமோ 6:10) பக்கம் 147

14.பணஆசையிலிருந்து உண்டாகும தீயபழக்கங்கள் யாவை?
கடன் வாங்கி அதில் சிக்கிக்கொள்ளுதல், லஞ்சம் வாங்குதல், வரதட்சணையை அதிகாரமாகக் கேட்டு வாங்குதல், சூதாட்டம் பக்கம் 147

15.பூமியும் அதின் நிறைவும் .. கர்த்தருடையவைகள்' வசன ஆதாரம் தருக
ஆகாய் 2:8

16.ஐசுவரியமும் கனமும் உம்மாலே வருகிறது என்ற ராஜா யார்?
தாவீது

17.சகல வெள்ளியும் பொன்னும் வெண்கலத்தினாலும் இரும்பினாலும் செய்யப்பட்ட பாத்திரங்களும், கர்த்தருக்கு பரிசுத்தமானவைகள் வசன ஆதாரம் தருக
யோசுவா 6:19

18.கர்த்தருக்கு பரிசுத்தமானவைகளாயிருந்த இவை ஆகானிடம் ஏன் சாபமாக மாறின? மற்றும் இந்த சாபம் எப்படி நீக்கப்பட்டது?
தேவனை சேர்நதவைகளாகிய இவற்றை ஆகான் இச்சித்து எடுத்து தன் கூடாரத்தில் மறைத்து வைத்தபடியினால் சாபமாயின. அவனும் அவனுடைய குடும்பத்தாரும் கல்லெறிந்து கொல்லப்பட்டபோது சாபம் நீக்கப்பட்டது. போசுவா 7:21, 24-26

19.ஐசுவரியங்கள் யாருடைய கைகளில் ஆசீர்வாதமாக இருக்கின்றன?
தேவனுடைய ஜனங்களாகிய நீதிமான்களுடைய கைகளில். கொள்ளைக்காரர் தேவனுடைய ராஜ்ய்த்தைச் சுதந்தரிப்பதில்லை

20.சூதாடுதல் எவ்வெப்பாவங்களோடு சேர்த்துக் குறிப்பிடப்பட்டுள்ளது? பக்கம் 151
வேசித்தனம், விக்கிரகராதனை, விபசாரம், பொருளாசை, திருடுதல், குடிவெறி கொள்ளையிடுதல் போன்ற கொடுரமான பாவங்களோடு குறிப்பிடபட்டுள்ளது.

21.உங்களில் அவனவன் தன்தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து,மற்றவர்களை வஞ்சித்து அதன் மூலம் ஆதாயம் பெற்றுகொள்கிறவர்களுக்குக் கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவராயிருக்கிறார் என்று அப்.பவுல் எந்த நிருபத்தில் எழுதுகிறார்?
I தெசலோனிக்கேயர் (I தெச 4:4,5)

22.வஞ்சனையினால் வந்த போஜனம் மனுஷனுக்கு இன்பமாயிருக்கும்; பின்போ அவனுடைய வாய் பருக்கைக் கற்களால் நிரப்பப்படும். என்ற ஞானி யார்?
சாலொமோன் நீதி 20:17 பக்கம் 153

23.விசுவாத்தினாலே நீதிமான் பிழைப்பான் வசன ஆதாரம் தருக பக்கம் 148
ரோமர் 1:17

24.நாம் ஏன் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கடன் வாங்குகிறோம்?
நம்முடைய பேராசைகளைச் சந்திக்கும் படியாகவே

25.Warning of Debt Crisis' என்று அழைக்கப்படும் புத்தகத்தை எழுதியது யார்?
ராபரட் போரண்ட்

26.தேவபிள்ளைகள் எப்போது தேவகித்த்திலிருந்து வழி விலகிச் செல்லுகிறார்கள்?
பணத்தைக் கடனாக வாங்கும்போது.

PART D

1.பூமிக்குரிய ஆசீர்வாதங்களினால் உண்டாகும் தீமைகளைக் குறித்து வேதவசனத்திலிருந்து நீ கற்றறிந்தவற்றில் எவையேனும் 15 குறிப்புகளை எழுதுக
Pg 143-147

2.பண ஆசையினால் உண்டாகும் தீய பழக்கங்கள் யாவை? அவற்றில் மூன்றினை விளக்கி எழுதுக
Pg 147-154

3.சூதாட்டத்திலிருந்து விலகி ஓட வேண்டுமென்பதை அவற்றோடு இணைந்து காணப்படும் தீமையான காரியங்களைக் குறிப்பிட்டு விவரி
pg 150-154

4.பூமிக்குரிய ஐசுவரியங்களால் உண்டாகும் தீமைகளில் எவையேனும் பத்தினை எழுது.
Pg 143-144

PART E

1.எல்லா ஐசுவரியமும் கனமும் தேவனிடத்திலிருந்து வருகிறது என்கிறதற்கு வசன ஆதாரம் தருக.
வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என்னுடையது என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (ஆகாய் 2:8) இவ்விதமாக தாவீது ராஜா தான் செய்த ஜெபத்தில் 'ஐசுவரியமும் கனமும் உம்மாலே வருகிறது; தேவரீர் எல்லாவற்றையும் ஆளுகிறவர்; உம்முடைய கரத்திலே சத்துவமும் வல்லமையும் உண்டு; எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் உம்முடைய கரத்தினால் ஆகும்.(I நாளா 29:12) என்று உறுதியாய்க் கூறுகிறான் எனவே எல்லா ஐசுவரியமும் தேவனிடத்திலிருந்து வருகிறதென்பது தெளிவாகிறது.

2.முதலாம் நாற்றாண்டிலிருந்த விசுவாசிகள் தங்களுடைய ஐசுவரியங்களிலிருந்து தங்கள் மத்தியிலிருந்த ஏழைகளுக்கு கொடுத்து உதவின சந்தர்பத்தை எழுதுக

பூமிக்குரிய ஐசுவரியங்களைத் தேவன் யாரிடம் நம்பி ஒப்புவித்திருக்கிறாரோ, அவர்கள் சபையிலுள்ள எழைகளைப் பராமரிக்க வேண்டும். முதலாம் நாற்றாண்டிலிருந்த விசுவாசிகள் தங்களுடைய ஐசுவரியங்களிலிருந்து தங்கள் மத்தியிலிருந்த ஏழைகளுக்கு கொடுத்து உதவினர். விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள்.

காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்துகொடுத்தார்கள். (அப். 2:44,45)

ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி? என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம். (I யோவான் 3:17,18)

3.தேவபிள்ளைகள் கடன் வாங்கி அதில் சிக்குண்டுபோவது தேவனுடைய திட்டத்திற்குட்பட்டதே அல்ல பக்கம் 148

நம்முடைய தேவைகளைச் சந்திக்கும்படி அல்ல, நம்முடைய பேராசைகளைச் சந்திக்கும்படி பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கடன் வாங்குகிறோம். தேவபிள்ளைகளில் பலரும் பெரிய வீட்டைக் கட்டுதல், விலைமதிப்புள்ள கார் வாங்குதல் போன்ற காரியங்களுக்காகப் பணத்தைக் கடனாக வாங்கும்போது, தாங்கள தேவசித்தத்திலிருந்து வழிவிலகிச் ̇செல்லுகிறார்கள் என்பதை உணருகிறதில்லை. ‘விசுவாசத்தினாலே நீதிமான் ̇பிழைப்பான் (ரோமர் 1:17) தேவன் நமக்குத் தந்திருக்ககும் வருவாய்க்குட்பட்ட ஜிவியம் செய்வதில் மகப்பெரிய ஆசீர்வாதமுண்டு. அவர் ஆகாயத்துப் பறவைகளுக்காகவும் காட்டுப் புஷ்பங்களுக்காகவும் கவலைப்படுவாராயின் எவ்வளவு அதிகமாக நம்பேரில் கரிசனையுள்ளவராயிருந்து. நம்மைப் பொறுப்பெடுத்துப் பராமரிப்பார். அவர் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்.

4.இலஞ்சம் வாங்குவதற்கான அடிப்படையான காரணம் பேராசையே ஆகும் என்பதை விளக்குக

பக்கம் 148, 149

பரிதானம் என்பது ஆவிக்குரிய பிரகாரமாகவும் சன்மார்க்க ரீதியாகவும், சட்டப்பூர்வமாகவும் தவறான விதத்தில் ஒருவன் பெறும் கைக்கூலியாகும். தான் பரிதானம் ̇வாங்குவதற்கு ஒரு நபர், எனக்கு மிகக் குறைவான ஊதியமே கிடைக்கிறது. விலைவாசி மிகவும் அதிகமாயிருக்கிறது. சக ஊழியரின் வற்புறுத்தலால் அதிகமாக அழுந்தப்படுகிறேன். மற்றவர்களைப்போல லஞ்சம் வாங்காவிட்டால் வேலை ஸ்தலத்தில் தனிமையாக்கப்படுதலை நான் சந்திக்க வேண்டியிருக்கிறது வாடிக்கையாளர்கள் லஞ்சம் வாங்கும்படி என்னை நயங்காட்டி வசீகரிக்கிறார்கள் என்பன போன்ற பல சாக்குப்போக்குகளை உடையவனாயிருப்பினும் அவன் இலங்சம் வாங்குவதற்கான அடிப்படையான காரணம் பேராசையே ஆகும். ஒரு தேவமனிதன் இதை விட்டு ஓட வேண்டுமென எதிப்பார்க்கப்படுதிறான். பரிதானம் என்பது நேர்மையற்ற ‘ஓர் ஆதாயமாகும். அது பலாத்காரமாய்ப் பணம் பறிப்பதற்குச் சமமானது. ‘நீங்கள் ஒருவரையும் அச்சுறுத்திப் ̇பணம் பறிக்காமல், உங்கள் சம்பளமே போதுமென்று இருங்கள் (லூக்கா 3:14) தேவன் பரிதானம் வாங்குதலைக் கடுமையான பாவமாகக் கணிக்கிறார். இலஞ்சம் வாங்குகிறவர்கள் மேல் அவர் கண்டிப்பான நியாயத் தீரப்புகளைக் கூறியிருக்கிறார்.

5.’விவாகமானது தேவனுக்கு முன்பாகக் கனமுள்ளதாயிருக்க வேண்டுமாயின், அது பண ஆசை அற்றதாயிருக்க வேண்டும் பக்கம் 150

விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார். நீங்கள் பணஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று

எண்ணுங்கள்; (எபி 13:4,5) இவ்வசனத்தின்படி 'விவாகமானது தேவனுக்கு முன்பாகக் கனமுள்ளதாயிருக்க வேண்டுமாயின், அது பண ஆசை அற்றதாயிருக்க வேண்டும்

6.பெற்றோர்கள் கங்கள் குமாரரைப் பணத்திற்கு விற்கிறார்கள் விவாகம் சம்பந்தமான விஷயங்களில், பண ஆசையின் அடிப்படையிலான மிக மோசமான பழக்கம் வரதட்சிணை முறையையாகும். உண்மையில ˙வரதட்சணை என்பது பெற்றோர் தங்கள் குமாரரைப் பணத்திற்கு விற்பதாயிருக்கிறது. யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்பைப் பணத்திற்கு விற்றனர். யூதாஸ்காரியோத்து கர்த்தராகிய இயேசுவைப் பணத்திற்கு விற்றுப்போட்டான். பெற்றோர்கள் இப்போது தங்கள் குமாரரைப் பணத்திற்கு விற்கிறார்கள். யோசேப்பின் சகோதரர்களும் யூதாஸும் கடுமையான சாபத்திற்குட்பட்டதுபோல வரதட்சணையை அடிப்படையாகக் கொண்ட விவாகங்கள் பெரும்பாலும் பயங்கரமான சாபங்களுக்குள்ளாகின்றன. சிலருடைய விஷயங்களில் வியாதிகளும் துக்ககரமான சம்பவங்களும் குடும்பங்களைவிட்டு ஒருபோதும் நீங்குவதே இல்லை. பெரும்பாலும் அப்படிப்பட்ட குடும்பங்கள் தாங்கள் இவ்விதம் சாபத்திற்குட்பட்டிருப்பதை உணராதிருப்பது அதினும் மிக அதிகமாய் வருந்தத்தக்க விஷயமாகும். பொருளாசைகளில் பழகின இருதயத்தையுடைய சாபத்தின் பிள்ளைகள். செம்மையான வழியைவிட்டுத் தப்பி நடந்து, அநீதத்தின் கூலியை விரும்பினவர்கள் (II பேதுரு 2:14,15)) என்னும் வேதவசனம் மிக உண்மையானது.

PART F

1.சபையில் தேவன் தமக்கென்று உக்கிராணக்காரரை வைத்திருக்கிறார் என்பதை விளக்குக பக்கம் 155-157

ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறதற்கான பெலனை ஜனங்களுக்கும் கொடுக்கிறவர் தேவனே (உபா 8:18) நம்முடைய ஊழியத்தின் எல்லையை விசாலமாக்குவதற்காக, அவர்கள் தங்கள் ஐசுவரியங்களை உபயோகிக்க வேண்டுமென்று தேவன் அவர்களிடம் ஐசுவரியங்களை ஒப்புவிக்கிறார்.

தாவீது உலகத்தின் எல்லா ஐசுவரியங்களாலும் ஆசீர்வதிக்கப்பட்டான். ஆனால் தேவனையும் அவருடைய ஊழியத்தையும் அவன் நேசித்தபடியால் அவன் ஒரு பொருளாசைக்காரனாயிருக்கவில்லை. தேவன் நமக்காக ஒரு ஆலயம் கட்டப்படுவதற்காகவே அவனுடைய ஐசுவரியத்தைப் பெருகப்பண்ணினார் என்பதை அவன் உணர்ந்தான். ஆகையால், அவன் தன்னுடைய ஆஸ்தியையெல்லாம் சேகரித்து வைத்து. அவற்றைத் தன்னுடைய குமாரனாகிய சாலொமோனிடம் ஒப்புவித்து, 'நான் என்னாலே இயன்ற மட்டும் என் தேவனுடைய ஆலயத்துக்கென்று.. கொடுக்கிறேன்' (I நாளா 292,3) என்று சொன்னான்.

தேவன் ஐசுவரியத்தை யாரிடம் ஒப்புவித்திருக்கிறாரோ, அவர்கள் தங்களுடைய இருதயத்தை அதின் மேல் வைக்கக் கூடாது (சங் 62:10) ஆனால் ˙அந்த ஐசுவரியங்களைத் தேவனுடைய ஊழியத்திற்காக உண்மையுடன் உபயோகிக்கிறவர்களாக அவர்கள் தங்களை நிரூபிக்கவேண்டும். கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான். கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான். அநீதியான உலகப்பொருளைப்பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால், யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்?

வேறொருவனுடைய காரியத்தில் நீங்கள் உண்மையுள்ளவர்களாயிராவிட்டால், உங்களுக்கு யாதொன்றைச் சொந்தமாகக் கொடுப்பவர் யார்?

(லூக்கா 16:10-12) என்று இயேசு கூறியுள்ளார். தேவபிள்ளைகள் தங்கள் தசமபாகங்களிலும் காணிக்கைளிலும் சபையின் பெரும் செலவினங்களிலும் அதின் தேவைகளைச் சந்திப்பதிலும் உண்மையுள்ளவர்களாயிராவிட்டால்ஈ, தேவனால் அதற்கு மேல் அவர்களை உலகப்பிரகாரமாகவோ ஆவிக்குரிய பிரகாரமாகவே ஆசிர்வதிக்க முடியாத பரலோகத்தின் உண்மையான ஐசுவரியங்களைப் பற்றிய தரிசனத்தை அவர்கள் இழந்து போவார்கள் அவர்களுடைய பணம் அவர்களுக்கு சாபமாக மாறிவிடும். விசுவாசிகள் தாராளமாய்க் கொடுக்கிறவர்களாயிருக்க வேண்டும் என்று அவர்களுக்கு கட்டளையிடும்படி அப்.பவுல் தீமோத்தேயுவுக்கும் போதித்தார் (I தீமோ 6:18)

2.உபாகமம் 15:7-11 இவ்வசனங்களின்படி இஸ்ரவேல் புத்திரருக்கு போதிக்கும்படி தேவன் மோசேக்கு கட்டளையிட்டது யாத? பக்கம் 158

உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தின் எந்த வாசலிலும் உன் சகோதரரில் எளியவனான ஒருவன் இருந்தால், எளியவனாகிய உன் சகோதரனுக்கு உன் இருதயத்தை நீ கடினமாக்காமலும், உன் கையை மூடாமலும், அவனுக்கு உன் கையைத் தாராளமாய்த் திறந்து, அவனுடைய அவசரத்தினிமித்தம் அவனுக்குத் தேவையானதைக் கடன்கொடுப்பாயாக.

விடுதலை வருஷமாகிய ஏழாம் வருஷம் கிட்டியிருக்கிறதென்று சொல்லி, உன் இருதயத்திலே பொல்லாத நினைவு கொண்டு, உன் ஏழைச் சகோதரனுக்குக் கொடாமல் மறுத்து, அவன்மேல் வன்கண் வைக்காதபடிக்கும், அவன் உன்னைக் குறித்துக் கர்த்தரை நோக்கி அபயமிடாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு; அப்படிச் செய்வாயானால் அது உனக்குப் பாவமாயிருக்கும். அவனுக்குத் தாராளமாய்க் கொடுப்பாயாக; அவனுக்குக் கொடுக்கும்போது உன் இருதயம் விசனப்படாதிருப்பதாக; அதினிமித்தமாக உன் தேவனாகிய கர்த்தர் உன்னுடைய எல்லாக் கிரியைகளிலும், நீ கையிட்டுச் செய்யும் எல்லாக் காரியங்களிலும் உன்னை ஆசீர்வதிப்பார். தேசத்திலே எளியவர்கள் இல்லாதிருப்பதில்லை; ஆகையால் உன் தேசத்திலே சிறுமைப்பட்டவனும் எளியவனுமாகிய உன் சகோதரனுக்கு உன் கையைத் தாராளமாய்த் திறக்கவேண்டும் (உபா 15:7-11)

3.தசமபாகமும் காணிக்கைகளும் தேவனுக்கு உரியவை என்பதைப் பற்றி சிறுகுறிப்பு வரைக பக்கம் 158,159

சிலர் தசமபாகம் செலுத்தும்பழக்கம் பழைய ஏற்பாட்டின் காலத்திற்கே உரியதென்று சாக்குபோக்கு சொல்லி தங்களைத் தாங்களே தேற்றிக்கொள்கிறார்கள் ஆனால் கர்த்ராகிய இயேசு அப்படிச் ˙சொல்லவில்லை. பரிசேயரைக் கடிந்துகொள்ளும்போது அவர், ‘நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தையத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள், இவைகளையும் செய்யவேண்டும், அவைகளையும் விடாதிருக்கவேண்டுமே. (மத் 23:23) உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்; உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும். (நீதி 3:9,10)

தசமபாகமும் காணிக்கைகளும் செலுத்துதல் ˙விசுவாசிகள் தேவனுக்கு உண்மையாக இருத்தலும் இணைந்த ஒரு கிரியாகும். நும்மடைய ஐசுவரியங்களினால் நாம் தேவனை கனம்பண்ணும்போது, அவர் நம்மைச் செழித்தோங்கச் செய்கிறார். முதலாவதாக தேவன் என்னை ஐசுவரியவானாக்கட்டும் பின்பு நான் என்னுடைய காணிக்கைகளையும் தசமபாகத்தையும் செலுத்துவேன் என்று சிலர் கூறுகிறார். அப்படிப்பட்ட எண்ணம் விதைக்காத நிலத்தில் அறுவடை செய்ய முயற்சிப்பதைப் போன்று நியாயமற்றதாயிருக்கிறது. முதலில் நாம் விதைத்து, பிறகு ஏற்ற காலத்தில் அறுவடை செய்கிறோம். தேவனுக்கு நம்முடைய தசமபாகங்களையும் காணிக்கைகளையும் கொடுப்பதற்கு ஒரு விவசாயிலுள்ளதை போன்ற விசுவாசம் நமக்கு அவசியமாயிருக்கிறது. கர்த்தராகிய இயேசுவும் ‘கொடுங்கள் ˙அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்’ (லூக்கா 6: 38) என்று கூறியிருக்கிறார்.

4.பூமிக்குரிய ஐசுவரியங்களில் உண்மையற்றவர்களாயிருப்பவர்களின் ஐசுவரியம் உபத்திரவ காலத்தில் என்னவாகும் பக்கம் 159,160

பூமிக்குரிய ஐசுவரியங்களில் உண்மையற்றவர்களாயிருந்து, அந்த ஐசுவரியங்களினால் தவறான வழிநடத்தப்பட்டவர்கள் கர்த்தருடைய இரகசிய வருகைக்காக ஒரு போதும் ஆயத்தமுள்ளவர்களாயிருக்கமாட்டார்கள். உபத்திரவ காலத்தில் அவர்கள் தங்களுடைய ஐசுவரியத்தால் ஆறுதலடையவுமாட்டார்கள் கர்த்தருடைய உக்கிரத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களைத் தப்புவிக்கமாட்டாது; அவருடைய எரிச்சலின் அக்கினியினால் தேசமெல்லாம் அழியும்; தேசத்தின் குடிகளையெல்லாம் சடிதியாய் நிர்மூலம்பண்ணுவார் (செப்பனியா 1:18) சீக்கிரத்தில் ஒரு காலம் வருகிறது. அப்போது தங்கள் வெள்ளியைத் தெருக்களில் எறிந்துவிடுவார்கள்; அவர்களுடைய பொன் வேண்டாவெறுப்பாயிருக்கும்; கர்த்தருடைய சினத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களை விடுவிக்கமாட்டாது; அவர்கள் அதினால் தங்கள் ஆத்துமாக்களைத்

திருப்தியாக்குவதும் இல்லை, தங்கள் வயிறுகளை நிரப்புவதும் இல்லை; அவர்கள் அக்கிரமமே அவர்களுக்கு இடறலாயிருந்தது (எசே 7:19)

6.பண ஆசையிலிருந்து உண்டாகும் திய பழக்கங்கள் யாவை? ஏதேனும் ஒன்று பற்றி விளக்குக பக்கம் 147-154
கடன்வாங்கி அதில் சிக்கிக்கொள்ளுதல் பக்கம் 148

இலஞ்சம் வாங்குதல் பக்கம் 148,149

வரதட்சிணையை அதிகாரமாய்க் கேட்டு வாங்குதல் பக்கம் 149,150

சூதாட்டம் பக்கம் 150-153

பாடம் 15
விவாகம்

PART B

1.'நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னை பரிசுத்தம்பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன்' என்று யாரைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது?
எரேமியா (எரே 1:5) பக்கம் 174

2.'தன் தாயின் விற்றிலிருக்கும்போதெ பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான்' என்று யாரைப் பற்றி சொல்லப்பட்டது? பக்கம் 174
யோவான்ஸ்நானன் (லூக்கா 1:15)

3.வழியிலே அடக்கம் பண்ணப்பட்டது யார்? பக்கம் 169
ராகேல் (ஆதி 35:19)

4. லேயாள் எங்கு அடக்கம் பண்ணப்பட்டான்? பக்கம் 169
ஆபிரகாமின் கல்லறையில் (ஆதி 49:31)

5.யாருடைய மாம்ச அன்புக்குட்பட்ட செயல்கள் சோகத்திலேயே முடிவடைந்தன? பக்கம் 169
சிம்சோன், அம்னோன் (நியா 16:4,21 II சாமு 13:4,28,29)

6.சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் உக்கமாய் அன்புகூருங்கள்'' என்ற அப்போஸ்தலன் யார்?
பேதுரு (I பேதுரு 1:22) பக்கம் 169

7.காதல் திருமணங்கள் பெரும்பாலும் பெற்றோருக்கு வேதனையையே கொண்டுவருகின்றன என்பதற்கு ஒரு வசன ஆதாரம் கொடு ஆதி 27:46 பக்கம் 170

8.விவாகமில்லாமல் தமக்கு ஊழியஞ்செய்யும்படி கர்த்தர் யாரையாகிலும் அழைத்திருப்பாராயின், அவன் என்ன செய்யவேண்டும்? பக்கம் 170,171
தான் அழைக்கப்பட்ட நிலைமையிலேயே நிலைத்திருக்கக்கடவன். I கொரி 7:20

9.யாருடைய விவாகத்தைக் கறித்து 'இந்த காரியம் கர்த்தரால் வந்தது'' என்று நாம் வாசிக்கிறோம்? ஈசாக்குக்கம் ரெபெக்காளுக்கும் இடையே நடந்த விவாகம் (ஆதி 24:50)
பக்கம் 171

10.ஒழுக்கநெறியற்ற செயல்களைச் செய்யும்படி தங்களை ஒப்புக்கொடுப்பவர்கள் தங்கள் ஜீவியங்களில் எதை வரவழைக்கிறார்கள் பக்கம் 172
பிசாசின் ஆவிகள்

11.பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம் என்ற வேதபகுதி கருச்சதைத்தலை குறித்து வெளிப்படுத்துவது யாது? சங் 127:4
பிள்ளைகள் பெற்றோரின் சுதந்திரமாக அல்லது பிரதிபலனாக இருப்பார்களாயின் கருச்சிதைத்தல் தேவன் அருளிய பலனை அழிப்பதாயிருக்கும்.

13.முதன்முதலாக நடத்தப்பட்ட இந்தக் காதல் திருமணங்களின் விளைவு என்ன?
முழு உலகமும் ஜலப்பிரளயத்தினால் நியாயத்தீரப்புக்குள்ளானது (ஆதி 6:2)

14.காதல் திருமணம் என்பதின் பொருள் என்ன?
எழுச்சியின் அடிப்படையிலுள்ள உறவினால் அல்லது தவறான காதல் உணர்ச்சி முனைப்புடைய உறவினால் செய்தகொள்ளப்படும் திருமணம்.

15.தேவனால் ஒழுங்கு செய்யப்பட்ட விவாகம் என்பது யாது?
தேவசித்தத்தின்படியே செய்யப்படும் விவாகமாகும்

16.'விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளது வசன ஆதாரம் தருக
எபிரேயர் 13:4

17.விவாகம் கனமுள்ளதாயிருக்க வேண்டுமாயின் அதற்கான காரணம் என்ன?
விவாகத்தில் இணைகிற தம்பதியர் கங்கள் விவாகத்திற்கு முன்பு தங்களைப் பரிசுத்தத்தில் பாதுகாத்திருக்க வேண்டும்.

18.வேதாகமத்தில் ஈசாக்குக்கும் ரெபெக்காளுக்கும் இடையே நடந்த விவாகத்திலிருந்து நாம் விளங்கிக் கொள்வது என்ன?
நீ விவாகம் பண்ணுகிற பெண்ணை நேசி

PART D

1.தேவன் விவாகத்தை ஏற்படுத்தினபோத அவருடைய மனதில் விவாகரத்தும் மறுமணமும் இருக்கவில்லை பக்கம் 185-186
தேவன் மனதில் விவாகரத்து .. இருக்கவில்லை. அது விழுந்துபோன மனிதனுடைய கண்டுபிடிப்பாகும் அவர்களுடைய இருதயக் கடினத்தினிமித்தம் (மத் 19:8) மோசேயின் நியாயப்பிரமாணத்தில் அது அனுமதிக்கப்பட்டு நுழைந்து விட்டது. தேவன் ஏற்படுத்திய விவாகமானது அதனுடன் விவாகரத்து இணைக்கப்பட்டதான ஒன்றல்ல. விவாகமான தம்பதிகள்

‘மரணபரியந்தம்’ ஒரு பரஸ்பர உடன்படிக்கை செய்து கொள்ளுகிறார்கள் (ரோமர் 7:3) ஆகையால் அவர்கள் இருவரும் உயிரோடிருக்கும் வரையில் ஒருவரையொருவர் விவாகரத்து செய்யக்கூடாது. தேவன் விவாகரத்து செய்தலை வெறுக்கிறார். தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கரத்தர் சொல்லுகிறார். (மல் 2:16) ஆகவே விவாரத்து தேவனிடத்திலிருந்து வந்ததல்ல. தேவனே (அவர்களை) இணைத்தார் என்றும் மனுஷன்தான் (அவர்களைப்) பிரிக்கிறான் என்றும் ̇அவருடைய வார்த்தை சொல்லுகிறது (மத் 19:6) ஆகையால் ஒருவன் தன் மனைவியைத் தள்ளி விட்டால் அவன் பாவஞ்செய்கிறான்.

2.நீ நேசிக்கிற பெண்ணை நீ விவாகம் செய்து கொள்வதல்ல நீ விவாகம்பண்ணுகிற பெண்ணை நீ நேசிக்கவேண்டும். புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்புகூறுங்கள். (எபே 5:25) ஈசாக்கு ரெபெக்காளை நேசித்தான். அவள் ̇அவனுக்கு மனைவியானாள் என்று அல்ல ஈசாக்கு ரெபெக்காளைத் தனக்கு மனைவியாக்கிக்கொண்டு அவளை நேசித்தான்’ என்றே கூறப்பட்டுள்ளது (ஆதி 24:67)

PART E

1.ஆவிக்குரிய சிந்தையுடைய விவாகமான தம்பதிகளுக்கிடையே இருக்கவேண்டிய ஆவிக்குரிய வளர்ச்சியை பற்றி அப்.பவுல் கூறும் மூன்று நிலைகள் யாவை? பக்கம் 176,177

i.’ ஆகிலும் வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்தப் புருஷனையும் உடையவர்களாயிருக்கவேண்டும். புருஷன் தன் மனைவிக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யக்கடவன்; அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யக்கடவள்.

மனைவியானவள் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, புருஷனே அதற்கு அதிகாரி; அப்படியே புருஷனும் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, மனைவியே அதற்கு அதிகாரி (I கொரி 7:2-4)

ii. உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிரிந்திருக்கவேண்டுமென்று சம்மதித்தாலன்றி, ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள்; உங்களுக்கு விரதத்துவம் இல்லாமையால் சாத்தான் உங்களைத் தூண்டிவிடாதபடிக்கு, மறுபடியும் கூடிவாழுங்கள்.(I கொரி 7:5)

iii. இனிவரும் காலம் குறுகினதானபடியால், மனைவிகளுள்ளவர்கள் மனைவிகளில்லாதவர்கள்போலவும், அழுகிறவர்கள் அழாதவர்கள்போலவும், சந்தோஷப்படுகிறவர்கள் சந்தோஷப்படாதவர்கள்போலவும், கொள்ளுகிறவர்கள் கொள்ளாதவர்கள்போலவும், இவ்வுலகத்தை அனுபவிக்கிறவர்கள் அதைத் தகாதவிதமாய் அனுபவியாதவர்கள்போலவும் இருக்கவேண்டும்; இவ்வுலகத்தின் வேஷம் கடந்துபோகிறதே.

PART F

1.மாம்ச இச்சை சம்பந்தமான பாவங்களை ஜெயிப்பதற்காக நாம் ஆரம்பத்திலேயே செய்யவேண்டிய காரியங்களில் எவையேனும் ஐந்தினை எழுதுக பக்கம் 179,180

i.உங்களுடைய உண்மைப்பற்று, அன்பு இவற்றின் முதலிடத்தைத் தேவனுக்குக் கொடுங்கள். தேவனே உங்கள் ராஜாவும் கர்த்தரும், எஜமானரும், பிதாவுமாயிருப்பாராக. மாம்ச சம்பந்தமான பாலுணர்வுகள் அவருக்குரிய இடத்தை எடுத்துக்கொள்ள வேண்டாம். அது உங்கள் எஜமானல்ல மாறாக அது உங்கள் அடிமைமட்டுமே. தேவன் உங்களுக்க எஜமானராயிருந்தால், அவர் உங்களை அதற்கு எஜமான்களாக்குகிறார். (மல் 1:6. சுங் 16:8, உபா 6:5, மத் 10:37)

ii.தேவனுடைய மகத்துவத்தைக் கற்றுக்கொள்வதற்கும், அவரைத் துதிப்பதற்கும் நேரம் எடுத்துக்கொள்ளுங்கள். தேவன் உங்களுக்கு செய்திருக்கிற எல்லாவற்றிற்காகவும் அவருடைய வசனத்தில் அவர் உங்களுக்கு செய்வதாக வாக்குப் பண்ணியிருக்கிற எல்லாவற்றிற்காகவும் அவரை ஸ்தோத்தரியுங்கள். உங்கள் இருதயத்தையும் மனதையும் ̇தேவனுடைய

வாரத்தையினால் நிரப்பி கொள்ளும்படி உறுதியாயத் தீரமானியுங்கள். இத் திர்மானத்தோடுகூட நீங்கள் எடுத்துவைக்கும் இந்த அடி உங்கள் கற்பனைகளிலிருந்தும் விருப்பங்களிலிருந்தும் மாம்ச இச்சை சம்பந்தமான காரியங்களை விலக்கி, உங்களுடைய சரீரத்தில் 'சமாதானத்தையும் இளைப்பாறுதலையும் ஒழுங்கையும் கொண்டுவரும் (ரோமர் 1:21, 24 கொலோ 3:16 சங் 119:9 II பேதுரு 1:4)

iii.உங்களுக்குத்தானே நீங்கள் உண்மையுள்வர்களாயிருங்கள்.
உங்கள் பெவீனம் எங்கே தங்கியிருக்கிறது என்பதை கண்டுபிடித்து, அதை ஜெயிக்கும்படியான பெலனை பெற்றுக்கொள்ளுங்கள். இல்லையெனில் அது உங்களை மேற்கொண்டுவிடும். அந்த பெலவீனத்திற்குக் காரணமான ஏது – ஒரு நபராகவோ, ஒரு பொருளாகவோ, ஒரு புத்தகமாகவோ, இவை போன்ற மற்றொன்றாகவோ இருக்கக்கூடும். அவற்றினின்று விடுவிக்கப்படவேண்டும் என்று நீங்கள் திர்மானித்திருப்பீர்களாயின், தேவன் உங்க்ளுக்கு நிச்சயமாகவே பெலனும் கிருபையும் அளிப்பார். தேவன் அருளிச்செய்யும் அக்கிருபையினாலும் பெலத்தினாலும் அவற்றைப் புறம்பே தள்ளிப் போடும்வரை உறுதியாயத் தீர்மானியுங்கள் (பிலி 4:13 II தீமோ 4:17,18 சங் 18:2,17)

iv.பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுங்கள்
நீங்கள் பரிசுத்த ஆவியானவருடைய ஐக்கியம் வல்லமை, சமூகம் வழிநடத்துதல், ஆறுதல் ஆகிய அனுபவங்களைப் பெற்று அவைகளில் பழகிக்கொள்ளுங்கள். அவர் உங்களைச் சகல சத்தியத்திற்குள்ளும் நடத்த விரும்பும் ஒரு தெய்விக ஆள்த்துவமாயிருக்கிறார். உங்களுக்காக அவர் யுத்தம் செய்து, சத்துருவின் பலமான தாக்குதல்களிலிருந்து உங்களை விடுவிக்கிறார். சத்துருவை எதிர்த்து அவனைக் கீழ்ப்படுத்துவதற்கான வல்லமையை அவர் உங்களுக்கு தருகிறார். பரிசுத்த ஆவியின் வல்லமையை அறிந்துகொள்வதற்காக அடிக்கடி ரோமர 8 ம் அதிகாரத்தை வாசித்துத் தியானிக்கவும் (ஏசாயா 59:19 எபே 6:10,11 கலா 5:16 ரோமர் 8:11,13)

v.ஜெயங்கிடைக்கும்வரை தேவனை நோக்கிக் கூப்பிட கற்றுக்கொள்ளுங்கள்
பூர்வ நாட்களிலிருந்த பரிசுத்தவான்களைப்போல தேவன் உங்களை விடுவிப்பதற்காக இறங்கி வருமட்டும் ஜெபம் செய்யுங்கள். சங்கீத புஸ்தகத்தில் தாவீது தேவனை நோக்கிக் கூப்பிடுவதைப்போல உங்கள் இருதயத்தை தேவ சமூகத்தில் ஊற்றிவிடுங்கள். முற்றிலும் விடுதலை பெறுமட்டும் ஊக்கமாகவும் தொடர்ச்சியாகவும் ஜெபம் பண்ணிக்கொண்டிருப்பதே தேவனிடத்தில் விசுவாசமாயிருப்பதை வெளிப்படுத்தும் ஒரு அம்சமாகும் (சங் 56:9 சங் 20:6 சங் 34:6,17)

vi.உங்கள் முழு இருதயத்தோடும் அவருக்கு ஊழியஞ்செய்யுங்கள்
நீங்கள் ஆண்டவராகிய இயேசுவுக்குத் தேவையாயிருக்கிறீர்கள் ஏனென்றால், நீங்கள் அவருடைய சரீரத்தின் ஒரு அவயவமாயிருக்கிறீர்கள். உங்களுடைய சபைக்கும் தேவ ஊழியக்காரருக்கும் உங்களுடைய ஊழியம் தேவையாயிருக்கிறது. கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்வதற்காக நாம் நம்மைப் பிரதிஷ்டை செய்யும்போது பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நாம் மாம்சீகமான தளத்திலிருந்து ஆவிக்குரிய மண்டலத்துக்கு உயர்தப்படுகிறோம். பரிசுத்த ஆவியானவர் நம்மிலுள்ள சகல மாம்சத்துக்குரிய ஆசைகளின்மேலும் நமக்கு ஆளுகை தந்து, தம்முடைய ராஜ்யத்திற்காக நம்மை மிகுந்த பக்தி வைராக்கியமள்ளவர்களாக்குகிறார். நாம் கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்:தும்படியாகப் பிரயாசப்படுகிறோம். நாம் அவருடைய அன்பினால் நிறைந்து, எவ்வித இனனல்கள் மத்தியிலும் தேவனுடைய ராஜ்யத்திற்காகக் கிரியை செய்கிறோம் (லூக்கா 8:1-3 அப் 8:1-4 மத் 19:12 I கொரி 7:33,34)